


# தெரிந்தும் தெரியாத தமிழ்

வி. இ. குகநாதன்

# தெரிந்தும் தெரியாத தமிழ்

வி. இ. குகநாதன்

வெளியீடு
மக்கள் கலை பண்பாட்டுக் களம்

**தெரிந்தும் தெரியாத தமிழ்** ◆ கட்டுரைகள் ◆ ஆசிரியர்: வி. இ. குகநாதன் ◆ © வி. இ. குகநாதன் ◆ 128 பக்கங்கள் ◆ மக்கள் கலை பண்பாட்டுக் களம் வெளியீடு ◆ இரண்டாம் பதிப்பு அக்டோபர் 2020 ◆ மக்கள் கலை பண்பாட்டுக் களம், லண்டன் ◆

புத்தக வடிவமைப்பு: மேக்ஸிமஸ் டேனியல் நிக்சன்

**Therinthum Theriyatha Thamizh** ◆ Essays ◆ Kuganathan Ilanganathan ◆ © Kuganathan Ilanganathan ◆ Language: Tamil ◆ Published by Makkal Kalai Panpattuk Kalam ◆ Second Edition: October 2020 ◆ Size: Demy 1 x 8 ◆ Paper: 18.6 k ◆ Pages: 128 ◆ Page Layout by Nixon ◆ Makkal Kalai Panpattuk Kalam, London ◆

# முன்னுரை

தெரிந்தும் தெரியாத தமிழ்: எது தெரிந்தது? யாருக்குத் தெரிந்தது? எது தெரியாது? யாருக்குத் தெரியாதது? எமது மொழியின் பெயர் தமிழ் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே, ஆனால் ஏன் அவ்வாறு பெயர் பெற்றது? எப்போது முதல் அப் பெயர் பெற்றது? என்பது பலருக்கும் தெரிந்திருக்காது. எம்மிடையே சாதி இருப்பது எல்லோருக்கும் தெரிந்ததே, ஆனால் எப்போது முதல்? என்பது பலருக்குத் தெரிந்திருக்காது. தமிழ் எண்கள் என்று 'க,உ,ங,...' என சிலவற்றைத் தெரிந்து வைத்திருப்போம். உண்மையில் அவை தமிழ் எண்களா? என்பன போன்ற பல செய்திகளைத் தெளிவுபடுத்துவதே இந்த நூலின் நோக்கமாகும். பொதுவாக அறிஞர்கள் மட்டத்தில் மட்டும் அறியப்பட்ட இவற்றினைப் பலரிடமும் கொண்டு போய்ச் சேர்ப்பதே இந்த நூலின் நோக்கமாகவுள்ளது. அந்த வகையில் பார்த்தால், இது ஒரு தொகு நூலேயாகும். பல்வேறு நூல்களில் அறிஞர்களால் கூறப்பட்டுள்ளவற்றையும் {எவை என நூலில் கூறப்பட்டுள்ளன}, அதே போன்று பல்வேறு அறிஞர்களின் உரைகளில் கூறப்பட்டுள்ளவையும் இந்த நூலில் எடுத்தாளப்பட்டுள்ளன. குறிப்பாக இரா. இளங்குமரனார் ஐயா, சுப வீர பாண்டியன் ஐயா, தோழர் சு. வெங்கடேசன் (நா.உ), மறைந்த பேரா. கா. சிவத்தம்பி போன்றோரின் பல்வேறுபட்ட உரைகளுக்கும் இந்த நூல் கடமைப்பட்டுள்ளது. அதே வேளை எனது பார்வைகளையும் முன்வைத்தேயுள்ளேன்.

ஏற்கனவே பல்வேறு தளங்களில் என்னால் எழுதப்பட்டுள்ள கட்டுரைகளும் சிறு சிறு மாறுதல்களுடன் இந்த நூலில் பயன்படுத்தப்பட்டுள்ளன. வினவு, கீற்று, குளோபல் தமிழ் நியூஸ், இனியொரு போன்ற இணையத் தளங்களிலும் புதிய கலாச்சாரம், செந்தூரம் போன்ற இதழ்களிலும் எனது இத்தகைய கட்டுரைகள் வெளிவந்திருந்தன. அவற்றுக்கும் நன்றியுடையேன். இந்த நூலினை வெளியிடுவதற்கு ஊக்கப்படுத்தி, வெளியிட்டுமுள்ள மக்கள் கலை பண்பாட்டுக் களம் அமைப்பிற்கும் நன்றியுடையேன். இறுதியாக இந்த நூலை படித்துக் கொண்டிருக்கும் உங்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்

: **வி. இ. குகநாதன்**

# வாழ்த்துரை

“என்று பிறந்தவள் என்றுணராத” இயல்பினையுடையது மொழி. உலகம் முழுவதும் பல்லாயிரக்கணக்கான மொழிகள் இருக்கின்றன. அனைத்தும் சமநிலை உடையவை அல்ல.. தொன்மை, இனிமை, வன்மை, வளமை என்று பல்வேறு நிலைகளில் வேறுபடுவன. இருப்பினும், அவரவர் தாய்மொழி அவரவர்க்குச் சிறப்புடையதே! தமிழ் நம் அனைவர்க்கும் தாய்மொழி! உலகத்தின் தொன்மையான மொழிகளுள் ஒன்று. இலக்கிய இலக்கண வளம் நிறைந்த இனிமையான மொழி. அது குறித்து எண்ணற்ற நூல்கள் வெளிவந்துள்ளன. வந்து கொண்டே இருக்கின்றன.

இப்போது புலம் பெயர்ந்து வாழும் நண்பர் குகநாதன், “தெரிந்தும் தெரியாத தமிழ்” எனும் தலைப்பில் இந்நூலைப் படைத்துள்ளார். தாய் மண்ணை விட்டுப் போனபின்புதான், தாய்மொழிப் பற்றுதல் கூடும் என்பார்கள். அது உண்மைதான். எந்த ஒன்றையும் இழக்க நேரிடும்போது, அதன் மீதான பற்றுதல் கூடும். அது மட்டுமின்றி, புலம் பெயர்ந்து வாழ்வோருக்குக் கூடுதல் பட்டறிவு வந்து சேரும். கூடுதல் மொழிகளோடு நெருக்கம் வரும். அந்த சூழலில், மொழி பற்றிய பார்வையும் விரியும். பிற மொழிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் வாய்ப்பும் வரும். இவை அனைத்தின் கூட்டு நிலையே இந்நூல் என்று கருதுகின்றேன். நண்பர் குகநாதனின் முயற்சி வெல்லவும், தொடரவும் வாழ்த்தி மகிழ்கின்றேன்.

வாழ்த்துகளுடன்

**சுபவீ**

# பொருளடக்கம்

| | |
|---|---|
| தாய்மொழியான தமிழ் | 1 |
| தமிழ் மொழியின் சிறப்பு | 26 |
| தமிழ் மறைப்பும் தமிழ்ச் சிதைப்பும் | 43 |
| மதம் கொ(ண்ட/ன்ற) தமிழ் | 65 |
| தமிழும் சாதியும் | 82 |
| பின்னிணைப்பு கட்டுரைகள் | 97 |

# முதலாம் படலம்

## தாய்மொழி

**தமிழ் மொழிப் பெயர்க் காரணம்:**

எமது தாய்மொழியின் பெயர் 'தமிழ்' என்பது எல்லோருக்கும் தெரிந்ததே, ஆனால் எமது மொழி அவ்வாறு ஏன் பெயர் பெற்றது? என்பது பலருக்கும் தெரிந்திருக்காது. கால்டுவெல் (Robert Caldwell) என்ற அறிஞரே முதன் முதலில் தமிழ் மொழிப் பெயருக்கான காரணத்தை பொது வெளியில் முன்வைத்தவர். அவர் 'திராவிட' என்ற சொல்லே தமிழாகியது என்ற வாதத்தினை முன்வைத்திருந்தார். பின்னர் அக் கருத்துத் தவறானது என்றும், மறுபுறமாக தமிழ் என்ற சொல்லுக்கான திசைச் சொல்லே (Exonym) திராவிடம் என்றும் பாவாணர் முதற் கொண்டு பல அறிஞர்கள் நிறுவியுள்ளார்கள். எனவே 'தமிழ்' என்ற பெயர் எவ்வாறு ஏற்பட்டிருக்கக் கூடும் என்பதனை ஆராய வேண்டியுள்ளது. 'எல்லாச் சொற்களும் பொருள் குறித்தனவே' என்ற தொல்காப்பிய விதியானது பழந் தமிழ்ப் பெயர்களிற்குக் கூடப் பொருந்தும். தமிழ் என்பதற்கான பொருளினை நிகண்டில் பார்த்தால், இனிமை / நீர்மை என்று காணப்படுகின்றது. இதனையும் கவனத்திற்கொண்டு எமது மொழிக்கான பெயர்க் காரணத்தினை ஆராய்வோம்.

தமிழ் மொழிக்கான பெயர்க் காரணத்தினைப் பல்வேறு அறிஞர்கள் பல்வேறு வகைகளில் கூறியிருக்கின்றார்கள். தம் மொழியே தமிழானது என்றொரு கருத்துண்டு.

தம் + மொழி = தம்மொழி › தமிழி › 'தமிழ்'

அதாவது, எவ்வாறு 'தம் + ஆய் = தாய்', 'தம் + ஐயன் = தமையன்' ஆகினவோ, அவ்வாறு தமது (தம்) மொழி தமிழாகியது என்பது ஒரு கருத்தாகும். 'மொழிதல்' என்றால் சொல்லுதல் / பேசுதல் எனப் பொருள்படும். அந்த வகையில் தமது மொழிக்கு இட்ட பெயர் தமிழ் என்பது இக் கருத்தாகும். அதே போன்று தம்+இல்(குடி) = தமில் › தமிழ் ஆனது என்று இன்னொரு கருத்துமுண்டு.

இவ்வாறு பல கருத்துகளிலிருந்தாலும், முதுமுனைவர் இரா. இளங்குமரனார் கூறியதொரு கருத்தே ஏற்புடையதாக எனக்குத் தோன்றுகின்றது. அவரது விளக்கம் பின்வருமாறு அமைந்திருந்தது.

> "ஒரு குழந்தை பிறந்தவுடன் தாய்ப்பால் குடிக்கமுனையும் போது "அம்மு, அம்மு" என ஓசை எழுப்புவதால் அம்மா என்ற சொல் பிறந்தது; அதிலிருந்தே அமிழ்தம் [தாய்ப்பால்] என்ற சொல் பிறந்தது. அமிழ்து என்ற சொல்தோன்றியதைப் பார்த்தோம். இப்போது அமிழ்து என்ற சொல்லை இடைவிடாமல் விரைவாக மீண்டும் மீண்டும் சொல்லுங்கள். என்ன? தமிழ், தமிழ் ஓசை வருகின்றதா. அதுதான் "தமிழ்" என்ற சொல் தோன்றிய வரலாறு"

அவரது கூற்றுச் சரியானதா எனப் பார்ப்போம். அமிழ்தல் என்றால் உள்ளிறங்குதல் என்பது பொருளாகும் {எ.கா: இன்பக்கடலூடே யமிழுவேனை (திருப்பு. 78)}. நாம் இன்றும் பேச்சு வழக்கில் கூட 'கடலில் அமிழ்ந்து போனான்' என்கின்றோம் அல்லவா!. அவ்வாறுதான் 'அமிழ்தல்' என்பது உள்ளிறங்குதல் என்ற பொருள் பெறும். இவ்வாறு உள்ளிறங்கிச் சுவையீட்டுவதால் தாய்ப்பாலானது அமிழ்து (அமிழ்தம்) எனப்படும். இங்கு 'அம்மம்' என்ற சொல்லுக்குத் தாய்ப்பால் என்றொரு பொருளுமுண்டு என்பதும் நோக்கத்தக்கது {'**அம்மமுண்ணத் துயிலெழாயே**' - நாலாயிர திவ்வியப் பிரபந்தம்}.

அம்+இழ் = அமிழ் (அம்மாவிலிருந்து மலர்வது).

இவ் வேளையில் சமற்கிரதத்திலும் 'அம்மிருத்' என்றொரு சொல் உண்டு. அது 'மிருத்தியு' (இறப்பு) என்பதன் எதிர்ச் சொல்லாகும் (அ+மிருத்தியு = இறப்பற்ற). 'அம்மிருத்' என்ற சொல்லே அமிர்தம் ஆகி, அமிழ்தம் ஆயிற்று என்று வடமொழித் தாங்கலாளர்கள் கதை விடுவார்கள். அது முற்றிலும் தவறு. இரண்டும் வெவ்வேறான வேர்ச் சொல் விளக்கங்களைக் கொண்டவை. ஒலிப்பதிலுள்ள சிறு ஒற்றுமை, இரண்டையும் ஒன்றாக்காது (தமிழில் 'அமிர்தம்' என எழுதாதீர்கள், அமிழ்து /அமிழ்தம் எனத் தமிழ்ச்சொல்லையும், பாற்கடல் கடைந்த போது வந்த அறிவிற்கொவ்வா வடமொழிச் சொல்லை 'அம்மிருத்' எனவும் எழுதுங்கள்).

மீண்டும் அமிழ்து என்ற சொல்லுக்கு வந்தால், தாய்ப் பாலினையே அமிழ்து என அழைப்போம் என்று மேலே பார்த்தோம். தேவை கருதிப் பிறபொருளிலும் அமிழ்து என்ற சொல் இடம்பெறும் (எ.கா: 'அமிழ்தம் = மழை' என குறளில் வரும்). இப்போது 'அமிழ்து' என்ற சொல்லினை இடைவிடாமல் மீண்டும் மீண்டும் விரைவாகச் சொல்லிப் பார்ப்போம்.

அமிழ்து, அமிழ்து, அமிழ்து ››› தமிழ், தமிழ், தமிழ்.

இதுவே 'தமிழ்' என்ற சொல் பிறந்த கதையாகும். இவ் விளக்கத்திலுள்ள இன்னொரு சிறப்பு என்னவென்றால்; மேலுள்ள ஏனைய தமிழ் மொழிப் பெயர் விளக்கங்களும், இந்த விளக்கத்துடன் பொருந்திப் போகின்றது. அம்மாவிலிருந்து மலர்வது எவ்வாறு அமிழ் (அம்+இழ் = அமிழ்), ஆகின்றதோ, அவ்வாறு தம்மிலிருந்து மலர்வது தமிழ் (தம்+இழ் = தமிழ்) எனப்படும். அதே போன்று தமிழுக்கு நிகண்டு கூறும் பொருளான இனிமை/நீர்மை என்பதும் அமிழ்து தாய்ப்பாலுடன் பொருந்திப் போகின்றது {பிங்கல நிகண்டானது இனிமையும் நீர்மையும் தமிழெனல் ஆகும் என்கின்றது}. இவற்றினைக் கருத்திற்கொண்டே, ஐயா இளங்குமரனாரின் தமிழ் மொழிக்கான பெயர் விளக்கம் ஏற்புடையது என்கின்றேன். பாவேந்தர் பாரதிதாசனின் பின்வரும் பாடலைப் பாருங்கள்.

“தமிழுக்கும் அமுதென்று பேர் – அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்
தமிழுக்கு நிலவென்று பேர்! – இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்
தமிழுக்கு மணமென்று பேர்! – இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்
தமிழுக்கு மதுவென்று பேர்! – இன்பத்
தமிழ் எங்கள் உரிமைச்செம் பயிருக்கு வேர்!
தமிழ் எங்கள் இளமைக்குப் பால் – இன்பத்
தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்
தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்! – இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்
தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்! – இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்
தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்! – இன்பத்
தமிழ் எங்கள் வளமிக்க உளமுற்ற தீ!”

மேலுள்ள பாடலில் “தமிழுக்கும் அமுதென்று பேர்” என்று கூறியது மட்டுமன்றி “தமிழ் எங்கள் இளமைக்குப் பால்” என்றும் பாவேந்தர் பாரதிதாசன் பாடியுள்ளதைக் காணுங்கள். இப் பாடலானது அமிழ்து என்ற சொல்தான் தமிழ் என்றானது என்ற எமது நிலைப்பாட்டினை மேலும் வலுப்படுத்தும்.

தமிழ் என்ற சொல் எவ்வாறு பிறந்தது என மேலே பார்த்தோம். இப்போது, எப்போது முதல் தமிழ் என்ற சொல் பயன்படுத்தப்படுகின்று எனப் பார்ப்போம். மொழிதல் என்ற சொல்லின் பொருளே பேசுதல்

என்பதே, எனவே மொழியானது பேச்சு வழக்கிலேயே முதலில் தோன்றும். இந்த வகையில் ‘தமிழ்’ என்ற சொல்லும் பேச்சு வழக்கிலேயே முதலில் தோன்றியிருக்கும். இச்செய்முறை ஒரு படிமலர்ச்சி முறையிலேயே இடம்பெற்றிருக்கும். அதாவது குழந்தை முதன்முதலில் பால் குடிக்கும்போது ஏற்பட்ட ‘அம்’ / ‘அம்மு’ என்ற ஒலியானது, அமிழ்து ஆகிப் பின்பு தமிழாகிய செயற்பாடானது ஒரு நீண்ட காலத்தில் படிமுறை, படிமுறையாக ஏற்பட்டிருக்கும். இங்கு பேச்சு வழக்கிற்குச் சான்றுகளைக் காட்டமுடியாது, என்பதனால் எழுத்து வடிவிற்கே நேரில் வருவோம். ‘தமிழ்’ என்ற சொல் தமிழில் இன்று கிடைக்கும் முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்திலேயே காணப்படுகின்றது.

“தமிழெழன் கிளவியு மதனோ ரற்றே” [புள்ளி மயங்கியல் 90]

இங்கு தொல்காப்பியத்தின் காலம் தொடர்பாகச் சில வேறுபட்ட கருத்துகள் காணப்படுகின்றன. பொதுக் கருத்தாக தொல்காப்பியக் காலம் BCE 500 எனக் கணிக்கப்படுகின்றது. தொல்காப்பியருக்குச் சமகாலத்தவராகக் கருதப்படும் பனம்பாரனார் என்பவரும் ‘தமிழ்’ என்ற சொல்லினைக் கையாண்டுள்ளார்.

“வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து”
[தொல்காப்பியம், சிறப்புப்பாயிரம்:1–3]

சங்க இலக்கியங்களிலும் தமிழ் என்ற சொல் இடம்பெற்றுள்ளது.

“வில்லலைத் துண்ணும் வல்லாண் வாழ்க்கைத்
தமிழ்கெழு மூவர் காக்கும்
மொழிபெயர் தேஎத்த பன்மலை யிறந்தே” [அகம்.31]

இப் பாடலைப் (அகம்.31) பாடியவர் மாமூலனார் எனும் புலவராவார். மாமூலனார் நந்தர்களையும் மௌரியர்களையும் பற்றிப் பாடுவதால், இவர் பொ.ஆ.மு. 320க்கு {BCE320} முன் வாழ்ந்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது. இப் பாடல் நீங்கலாக மேலும் பல சங்ககாலப் பாடல்களில் ‘தமிழ்’ என்ற சொல் காணக்கிடைக்கின்றது.

“தமிழ் அகப்படுத்த இமிழ் இசை முரசின்,
வருநர் வரையாப் பெரு நாள் இருக்கை”
[அகநானூறு 227–18]

“நளி இரு முந்நீர் ஏணி ஆக, வளி இடை வழங்கா வானம்
சூடிய, மண் திணி கிடக்கைத் தண் தமிழ்க் கிழவர்”
[புறநானூறு 35]

இவ்வாறு 'தமிழ்' என்ற சொல் இடம்பெறும் சங்ககாலப் பாடல்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

இலக்கியச் சான்றுகளைப் பார்த்தோம். இப்போது கல்வெட்டுச் சான்றைப் பார்ப்போம். அத்திக்கும்பா கல்வெட்டு (Hathigumpha inscription, "யானைக்குகை" கல்வெட்டு) என்பது புவனேசுவரம் (ஒரிசா) அருகே உதயகிரி, அன்றைய கலிங்கப் பேரரசர் காரவேலன் என்பவரால் பொது ஆண்டுக்கு முந்திய இரண்டாம் நூற்றாண்டில் (BCE 2nd cent) பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஆகும். இக் கல்வெட்டின் 11 வது வரியில் கூறப்பட்டுள்ளவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்பு வடிவம் வருமாறு.

> "...And the market-town(?) Pithumda founded by the Ava king he ploughs down with a plough of asses; and (he) thoroughly breaks up the confederacy of the T(r)amira (Dramira) countries of one hundred and thirteen years ( or 1300 years), which has been a source of danger to (his) Country (Janapada)..."

இங்கு காணப்படும் பிராகிருத மொழிச் சொல் "திராமிர சங்காத்தம்" {T(r)amira (Dramira} என்பதாகும். "திராமிர சங்காத்தம்" என்பது தமிழர் கூட்டணி {தமிழ் மூவேந்தர்} என்பதன் பிராகிரதச் சொல் வடிவமாகும் [தமிழை ஆங்கிலத்தில் ரமில்=Tamil என அழைப்பது போன்று]. மேலே வரும் கல்வெட்டு வசனத்தில் "113" ஆண்டுகளா / "1300" ஆண்டுகளா என்ற குழப்பம் அறிஞர்களிடையே உண்டு. 113 ஆண்டுகள் எனக்கொண்டால், தமிழர் கூட்டணியின் காலம் மேலும் ஒரு நூற்றாண்டு பின்னோக்கிச் செல்லும் {BCE 3rd cent}. மாறாக, 1300 ஆண்டுகள் எனில், தமிழர் கூட்டணியின் காலம் BCE 15th cent என ஆகும். இதுவே தமிழ் என்ற சொல்லின் திசைச் சொல்லுக்கான காலத்தால் முந்திய கல்வெட்டுச் சான்றாகும்.

இவ்வாறு எழுத்து மூலமான சான்றுகளினடிப்படையில் எமது மொழியானது சங்க காலத்திலேயே 'தமிழ்' என்ற பெயர் பெற்றுவிட்டது என்பது தெளிவாகின்றது. ஆனால், பேச்சு வழக்கில் அதற்கு முந்தியே அப் பெயர் பெற்றிருக்கும். பாரதியார் 'நாடு' குறித்துப் பாடிய பாடலொன்று, இங்கு எமக்குத் தமிழ் மொழி குறித்து மிகப் பொருத்தமாக அமைகின்றது.

> "தொன்று நிகழ்ந்தது அனைத்தும் உணர்ந்திடும்
> சூழ்கலை வாணர்களும் - இவள்
> என்று பிறந்தவள் என்றுணராத
> இயல்பினளாம் எங்கள் தாய்"

பொருள் முற்காலத்தில் நிகழ்ந்தவை அனைத்தையும் நன்கு உணரும் பல கல்வி கற்றவர்களும் இவள் என்று தோன்றியவள் என்று சொல்ல இயலாத இயல்பை உடையவள் எங்கள் தாய்.

முடிவாக, மேற்கூறிய தமிழ்மொழிக்கான பெயர்க் காரணத்தினைக் கொண்டு பார்க்கையில் (அமிழ்து-தாய்ப்பால்-தமிழ்), தாய்மொழி என அழைப்பதற்குப் பொருத்தமான மொழியாக 'தமிழ் 'மொழியினை விட எந்த மொழி அமையும்?

மேலே தமிழ் மொழியானது பேச்சு வழக்கில் எப்போது தோன்றியது எனத் தெளிவாக ஒரு காலத்தினை அறுதியிட்டுக் கூற முடியாது எனப் பார்த்தோம். இப்போது தமிழ் மொழியின் தோற்றம் தொடர்பாகக் கூறப்படும் சில கருதுகோள்களை ஆராய்வோம்.

### கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த குடி, தமிழ்க்குடி:

கல் தோன்றி மண் தோன்றுவதற்கு முன்னர் தோன்றியது எமது மொழி என்றொரு கருத்து பரவலாகவிருக்கின்றது. கல் தோன்றி, மண் தோன்றி, வேறு பல உயரினங்கள் தோன்றிப் பல நூறாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரே மனிதர்கள் தோன்றுகின்றார்கள். மனிதர்கள் தோன்றியவுடனே கூட மொழிகள் தோன்றுவதில்லை. அவ்வாறிருக்க, எவ்வாறு இக் கூற்று உண்மையாகும் என ஆராய்ந்தது உண்டா? தமிழ் மொழி மீதான கண்மூடித்தனமான அன்பினால் மண் தோன்றுவதற்கு முன்னரே எமது மொழி தோன்றிவிட்டது எனப் பகுத்தறிவிற்குப் புறம்பாக நம்பியிருக்கலாம்; அல்லது மூத்த மொழிக்கான உயர்வு நவிற்சி அணி என இலக்கியத்தனமாகச் சிந்தித்திருக்கலாம்; அல்லது தமிழருக்கு வேலையே இதுதானே! இது வெறும் வாய்ச் சவாடல் எனக் கணித்திருப்பீர்கள். சில வேளைகளில் "[கல்] கல்வி அறிவு தோன்றாத [மன்] மன்னராட்சி ஏற்படுவதற்கு முன்பாகவே [வாளோடு] வீரத்தோடு தோன்றிய முதல் இனம் தமிழினம்" என்ற பழமொழி (?) விளக்கத்தைப் படித்திருக்கவும் கூடும். மேற்கூறியவை யாவுமே தவறானவை. உண்மையில் இது ஒரு பழமொழி கூட அல்ல, மாறாக ஒன்பதாம் நூற்றாண்டில் (CE 9th cent) ஐயனாரிதனார் என்ற புலவர் பாடிய புறப்பொருள் வெண்பா மாலையில் இடம்பெற்ற ஒரு பாடலின் இடைப்பட்ட வரிகளே 'கல் தோன்றி, மண் தோன்றாக் காலத்தே, வாளோடு முன் தோன்றி மூத்த குடி!' என்பதுவாகும். இதன் பொருளை அறிவதற்குப் பாடலை முழுமையாக அறியவேண்டுமே! பாடலினைப் பார்ப்போம்.

> "பொய் அகல, நாளும் புகழ் விளைத்தல் என் வியப்பாம்?
> வையகம் போர்த்த, வயங்கு ஒலி நீர் –கையகலக்

கல் தோன்றி, மண் தோன்றாக் காலத்தே, வாளோடு
முன் தோன்றி மூத்த குடி!''

[பு. வெ. மாலை: சூத்திர விளக்க பாடல் 35]
[கரந்தைப் படலம்]

பாடலுக்கான பொருள்:

'பொய் அகல'- தோல்வி எனும் பொய் நீங்க; 'நாளும் புகழ் விளைத்தல் என் வியப்பாம்' நாள்தோறும் புகழை நிலைநிறுத்தும் வீரம், என்ன வியப்பு; 'வயங்கு ஒலி நீர் கையகல'- தொடக்கத்தில் நீர் சூழ்ந்திருந்த உலகில் நீர் விலக மக்களின் வாழ்வு தொடங்கியது; 'கல் தோன்றி' குறிஞ்சி வாழ்வு தோன்றி; 'மண் தோன்றா' மருதம் தோன்றாக் காலத்தே; 'வாளோடு முன் தோன்றி மூத்த குடி' கையில், வாளோடு தோன்றி [Appear ஆகி], இப்படி வீரமாகப் போர் செய்து ஆநிரை காக்கின்ற தொல்குடி.

எமக்கு முதன்மையான வரியினை (கல் தோன்றி, மண் தோன்றா) நோக்கினால், 'கல்' என்ற சொல்லுக்கு மலை என்ற பொருளும் உண்டு. மலை என்பதனைக் குறிக்கத் தமிழில் ஆகக்குறைந்தது 22 சொற்களாவது உண்டு [மலை = குன்றம், குன்று, இமயம், நவிரம், பொதியம், பரம்பு, கல் {பிறங்கல், பெருங்கல்}, பொறை, விண்டு, அடுக்கல், அறை, ஓங்கல், கோடு, சிமையம், சிலம்பு, சையம், பொருப்பு, வரை, வரப்பு, விலங்கல், வெற்பு]. இந்த சொற்களில் ஒன்றான 'கல்' என்பது 'மலை' மூலம் குறிஞ்சி நில வாழ்வினைக் குறிக்கின்றது. அதே போன்று மண் என்பது மருதநில வாழ்வினைக் குறிக்கின்றது (மண்=வயல் என்ற பொருளும் உண்டு). அதே போன்று தோன்றுதல் என்பது பிறப்பினை மட்டுமே குறிப்பதல்ல, மாறாக Appear என்ற பொருளும் உண்டு. எடுத்துக்காட்டாக 'மேடையில் தோன்றினான்' என்பது அப் பொருளிலேயே அமையும். இப்போது விளங்குகின்றதா? குறிஞ்சியில் வாழ்வு தோன்றி, மருத நில வாழ்வு தோன்றுவதற்கு இடைப்பட்ட காலத்தில், வாளோடு தோன்றி (இங்கு பிறக்கும்போது யாரும் வாளோடு பிறக்கமாட்டார்கள், இங்கு தோன்றி=Appear) ஆநிரை காக்கும் தொல்குடியின் பெருமையினைப் பாடுவதே இப் பாடலாகும். இனிமேலாவது உரக்கச் சொல்லுங்கள், ''கல் தோன்றி, மண் தோன்றா...'' என்பது புரளியோ அல்லது உயர்வு நவிற்சி அணியோ அல்ல, மாறாகத் தமிழ்த் தொல்குடியின் ஆநிரை காக்கும் வீர வரலாறேயாகும். அதே வேளை மனிதன் தோன்றுவதற்கு முன்னரே தமிழ் மொழி தோன்றிவிட்டது என்பது போன்ற தவறான விளக்கத்தினைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

## குமரிக்கண்டம்:

தமிழர் தோன்றியது எங்கே? என்று யாரிடமாவது கேட்டால், மிகப் பெரும்பாலானோரின் பதில் ‘குமரிக்கண்டம்‘என்பதாகவே அமையும். குமரிக் கண்டத்துக்கான மறுப்பு அறிவியல் விளக்கங்கள் பல வெளிவந்துள்ள போதிலும், எளிய மக்கள் மட்டுமன்றி அறிஞர்கள் பலர் கூடக் குமரிக் கண்டத்தை நம்பியே வருகின்றனர். அண்மையில் தமிழாற்றுப்படுகை எனும் தொடர் சொற்பொழிவு நிகழ்வில், மறைமலை அடிகளார் பற்றிய உரையில், கவிப்பேரரசு வைரமுத்துவே தமிழர் தோன்றியது இலெமோரியக் கண்டத்தில் எனக்குறிப்பிட்டிருந்தார். அதேபோன்று ஒரிசா பாலு எனும் ஆழ்கடலாய்வு வல்லுநரும் இன்றும், குமரிக்கண்டத்தினை வலியுறுத்தியே வருகின்றார். இவர்கள் இருவரும் தமது துறைகளில் வல்லுநர்கள் என்பதுடன் தமிழிற்கு மிகப் பெரிய பங்களிப்பினை நல்கியவர்கள் என்பதில் ஐயமில்லை, எனினும் இவர்களது குமரிக்கண்டம் பற்றிய கருத்துத் தவறானது.

### குமரிக்கண்ட கருதுகோளின் தொடக்கம்

குமரிக்கண்டம் பற்றிய கோட்பாடு தோன்றுவதற்கு முன்னரே, தமிழர்களின் தோற்றத்தினை மையப்படுத்தி அவ்வாறான ஒரு தேடல் தமிழர்களிடம் ஏற்கனவேயே இருந்து வந்தது. இவ்வாறான தேடலுக்கு அடிப்படையாகப் பின்வரும் காரணிகள் காணப்பட்டன.

1. சங்க இலக்கியங்களானது அக் காலத்தில் செழிப்புற்றிருந்த நகரங்கள் பற்றிப் பேசியபோதும், அத்தகைய நகரங்களின் எச்சங்கள் (குறிப்பாகக் கட்டிடங்கள்) எதுவும் தமிழகத்தில் 20ம் நூற்றாண்டுவரைக் கண்டுபிடிக்கப்படாமை. (முன்னைய அகழ்வாய்வுகளில் ஈமத்தாழிகளே பெருமளவிற்குக் கிடைத்திருந்தன).

2. சங்க காலத்திலேயே தமிழர்கள் எழுத்தறிவு பெற்றிருந்தபோதும், அண்மைக் காலத் தொல்பொருளாய்வுகள் வரை எதுவித எழுத்து மூலமான சான்றுகளும் இல்லாமை. (முன்னர் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்களில் மிகப் பெரும்பாலானவை பொது ஆண்டு பத்தாம் நூற்றாண்டிற்குப் [CE 10th cent] பிற்பட்டவையாகவே காணப்பட்டன).

3. சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் மதுரையின் அமைவிடமானது தற்போதைய மதுரையின் அமைவிடத்திலிருந்து வேறுபட்டுக் காணப்பட்டமையால் பழைய மதுரை பற்றிய தேடல். (பத்துப்பாட்டு ஆராய்ச்சி எனும் நூலில் இராசமாணிக்கர் மதுரையின் அமைவிடம் பற்றி விளக்கமாக்கூறியுள்ளார்).

4. சங்ககால இலக்கியங்களானவை ‘மணிமாலை’ போன்ற பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளையும்,

அதனையொட்டிய துறைமுகங்கள் பலவற்றையும் குறிப்பிட்டுள்ள போதும், அவற்றுக்கான தொல்பொருட் சான்றுகள் கிடைக்காமை.

5. இவ்வாறான காரணங்களால், தமிழர் தோன்றிய இடம் பற்றிய தேடல்களில் ஈடுபட்டிருந்த தமிழர்களைத் தென்பகுதி நோக்கித் தள்ளுவதாக ஒரு காரணி அமைந்தது. அது தமிழ் மொழியானது தெற்கேயிருந்து வடக்கே செல்லச் செல்ல சிதைவடைந்து சென்றமையாகும். இதுவே தமிழர் தோன்றிய இடத்தினைத் தெற்கு நோக்கிக் காட்டிற்று.

6. இறையனார் அகப்பொருள் உரையில் பாண்டியப் பேரரசு கடற்கோளால் அழிந்தது பற்றிய விளக்கமான குறிப்புகள் காணப்படுகின்றமை. ஏற்கனவே தெற்கு நோக்கித் திரும்பியிருந்த பார்வை, இறையனாரின் இந்த 'பாண்டிய நாடு கடற்கோளால் மூழ்கியது' என்ற கருத்தால் கடலை நோக்கித் திரும்பியது.

மேற்கூறிய காரணிகளே குமரிக்கண்டம் பற்றிய கருதுகோளிற்கு அடிப்படையாக அமைந்தன. முதன் முதலில் 1903 இல் பரிதிமாற் கலைஞர் (வி. கோ. சூர்யநாராயண சாஸ்திரி) என்ற அறிஞர் தனது 'தமிழ் மொழியின் வரலாறு' என்ற நூலில் 'குமரி நாடு' என்ற சொல்லைப் பயன்படுத்தினார். பின்பு 'குமரிக்கண்டம்'என்ற சொல்லை ஈழத்தமிழறிஞரான ப. கனகசபை எழுதிய '1800 ஆண்டுகளுக்கு முன் தமிழர்' (The Tamils 1800 Years Ago) என்ற நூலில் பயன்படுத்தியதுடன், மறைந்த நிலப்பகுதியே குமரிக்கண்டம் என்றும் கூறியிருந்தார். இவர்களைத் தொடர்ந்து பாவாணர், அப்பாத்துரையார் போன்றோர் குமரிக்கண்டம் பற்றிய கருதுகோளினைப் பெரிதும் பரவலடையச் செய்திருந்தனர்.

### இலெமூரியா

இவ்வாறு தமிழர்களின் தேடல் கடலை நோக்கித் திரும்பியிருந்த வேளையில் மேலைத்தேய அறிஞர்களால் இலெமூரியாக் கண்டம் பற்றிய கருதுகோள் ஒன்று முன்வைக்கப்பட்டது. 1864 இல் லெமூர் என்ற விலங்கானது மடகாசுகரிலும், இந்தியாவின் சில பகுதிகளிலும் (லெமூர் ஆபிரிக்காவில் காணப்படாமல்) காணப்பட்டதனை அடிப்படையாகக் கொண்டு பிலிப் ஸ்க்லேட்டெர் (Philip Sclater) எனும் ஆராய்ச்சியாளரால் "The Mammals of Madagascar" என்று ஒரு ஆக்கம் முன்வைக்கப்பட்டது. இதுவே இலெமூரியாக் கண்டம் பற்றிய கருதுகோள் தோன்றிய அடிப்படையாகும். இந்த இலெமூரியாக் கண்டம்தான் குமரிக்கண்டம் என 1906ம் ஆண்டு இலங்கையிலிருந்து வெளிவந்த 'சித்தாந்த தீபிகை' என்ற இதழில் நல்லசிவம்பிள்ளை என்பவர் முதன்முதலில் எழுதினார். பின்னர் குமரிக்கண்டமானது இலெமூரியாக்கண்டம், நாவலந்தீவு எனப்

பல பெயர்களில் தமிழர்களால் அழைக்கப்பட்டது. இலெமூரியாக் கண்டம் பற்றிய கருதுகோளானது நீண்டகாலத்திற்குத் தாக்குப்பிடிக்கவில்லை. அதாவது லெமூர் என்ற விலங்கானது மடகாசுகருக்கும் இந்தியாவிற்குமிடையே பரந்திருப்பதற்கு டார்வினின் படிமலர்ச்சிக் கோட்பாட்டின் (Evolution) படி தகுந்த விளக்கம் கொடுக்கப்பட்டவுடன், இலெமூரியாக் கோட்பாட்டின் அடிப்படை தகர்ந்து போயிற்று. இலெமூரியாக் கண்டம் பொய்ப்பிக்கப்பட்டவுடன், சிலரால் கன்யாகுமரிக்குத் தெற்கே இருந்ததுதான் குமரிக்கண்டம் என்று வேறு ஒரு புது விளக்கம் கொடுக்கப்பட்டது.

**அறிவியல் ரீதியில் குமரிக்கண்டத்தின் பொருத்தப்பாடு**

கண்ட நகர்வுகள், புவித்தகடு அசைவுகள் பற்றிய தெளிவான விளக்கங்கள் குமரிக்கண்டக் கோட்பாட்டினை முற்றாகவே மறுத்து விட்டன. இதனைச் சுருக்கமாகப் பார்த்தால், புவித் தகடுகளின் அசைவினால் ஒரே நிலத் தொகுதியாகவிருந்த பெரு நிலப்பரப்பானது (Pangaea) பல்வேறு கண்டங்களாகப் பிரிந்தது ஏறத்தாழ 335 மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்ட ஒரு நிகழ்வாகும். கோமோ சேப்பியன் எனப்படும் இன்றைய மனிதர்கள் தோன்றி வெறும் 200000-300000 ஆண்டுகளே ஆகின்றன. எனவே கண்டங்களின் பிளவுக்கு முன்னரே தமிழர்கள் தோன்றினர் என்ற கருதுகோள் அறிவியல் ரீதியாகப் பொருத்தமானதாக அமையாது. எனவே குமரிக்கண்டத்தில் தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்பது வெறும் கற்பனையேயாகும். புவித் தகடுகளின் அசைவு, கண்ட நகர்வுகள் என்பன ஒரே நாளில் திடீரென இடம் பெற்று மக்களையும், நகரங்களையும் ஒரேயடியாக அழிப்பனவல்ல. மாறாக அவை ஒரு நீண்டகாலத் தொடர் செயல்முறையாகும். இன்றும் கூட, ஆப்பிரிக்கக் கண்டத்தை இரண்டாகப் பிளக்கும் வகையில் ஒரு நிலப் பிளவானது (நுபியன் தட்டு நகர்வு Nubian Plate), அண்மையில் கென்யாவில் வெளித் தெரியுமாறு இடம்பெற்றதாக புவியிலாளர் கருதுகிறார்கள். இந்த நகர்வானது 30 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தொடங்கி, ஆண்டுக்கு 2.5 செமீ என்ற அளவில் நகர்ந்து, இன்னமும் பத்து மில்லியன் ஆண்டுகளிற்குப் பின் ஆப்பிரிக்காவினை இரண்டாகப் பிளக்கும் என அறிஞர்கள் கருதுகிறார்கள். எனவே இத்தகைய படிப்படியான கண்ட நகர்வுகளில் தமிழரின் நாகரிகம் அழிந்து போனதாகக் கூறுவது வெறும் கற்பனையே. இப்போது உங்களுக்கு "அண்மைக்காலத்தில் நிலப்பகுதியானது கடலுக்குள் போவதேயில்லையா?" என ஒரு கேள்வி எழலாம். கடல் அரிப்பு, தீவுகளின் அமிழ்தல் போன்ற மெதுவான செயற்பாடுகளால் நிலப்பகுதி படிப்படியாகக் கடலுக்குள் போகலாம். இந்த அடிப்படையிலேயே துவாரகை, பூம்புகார் போன்ற

கடலடி ஆய்வுகளை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். திடீரென ஏற்படும் சுனாமி, புயல் போன்றவை வேண்டுமானால் பேரழிவினை ஏற்படுத்தக் கூடியவையென்றாலும், அவை முடிவடைந்த பின் நிலப்பகுதி அவ்வாறேயிருக்கும். எனவே மேற்கூறிய நிகழ்வுகள் எதுவும் குமரிக்கண்டத்தினை நியாயப்படுத்தாது. எனவேதான் குமரிக்கண்டக் கருதுகோளானது அறிவியல் ரீதியில் பொருத்தமற்றது என உறுதியாகக் கூறலாம்.

**தெளிவுறுத்தும் அண்மைக்கால அகழ்வாய்வுகள்**

மேலே நாம் அறிவியல் ரீதியில் குமரிக்கண்டத்தினை மறுத்து நிறுவியபோதும், இலக்கியச் சான்றுகள் என்னாயிற்று?, குமரிக்கண்டத் தேடலுக்கான காரணங்கள் (மேலே இலக்கமிடப்பட்டுப் பார்க்கப்பட்டவை) என்னாயிற்று? என்பன போன்ற கேள்விகள் எழலாம். நாம் இவற்றுக்கான பதில்களை அண்மைக் கால அகழ்வாய்வுகளைக் கவனமாகப் பார்ப்பதன் மூலம் அறிந்து கொள்ளலாம். இங்கு அண்மைக் கால ஆய்வுகள் என நான் குறிப்பிடுவது இரண்டாயிரமாவது (CE 2000) ஆண்டுக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட கீழடி, ஆதிச்சநல்லூர், அழகன்குளம் போன்ற அகழ்வாய்வுகளையே குறிக்கின்றது. இதனை நாம் முதலில் குமரிக்கண்டத் தேடலுக்கெனப் பார்த்த காரணங்களுக்கான அதே ஒழுங்கில் பார்ப்போம்.

1. சங்க இலக்கியங்கள் பெருமையாகப் பேசும் நகர நாகரிகங்களுக்கான எச்சங்கள் எதுவும் கீழடி ஆய்வுவரைக் கண்டுபிடிக்கப் படவில்லை. அதனாலேயே முன்னர் சங்க இலக்கியங்களின் நம்பகத் தன்மையினைப் பிறர் ஏற்றுக்கொள்ளவில்லை. இதனாலேயே சிலர் சங்க காலத்தை வெகுவாகப் பின் நோக்கி நகர்த்தியும் வந்தனர். இத்தகைய பின்புலத்திலேயே கட்டிடத்துக்கான சான்றுகள் நிலத்தில் காணப்படாமையால், கடலை நோக்கிக் கவனம் முன்பு திரும்பியது. கீழடியில் முழுமையான ஒரு நகர நாகரிகம் கண்டுபிடிக்கப்பட்டதும், அங்கு கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் கரிமச் சோதனையில் சங்க காலத்துடன் ஒத்துப்போனமையும் இந்த காரணத்திற்கான தேடலிற்கான பதிலைத் தருகின்றது.

2. பழனிக்கருகிலுள்ள பொருந்தல் என்ற இடத்தில் க. ராஜன் என்ற தொல்லியல் ஆய்வாளரால் 2011 இல் கண்டுபிடிக்கப்பட்ட மண் கலத்திலிருந்த “வைரமணி” (தமிழி வடிவில்) என்ற தமிழ் எழுத்துக்கள் பொது ஆண்டிற்கு முந்திய 490 ம் (BCE 490) ஆண்டைச் சேர்ந்தது என அமெரிக்க ஆய்வில் உறுதிப்படுத்தப்பட்டது.

அதே போன்று கொடுமணல் அகழ்வாய்வில் மட்டுமே 204 தமிழி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட மண் பானை ஓடுகள் கிடைத்தன. இவையும் பொ.ஆ.மு 400 (BCE 400) இனைச் சேர்ந்தது என்கிறார் கா. ராஜன் (தொல்லியல் நோக்கில் சங்ககாலம்). இவை அசோகரின் பிராமி எழுத்துக்களுக்கும் முற்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. கீழடியிலும் எழுத்துக்கள் (BCE 600) பொறிக்கப்பட்ட சிகப்பு கறுப்பு நிற மட்பாண்டங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டன. எனவே சங்க கால எழுத்துக்களுக்கான சான்றுகளும் நிலப் பரப்பிலேயே கிடைக்கப்பெற்றுவிட்டன.

3. மதுரைக்காஞ்சி, சிலப்பதிகாரம் என்பன குறிப்பிடும் மதுரையானது தற்போதைய மதுரையின் அமைவிடத்துடன் பொருந்தாமையால், பழைய மதுரையினைக் கடல் கொண்டிருக்கலாம் என முன்பு உய்த்துணரப்பட்டது. கீழடி ஆய்வானது பழைய மதுரை என்பது கீழடிதான் என உணர்த்தியுள்ளது. சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் மதுரையானது திருப்பரங்குன்றத்துக்கு நேர் கிழக்கே காணப்பட, இன்றைய மதுரையானது வடகிழக்குத் திசையில் காணப்படுகிறது. கீழடியும் சரியாக திருப்பங்குன்றத்திற்கு நேர் கிழக்கேயே (இலக்கியங்கள் குறிப்பிடுவதுபோல) காணப்படுகிறது. அத்துடன் சிலப்பதிகாரத்தில் கோவலனும், கண்ணகியும் கவுந்தி அடிகளுடன் பூம்புகாரிலிருந்து மதுரை நோக்கிச் சென்ற பாதையும் சரியாகக் கீழடிக்குச் செல்லும் பாதையுடன் பொருந்திப் போகின்றது. மேலும் தற்போதைய மதுரையில் 10ம் நூற்றாண்டிலிருந்தே கல்வெட்டுச் சான்றுகள் கிடைக்க, பழைய மதுரையாக இப்போது கருதப்படுகின்ற கீழடியில் 10ம் நூற்றாண்டுக்கு முன்னரான சான்றுகள் சங்க காலம் வரைக் காணப்படுகின்றன. எனவே 10ம் நூற்றாண்டளவில் மதுரை கீழடியிலிருந்து தற்போதைய மதுரைக்கு இடம்பெயர்ந்திருக்கலாம் என உய்த்துணரமுடிகிறது. (இங்கே கடம்பவனத்தை அழித்துப் பாண்டியன் மதுரையினை உருவாக்கிய கதையினையும் நினைவிற்கொள்ளலாம்). எனவே சங்க கால மதுரையானது கீழடியிலோ அல்லது அதனையொட்டிய வைகைக் கரையில் வேறொரு இடத்திலோ இருந்திருக்கலாம்.

4. சங்க காலத்தில் யவனர்களுடன் வாணிபம் செய்த குறிப்புக்களுடன் 'அழகன் குளம்' துறைமுக ஆய்வுகள் ஒத்துப்போகின்றது. இங்கு கிரேக்கக் கப்பல் வடிவம் பொறிக்கப்பட்ட தொல்லியல் சான்றுகள் கிடைக்கப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. இந்த அழகன்குளம் முன்னர் அருகன்குளம் (சமணக்கடவுள் அருகன்) என அழைக்கப்பட, அதுவே தொலமியின் குறிப்புக்களில் அருகுறுகுளம் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

5. தமிழ் தெற்கே செம்மையாகவும், வடக்கே செல்லச் செல்லத் திரிந்தும் காணப்படுவதற்கு, நாம் வேறு ஒரு கோணத்தில் வடக்கேயிருந்து வந்த வடமொழி ஆக்கிரமிப்பே காரணம் எனக் கொள்ளலாம்.

மேலே சங்க காலத்தில் கூறப்பட்ட பல்வேறு விடயங்களுக்கும் தமிழக நிலப்பரப்பிலேயே சான்றுகள் காணப்படுவதையும், பழைய மதுரையானது கடலில் மூழ்கியது என்பது தவறு என்பதையும் பார்த்தோம். இப்போது எஞ்சியிருப்பது இறையனாரின் அகப்பொருளுரையில் பாண்டியநாடு கடற்கோளில் மூழ்கியதாகக் கூறியிருப்பதேயாகும். இதனைச் சற்று விரிவாகப்பார்ப்போம்.

**இறையனார் அகப்பொருளுரையின் முரண்கள்**

களப்பிரர் ஆட்சிக்காலத்தின் போது (இதனை இலங்கையிலுள்ள மகாவம்சம், சூலவம்சம் ஆகிய நூல்களினடிப்படையில் பொ.ஆ 5ம், 6ம் நூற்றாண்டளவில் எனக்கொள்ளலாம்), இறையனார் அகப்பொருளும், அதற்கான உரையும் எழுதப்பட்டது (இந்த உரை எழுதிய நக்கீரர் வேறு, கடைச்சங்க காலத்தில் வாழ்ந்த சங்க காலப் புலவர் நக்கீரர் வேறு). களப்பிரர் காலத்தில் சமணமும், பவுத்தமும் மேன்மை பெற்றிருந்த பின்புலத்தில் சைவரும், வைணவரும் புதிய பக்தி இயக்கத்தை உருவாக்கி அகப்பொருளிற்குப் புதிய கருத்தாக தலைவன்-தலைவி உறவுமுறையினை கடவுள்பக்தர் உறவுமுறையாகக் கூறினர். ஏற்கனவே தொல்காப்பியம் கூறிய அகப்பொருளிற்கு (மனிதக் காதல்) முரணாக இப் புதிய விளக்கமிருந்தமையால், புதிய விளக்கத்திற்குத் தமிழ்ப்புலர்கள் நடுவேயிலிருந்து எதிர்ப்புக்கள் தோன்றின. இந்த எதிர்ப்புக்களை மழுங்கடிப்பதற்காகவே “இறையனார் அகப்பொருள்” எனும் நூலை உருவாக்கி அதற்குத் தெய்வத்தன்மை கற்பித்து இறைவனே இந்த நூலை இயற்றியதாகக் கூறினார்கள். இறைவனே எழுதியமையால் இது முதல் நூல் என்றும் கூறினர், ஆனால் உண்மையில் இது தொல்காப்பியத்தின் வழி நூலேயாகும். இதனை அடிப்படையாகக் கொண்டே, முதற் சங்கத்தில் சிவனே வந்து உட்கார்ந்ததாகக் கதை தோன்றியது. இந்த நூலில் பேரின்பக் காதலைப் பற்றி நேரடியாகக்கூறவில்லை என்றும், உரையாசிரியர்களே சான்று காட்டினர் எனவும் விளக்குகிறார் மயிலை சீனி. வேங்கடசாமி (களப்பிரர் ஆட்சியில் தமிழகம்). அந்த உரையும் ஏட்டில் எழுதப்படாமல் பத்துத் தலைமுறைகள் வரையில் வேதங்கள் போலச் செவி வழியாகவே கடத்தப்பட்டு வந்து, சம்மந்தர் காலத்திலேயே ஏட்டில் எழுதப்பட்டது. இவ்வாறு வாய்வழியாகவே சில நூற்றாண்டுகளாகக் காவி வரப்படும் போது உரைகள் எவ்வாறு திரிந்து செல்லும் என்று சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

இதனாலேயே அகப்பொருளுரையில் பாண்டிய நாடு கடலில் மூழ்கியதாகக் கூறப்படுவதனை நாம் பெரிதுபடுத்தவேண்டியதில்லை.

மற்றும் புறநானூறு (புறம் 6:67), கலித்தொகை (கலித். 104) போன்ற சங்க காலப் பாடல்களில் கடற்கோள்கள் பற்றிய தகவல்கள் வெறும் உயர்வு நவிற்சியாகவோ அல்லது தொகுப்பின் போது ஏற்பட்ட சிக்கல்களாகவோ அல்லது பாடல்களுக்கான பொருள் கோடலில் ஏற்பட்ட குழப்பமாகவோ காணப்படலாம். இது பற்றிய மேலும் பல தெளிவுகள் எதிர்கால ஆய்வுகளில் கிடைக்கக்கூடும். இறுதியாக தமிழரின் தொன்மையினை நாம் தேடவேண்டியது கடலில் குமரிக்கண்டத்திலல்ல, மாறாக கீழடி போன்ற வைகை, தாமிரபரணி ஆற்றங்கரைகளை அடுத்துள்ள நிலப்பரப்புக்களிலேயே என உறுதியாகக் கூறலாம்.

### இராவணன் காலத்துத் தமிழ்:

தமிழ் மொழி தொடர்பான கருதுகோள்களில் ஒன்று ‘இராவணன் காலத்துத் தமிழ்’ என்பதாகும். உண்மையில் இராமயணமோ அல்லது அதில் இடம் பெறுகின்ற கதை மாந்தர்களோ எல்லாமே கற்பனையானவையே. இராமயணத்தை ஒரு வரலாற்று நிகழ்வாக ஏற்றுக்கொள்ள முடியாது. இருபத்தி நான்கு வகையான இராமாயணங்கள் இந்தியாவில் மட்டுமே இருப்பதாக சி. ஆர். சீனிவாசய்யங்கார் ‘இதர இராமாயணங்கள்’ என்ற நூலில் கூறியுள்ளார். இது தொடர்பாக ராமானுஜன் (A. K. Ramanujan) என்பவர் எழுதிய ‘Three Hundred Ramayanas: Five Examples and Three Thoughts on Translation’ என்ற கட்டுரை பல்கலைக்கழகப் பாடத் திட்டத்திலேயே இடம்பெற்றுப் பின்னர் இந்துத்துவா அமைப்பினரின் அழுத்தங்களால் பாடத் திட்டத்திலிருந்து நீக்கப்பட்டிருந்தது. இந்தியாவிற்கு வெளியேயும் இராமயணங்களுண்டு (சீன ராமாயணம், தாய்லாந்து ராமாயணம்...). இவற்றில் பல இராமாயணங்களில் வரும் இராவணனுக்கும் தமிழுக்குமிடையே எந்தத் தொடர்புமில்லை. வால்மீகி இராமயணமே முதன்மையானது என்பதனால் அது பற்றிப் பார்ப்போம். வால்மீகி இராமாயணத்தில் இராவணன் வாழ்ந்ததாகக் கருதப்படும் தீவு இலங்கையல்ல எனக் கூறினால் நீங்கள் வியப்படையக் கூடும். அவ்வாறாயின் இராமாயணத்தில் குறிப்பிடப்படும் இராமேசுவரம், தனுசுகோடி, இலங்கை வேந்தன் என்பனவெல்லாம் என்னவாயிற்று என எதிர்க் கேள்வி கேட்கவும் கூடும். இந்தக் கேள்விக்கான பதில், அவையெல்லாம் கம்பரின் இடைச் செருகல்களே தவிர அவை எதுவுமே வால்மீகி இராமாயணத்தில் இல்லை என்பதேயாகும். வால்மீகி இராமாயணத்தில் இராவணனின் வாழ்ந்த இடமாக ‘லங்கா’ குறிப்பிடப்படுகின்றது என்பது உண்மையே. ஆனால்

லங்கா என்ற சொல் சமசுகிரதத்தில் நீரால் சூழப்பட்ட தீவினையே குறிக்கும் (இலங்கையினையல்ல). வால்மீகி இராமாயணத்தின் படி இராவணன் ஒரு தீவில் (லங்காவில்) வாழ்ந்தாகக் கூறப்படுகின்றதே தவிர, அத் தீவு இலங்கை எனக் குறிப்பிடப்படவில்லை. புவியியலை அடிப்படையாகக் கொண்டே, வால்மீகி இராமாயணத்தின் இராமாயணப்போர் நடைபெற்றது இலங்கையில் அல்ல எனப் பின்வரும் அடிப்படைகளில் அறிந்துகொள்ளலாம்.

1. கிட்கிந்தையில் இருந்து படைகளுடன் மகேந்திரமலையைக் கால்நடையாகச் சென்றடைய இராமன் எடுத்துக் கொண்ட காலம் வெறும் நான்கே நாட்கள் என்கின்றது வால்மீகி ராமாயணம். கிட்கிந்தை (Kiskkindha) என்பது இந்தியாவின் இன்றைய மத்தியப்பிரதேசத்தில் யபல்பூர் (Jabalpur) பகுதியினைக் குறிக்கும். இங்கிருந்து ராமேசுவரத்தை நான்கு நாட்களில் நடந்து கடப்பது என்பது நினைத்தும் பார்க்க முடியாதது. {இப்போது இத் தூரத்தை நடப்பதற்கு எடுக்கும் காலத்தை ‘கூகுள் மப்’ உதவியுடன் நீங்களே கணித்துக் கொள்ளலாம்}.

2. அனுமன் லங்கா (Island) வுக்குச் சென்றபோதும், இராமன் லங்காவை பார்வை இட்டபோதும் மகேந்திரகிரி மலையில் ஏறி நின்று பார்த்தார்கள் என்று வால்மீயும், கம்பரும் ஒரே மாதிரிக் கூறுகின்றார்கள். இராமேசுவரத்திலோ அல்லது அதனையொட்டிய எந்தப் பகுதியிலுமோ அவ்வாறான எந்த மலையுமில்லை. (சுற்றுலாப் பயணிகளிற்கான வழிகாட்டிகள் வெறும் சிறு மண் திட்டினையே மகேந்திரகிரி மலை என்கின்றனர், ஆனால் முன்பு மலையிருந்து அழிந்ததற்கான சான்றுகள் கூட எதுவும் அங்கில்லை).

3. வால்மீகி இராமாயணத்தில் பாலத்தின் மறுபக்கத்திலும் ஒரு மலை (Trikuta hill) உண்டு. மன்னாரிலோ அல்லது அதனை அண்மித்த பகுதிகளிலும் கூட அவ்வாறான மலை எதுவுமேயில்லை.

4. வால்மீகி ராமாயணத்தின்படி பாலமானது ஐந்து நாட்களில் முறையே 14, 20, 21, 22, 23 Jojans ஆகக் கட்டி முடிக்கப்பட்டது. பரமசிவ அய்யர் இந்த மொத்தமான 100 jojans நீளம் என்பது 115 மைல் தூரமெனக் கணிப்பிடுகின்றார் (Ramajana and Lanka by T. Paramasiva Iyer). இராமேசுவரம்-மன்னார் தூரம் 30 மைல்களாகவிருப்பதால், இராமாயணம் குறிப்பிடும் பாலம் இதுவல்ல.

மேற்கூறிய காரணங்களை அடிப்படையாகக் கொண்டு வால்மீகி இராமாயணம் குறிப்பிடும் லங்கா (தீவு) என்பது இலங்கையல்ல என்பதும்; ராமர் கட்டிய பாலம் இராமேசுவர மன்னார் பாலம் அல்ல என்பதும் தெளிவு. அவ்வாறாயின் அந்த லங்கா எங்குள்ளது? என்ற கேள்வி ஏற்படும். கிட்கிந்தையில் இருந்து காட்டு வழியாக நான்கு

நாட்களுக்குள் ஒரு படை கடந்து செல்லும் தூரத்தில் இருப்பது ஒரிசா தான் (சிறிய வேறுபாடு புறக்கணிக்கத்தக்கது). அங்கு மகேந்திரமலையும் கடற்கரையும் இருப்பது கூடுதல் செய்தி. இங்கு எமது நோக்கம் லங்கா எது என்று கண்டுபிடிப்பதல்ல, மாறாக லங்கா என்பது இலங்கையல்ல எனக் கூறுவதே என்பதால் இத்துடன் லங்கா எங்கிருக்கின்றது என்ற ஆய்வினை நிறுத்துவோம். (இதற்கு மேலதிக ஆய்வுகள் தேவை). எனவே வால்மீகி இராமயணத்துக்கும், இலங்கைக்கும் தொடர்பேதுமில்லாத போது; இராவணன் எனும் கதை மாந்தனை ஒரு தமிழனாகக் கருதுவது பொருத்தமற்றது.

பத்தாம் நூற்றாண்டு வரை லங்கா என்பது பற்றி யாருமே ஆந்திராவினைத் தாண்டிச் சிந்திக்கவில்லை. இதில் சிறிது குழப்பம் சம்பு இராமாயணத்தில் (Champu Ramajana in CE 1010-1050) ஏற்பட்ட போதிலும், இலங்கையுடன் தெளிவாக ராமாயணத்தைத் தொடர்புபடுத்தியவர் கம்பரே ஆகும். இதற்கு கம்பரின் வாழ்விடமும், அந்த நூற்றாண்டுகளில் இடம்பெற்ற சோழப் படையெடுப்புக்களும் காரணமாகவிருக்கக்கூடும். அமைவிடத்திற்கு எடுத்துக்காட்டாக, இந்தோனிசியா இராமாயணத்தில் இராவணன் வாழ்ந்த தீவாக அங்குள்ள ஒரு தீவே (லங்கா) கருதப்படுகின்றது. பின்னர் இந்தியாவிலுள்ள இராமாயணங்களைப் பொதுமைப்படுத்தும் நோக்கில் 'இலங்கையே லங்கா' என்ற கம்ப இராமாயணக் கருத்து' வட இந்தியாவில் ஏற்கப்பட்டது. சோழப் படையெடுப்புக்களின் தாக்கத்தாலும் பவுத்தத்தில் பார்ப்பனிய ஊடுருவல் செல்வாக்கினாலும் இலங்கையிலும் இக் கருத்து பரவியது. பரமசிவ ஐயர், தான் எழுதிய Ramajana and Lanka என்ற நூலில் கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் அவர்கள் 1934 இல் ஆற்றிய உரை (லங்காதான் இலங்கை என்ற உரை) ஒன்றின் பின்னரே, 'இலங்கைதான் லங்கா 'என்ற செய்தி இலங்கையில் மிகவும் பரவலடைந்தாகக் கூறுகின்றார். முடிவாக, அறிவியல்ரீதியில் இராவணன் என்ற கதை மாந்தரை ஒரு தமிழராகவோ அல்லது ஒரு வரலாற்று மாந்தராகவோ கருத முடியாது.

## சிந்துவெளி நாகரிகமும் தமிழும்:

சிந்துவெளி முத்திரைகள் இன்னமும் எல்லோராலும் பொதுவாக ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் முழுமையாகப் படித்தறியப்படவில்லை. எனினும் தமிழுக்கும் சிந்துவெளி குறியீட்டு எழுத்துகளுக்குமிடையேயான இடைவெளி குறைந்து செல்லுகின்றது. அண்மைக் காலத்தில் மரபணுச் சோதனைகளின் மூலம் சிந்துவெளி நாகரிகம் ஆரியரின் வருகைக்கு முற்பட்டது எனவும், அது திராவிடர்களுக்குரியது என்பதும் ஐயத்திற்கு இடமின்றி உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது. குறிப்பாக இங்கிலாந்திலுள்ள ஒரு

பல்கலைக் கழகத்தினைச் சேர்ந்த 16 அறிவியலாளர்கள் (16 scientists led by Prof. Martin P. Richards of the University of Huddersfield, U.K.) மரபணுக்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொண்ட ஒரு ஆய்வில், ஆரியர்களின் இந்தியப் படையெடுப்பு ஐயத்திற்கு இடமின்றிச் சான்றுப்படுத்தப்பட்டுவிட்டது. இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட அரியானாவின் ராகிகடி ஆய்வும் இதனையே வலியுறுத்தியிருந்தது ("An Inconvenient Truth" என்ற தலைப்பில் 'இந்தியா டுடே' 2018 செப்.10ல் வெளிவந்தது). இவ்வாறான ஆரியர் வருகைக்கு முற்பட்ட சிந்துவெளி நாகரிகத்தில் தமிழ் / தொல் தமிழ் இருந்தமைக்குமான சான்றுகளும் இன்று பெருமளவில் கிடைத்துள்ளன. சிந்துவெளி நாகரிக எழுத்துகளுக்கும் (தொல் தமிழி) தமிழிக்குமுள்ள தொடர்புகளும் வெளிவந்துவிட்டன. குறிப்பாகத் தமிழக அரசு வெளியிட்ட கீழடி நான்காம் கட்ட அகழ்வாய்வின் அதிகாரரீதியான முடிவுகளில் இத் தொடர்பு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதே போன்று ஆய்வாளர் ஆர்.பாலகிருஷ்ணன் சங்க இலக்கியங்களில் காணப்படும் ஊர்ப் பெயர்கள் (கொற்கை, வஞ்சி, தொண்டை...) சிந்துவெளி நாகரிகப் பகுதிகளிலும் காணப்படுவதனைக் கொண்டு, பழந் தமிழர்களுக்கும் சிந்துவெளி நாகரிகத்திற்கும் இடையேயான தொடர்புகளைப் படம்பிடித்துக் காட்டியிருந்தார். பேராசிரியர் மதிவாணன் அவர்கள் சிந்துவெளி எழுத்துகள் தொடர்பாக மேற்கொண்டு வரும் ஆய்வுகளும் குறிப்பிடத்தக்கவை.

**சிந்துவெளி எழுத்துகளை வாசித்தறிவதற்கான திறவுகோல் (யாழ்ப்பாண) ஆனைக்கோட்டை முத்திரையிலுள்ளது**

'சிந்துவெளி எழுத்து படிப்பது எப்படி' என்ற நூலில் பேரா. மதிவாணன் தமிழி - சிந்துவெளி எழுத்துகளுக்கான இலக்கணத் தொடர்பினை படம் பிடித்துக் காட்டியிருப்பார். ஐயாவின் பின்வரும் கருத்து முதன்மையானது.

> "சிந்துவெளி எழுத்துகள் தமிழியின் முன்னோடி எழுத்துகளே என்பதற்கான அசைக்கமுடியாத சான்றாக யாழ்ப்பாணத்திலுள்ள ஆனைக்கோட்டை முத்திரை [Anaicoddai Seal] காணப்படுகின்றது"

ஆனைக்கோட்டை முத்திரையிலுள்ள மேலேயுள்ள எழுத்துகள் சிந்துவெளி (IVC) எழுத்துகள், கீழுள்ளவை தமிழி (Tamizhi). முதலில் தமிழைப் பார்த்தால், இதனை 'TI VI KO' எனப் படிக்கின்றார் பேரா. மதிவாணன் அவர்கள். அதாவது தீவின் கோ (தீவின் தலைவன்/ அரசன்) என்பதாகும். இங்கு சிந்துவெளி எழுத்துகளும் அதே ஒலிப்பினையே கொண்டிருப்பதாக, பேரா. மதிவாணன் இதுவரைக் கண்டுபிடிக்கப்பட்ட எழுத்துகளைக் கொண்டு நிறுவுகின்றார். இவர்

இவ்வாறு கூறும்போது முன்பு நான் படித்த 'ரொசெட்டா கல்' {Rosetta Stone} பற்றிய செய்தி எனக்கு நினைவுக்கு வந்தது. சிந்துவெளி எழுத்துகளைப் படித்தறிவதிலுள்ள இன்றைய சிக்கல்கள் போல, அன்று தொல்-எகிப்திய மொழியினைப் படிப்பதிலும் சிக்கல்கள் நிலவிய போது அதனைத் தீர்த்து வைத்ததே 'ரொசெட்டா கல்' தான். ரொசெட்டா கல் (Rosetta Stone) என்பது, கல்வெட்டின் ஒரே பக்கத்தில் இரு மொழிகளில் எழுதப்பட்டிருக்கும் கல்வெட்டுகளைக் குறிக்கும். ஒரே பத்தியை பட எழுத்தையும் (hieroglyphic) உள்ளடக்கிய இரண்டு எகிப்திய எழுத்துமுறைகளிலும், செந்நெறிக் கிரேக்க மொழியிலும் எழுதிய ஒரு கல்வெட்டு ஆகும். இங்கு மேலேயும் நடுவேயும் தொல்எகிப்திய மொழியும் (Ancient Egyptian) கீழே தொல்கிரேக்க மொழியும் (Ancient Greek) எழுதப்பட்டிருந்தது. இங்கு கீழேயுள்ள தொல்கிரேக்க மொழியினைப் படித்தவுடன், மேலேயுள்ள தொல் எகிப்திய மொழியினைப் படிப்பதற்கான திறப்பு கிடைத்திருந்தது.



இந்த ஆனைக்கோட்டை முத்திரையினை முதலில் இலங்கை தொல்லியலறிஞர் பேரா. கா. இந்திரபாலா, கீழ் வரியில் அடங்கியுள்ள மூன்று எழுத்துக்களையும் "கோ" "வே" "த" {"கோவேதன்"} என வாசித்திருந்தார். பொ. இரகுபதி இதனைச் சற்று வேறு விதமாக வாசித்துள்ளார் "கோ" + "வேத்" + "அ" {"கோவேதனுடைய"}. இங்கு இந்திர பாலாவின் வாசிப்பினை விட [கோ, வேந்த(ன்) ஆகிய இரு சொற்களுமே ஏறக்குறைய ஒரு பொருளே], பொ. இரகுபதியின் வாசிப்பு பொருத்தப்பாடு கூடியது. ஆனால், பேரா. மதிவாணன் இப்போது மேலுள்ள வரியினையும் தொடர்புபடுத்தி வாசித்திருப்பதே கூடிய பொருத்தப்பாடு மிக்கது. இங்குதான், ரொசெட்டா கல் எடுத்துக்காட்டினையும் பொருத்திப் பார்க்கவேண்டியுள்ளது. ஆனைக்கோட்டை முத்திரையின் தொடர்ச்சியாக பேரா. மதிவாணன் மயிலாடுதுறையில் கிடைத்த சான்றினை [Neolithic polished stone Celt (hand-held axe)] வரிசைப்படுத்துகின்றார். அதில் காணப்படும் எழுத்துகளை "கோ + "கா" + "ங்" (க) + "ன்" எனப் படிக்கின்றார்.

இந்த ஆய்வு கடக்க வேண்டிய தூரம் இன்னமும் உள்ளது. எனினும், ‘ஆனைக்கோட்டை முத்திரை’ வாசிப்பு ஒரு மைல் கல் என்பதனை மறுக்கமுடியாது.

சிந்துவெளிக்கும் தமிழிழுக்குமிடையே நெருங்கிய தொடர்பு காணப்படுவது உண்மை, ஆனால் எத்தகைய தொடர்பு என்பதனை உறுதியாகக் கூற இன்னமும் பல ஆய்வுகள் தேவை.

**தமிழ் சமற்கிரத மொழிகளின் தொன்மை:**

தமிழ்மொழி உட்பட எல்லா இந்திய மொழிகளும் சமற்கிரதத்திலிருந்து தோன்றியது என்ற ஒரு தவறான கருத்தும் சிலரிடையே உள்ளது. இந்தக் கருத்தின் உண்மையினை அறிவதற்கு; தமிழ், சமற்கிரதம் ஆகிய இரு மொழிகளில் எது தொன்மையானது எனக் கண்டறிய வேண்டும். அண்மையில் தமிழகத்தில் பன்னிரண்டாம் வகுப்புப் புத்தகத்தில் தமிழை விடத் தொன்மையான மொழி சமற்கிரதம் (தமிழ் 2300 ஆண்டுகள், சமற்கிரதம் 4000 ஆண்டுகள் தொன்மை) எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இங்கு வேடிக்கை என்னவென்றால் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட பலரே சமற்கிரதத்திற்காகப் பொய்ப் பரப்புரையில் ஈடுபட்டிருப்பதேயாகும். சமற்கிரதத்தின் தொன்மைக்காக வழக்காடுபவர்கள் எல்லோருமே அறிவியலிற்குப் புறம்பாக வெறும் புராணங்களையும், கட்டுக்கதைகளையும், புரட்டல்களையுமே சான்றாகக் கொண்டுள்ளார்கள். இவை பற்றிய ஒரு விளக்கமாகவே இப் பகுதி அமையவுள்ளது. முடியுமானவரை நான் எனது ஆய்வுகளைக் குறித்த பெயரிலிருந்தே தொடங்குவதனை வழக்கமாகக் கொண்டுள்ளேன். அந்த வகையிலேயே இதனையும் அணுகுவோம்.

**தமிழ் சமற்கிரதம் ஆகியவற்றுக்கான பெயர்க் காரணம்**

முதலில் தமிழைப் பார்த்தால், தமிழின் பெயர் இயற்கையாகவே அமைந்துள்ளது என்பதனை ஏற்கனவே பார்த்துள்ளோம் (அமிழ்து, இனிமை, நீர்மை...). அடுத்து சமற்கிரதத்தினைப் பார்ப்போம். சமற்கிரதம் என்பதற்குச் செயற்கையாக நன்றாகச் செய்யப்பட்ட மொழி {சமைக்கப்பட்ட மொழி} என்பதே பொருள் {‘Sanskrit’ is derived from the conjoining of the prefix ‘Sam’ meaning ‘samyak’ which indicates ‘entirely’, and ‘krit’ that indicates ‘done’}. எவ்வாறு நன்றாகச் செய்யப்பட்டது? ஏற்கெனவே இருந்த மொழிகளிலிருந்து சொற்களை (Raw Form) எடுத்து, நன்றாக முழுமையாகச் செய்யப்பட்ட சொற்களே சமற்கிரத மொழிச் சொற்கள் (Refined Form). இன்னமும் விரிவாகச் சொன்னால், இங்கு ஏற்கெனவேயிருந்த பிராகிருதம், தமிழ் போன்ற மொழிகளிலிருந்து எடுத்த சொற்களையும், தாம் ஏற்கனவே கொண்டு வந்த ஐரோப்பிய மொழிச் சொற்களையும் (இவை

எல்லாமே பேச்சு வழக்கிலான சொற்களே) இணைத்து நன்றாகச் செய்யப்பட்ட மொழியே சமற்கிரதமாகும். இவ்வாறு ஐரோப்பிய மொழிச் சொற்களையும், இங்கிருந்த மொழிச் சொற்களையும் இணைத்து உருவாக்கப்பட்ட மொழியாதலாலேயே, சமற்கிரதத்தினை இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தினைச் சேர்ந்த ஒரு மொழி எனப் பல அறிஞர்கள் குறிப்பிடுவார்கள். இப்போது சொல்லுங்கள், சமைக்கப்பட்ட மொழி தொன்மையானதா? அல்லது அந்தச் சமையலிற்கே மூலப்பொருளான மொழி தொன்மயானதா?

## பேச்சு மொழி

மொழிப் பெயர்க் காரணத்தினைப் பார்த்தோம், இப்போது பேச்சு வழக்கில் எந்த மொழி தொன்மையானது எனப் பார்ப்போம். பேச்சு வழக்கில் எந்தமொழி தொன்மையானது எனக் கண்டறிவது இலகுவானதல்ல, ஏனெனில் சைகை மொழியானது (அசைவு மொழி) சில வகையான ஒலிக் கோவைகளாக மாறிப் பின்னரே பேச்சு மொழியாகப் படிமலர்ச்சி பெறும். மேலும், பேச்சு மொழிக்கான தொல்லியல் சான்றுகளும் காணப்பட மாட்டாது. எனவேதான் பேச்சு வழக்கிலான மொழிகளில் எது தொன்மையானது எனக் கண்டறிவது கடினமானது. இங்கு எங்களுக்குச் சார்பாக அமைந்துள்ள விடயம் யாதெனில்; இன்று மரபணு ஆய்வுகள், தொல்லியல் உடற்கூறு ஆய்வுகள் போன்ற அறிவியல் முறைகள் மூலம் சிந்துவெளி நாகரிகம் ஒரு திராவிட நாகரிகம் என்றும், அது ஆரியர்கள் வருகைக்கு முற்பட்டது என்பதும் ஐயத்திற்குச் சிறிதும் இடமின்றிச் சான்றுப்படுத்தப்பட்டுவிட்டது. இவ்வாறான ஆரியர் வருகைக்கு முன்னரே சிந்துவெளி நாகரிகத்தில் தமிழ் இருந்தமைக்குமான சான்றுகளும் இன்று பெருமளவில் கிடைத்துள்ளன. சிந்துவெளி நாகரிக எழுத்துகளுக்கும் (தொல்-தமிழி) தமிழுக்குமுள்ள தொடர்புகளும் வெளிவந்துவிட்டன. எனவே ஆரியர் வருகைக்கு முன்னரே பேச்சு வழக்கில் தமிழ் இருந்தது என்பது உறுதியாகிவிட்டது. ஆரியர்கள் வரும்போதே இங்குள்ள மக்கள் மொழி அறிவுடனேயே இருந்துள்ளார்கள் என்பது உறுதியாகின்றது. எனவே பேச்சுவடிவத்திலும் தமிழ் மொழியானது சமற்கிரதத்தை விடத் தொன்மையானது என்பது தெளிவாகின்றது.

## எழுத்து வடிவம்

எழுத்து வடிவில் எந்த மொழி தொன்மையானது எனப் பார்ப்பதே அறிவியல் சான்றுகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு இலகுவானதும், நடைமுறை வாய்ப்பு உள்ளதுமான ஒரு முறையாகும். ஆனால் இந்த முறையான ஒப்பீட்டிற்கு, வட மொழித் தாங்கலாளர்கள் வரவே மாட்டார்கள். ‘பல்லில்லாதவன் தனக்கு பக்கோடா பிடிக்காது’ என்ற

மாதிரி தமது வேதங்கள் 'எழுதாக் கிளவி' / 'எழுதா மறை' என்பார்கள். (உண்மையில் அவை எழுத்து வடிவம் இல்லாத மறைகளே). ஏற்கெனவே இருந்த சிந்துவெளி (தொல் தமிழி) எழுத்து வடிவம், பிராகிரத பிராமி (அசோகர் கல்வெட்டு வடிவம்), தமிழி போன்ற வரி வடிவங்களிலிருந்து தமக்கு என ஒரு எழுத்து வடிவத்தினை (Sanskrit Nagari) CE 1ம் 4ம் நூற்றாண்டுகளிற்கு இடைப்பட்ட காலத்திலேயே உருவாக்கிக் கொண்டார்கள். அவர்கள் பெரிதும் பயன்படுத்தும் தேவநாகரி வரிவடிவம் CE 4ம் நூற்றாண்டிலேயே உருவானது {சான்று Gazetteer of the Bombay Presidency at Google Books, Rudradaman's inscription from 1st through 4th century CE found in Gujarat, India, Stanford University Archives, pages 30-45, particularly Devanagari inscription on Jayadaman's coins pages 33-34}. தமக்கு என ஒரு சொந்த எழுத்து வடிவம் இல்லாது இன்றும் தேவநாகரி எழுத்து வடிவினையே பயன்படுத்தி வருகின்றார்கள். இந்த 'தேவநாகரி' என்ற சொல்லே தே+நகர் (Devanagari=Deva+Nagari) என்ற இரு சொற்களையே அடிப்படையாகக் கொண்டவை. இவையிரண்டுமே தமிழ்ச் சொற்களையே அடியாகக் கொண்டவை என்பது தெரிந்தால் நீங்கள் வியப்படையக் கூடும். 'தே' என்ற சொல் தெய்வம் என்பதனைத் தமிழில் குறிக்கும். அதே போன்று மக்கள் நகர்ந்து சென்று (move) உருவாகும் இடமே நகர் {ஊர்ந்து சென்று உருவான 'ஊர்' என்பது போல}. இவ்வாறு உருவான தேவநாகரி வடிவமானது வடமொழியில் 7ம் நூற்றாண்டுக்குப் பின்னரே பொதுப் பயன்பாட்டிற்கு வருகின்றது (சான்று Oxford University Press, ISBN 978-0195356663, pages 40 - 42). பன்னிரண்டாம் நூற்றாண்டிற்குப் பின்னர் மிகப் பெருமளவில் எழுதிக் குவித்த அவர்களின் திறமையினை ஒத்துக்கொண்டுதான் ஆக வேண்டும், ஆனால் அவற்றினைக் காலத்தால் முன் கொண்டு செல்ல முயல்வது நேர்மையற்ற செயலேயாகும். அவர்களின் எழுத்து வடிவத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட தமிழி எழுத்து வடிவங்களுக்கான பல சான்றுகள் {அறிவியல் ரீதியில் சான்றுப்படுத்தப்பட்ட பல சான்றுகள்} எமக்கு இன்று கிடைத்துள்ளன.

1. கீழடி (4ம் கட்டம்) அகழ்வாய்வில் கிடைத்த மட்பாண்ட எழுத்துகள் (BCE 6th cent)

(Source: கீழடி 4 ம் கட்ட ஆய்வு பற்றிய தமிழக அரசின் கையேடு)

2. பொருந்தல் அகழாய்வில் கிடைத்த நெல் மாதிரி ஒன்று, அமெரிக்காவில் உள்ள பீட்டா ஆய்வு நிலையத்தில், அறிவியல் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு (Accelerator Mass Spectrometry by the Beta Analytic Lab, USA), அதன் காலம் BCE 450 என கணிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன் இன்னொரு நெல் மாதிரி ஒன்று அதே ஆய்வு நிலையத்தில் காலக் கணிப்புக்கு உட்படுத்தப்பட்டு,

அதன் காலம் BCE 490 என கணித்தறியப்பட்டுள்ளது. இந்த இரண்டு நெல் மாதிரிகளுமே, பொருந்தல் அகழாய்வில் கிடைத்த, இரு வெவ்வேறு மட்பாண்டங்களிலிருந்து எடுக்கப்பட்டவைகளாகும். அந்த மட்பாண்டங்களிலும் தமிழி எழுத்துக்கள் காணப்பட்டன. இந்தக் காலக் கணிப்புகளின்படி, தமிழி காலம் BCE 5-ம் நூற்றாண்டு என்பது ஐயத்திற்கு இடமின்றிச் சான்றுபடுத்தப்பட்டுவிட்டது. மேலும் இந்தக் கண்டுபிடிப்பின் மூலம், தமிழ் எழுத்து அசோகர் பிராமிக்கு இரு நூற்றாண்டுகள் முற்பட்டது (அசோகர் பிராமியின் காலம் BCE 3-ம் நூற்றாண்டு ஆகும்) என்பதோடு, அசோகர் பிராமியில் இருந்து தமிழி உருவாகவில்லை என்பதும் திண்ணம் என்கிறார் முனைவர் ராஜன் அவர்கள்.

(Source: Hindu Newspaper Dated 15.10.2011, porunthal Excavations prove existence of Indian scripts in 5th century BC: expert)

3. வட இலங்கையில் (ஈழம்) தமிழி கல்வெட்டுகளும், தென் இலங்கையில் பிராகிருத பிராமி கல்வெட்டுகளும் கிடைத்துள்ளன. அவைகளில் சில அசோகர் காலத்திற்கும் முந்தியவை என இலங்கைப் பிராமிக் கல்வெட்டுகளின் தந்தை எனக் கருதப்படும் பரனவிதான கணித்துள்ளார். இலங்கை அறிஞர்கள் கருணாரத்னா, பெர்ணான்டோ, மற்றும் அபயசிங்கி ஆகியோர் அசோகர் பிராமிக்கு முன்பே, பண்டைய தமிழி எழுத்து, தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு வந்துவிட்டது என்ற கருத்தைத் தெரிவித்துள்ளனர்.

(Source: டாக்டர் சிற்றம்பலம் அவர்கள் தனது 'யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு' என்ற நூல்)

ஏற்கனவே நாம் பார்த்த ஆனைக்கோட்டை முத்திரை, சிவகளை எழுத்துகள் எனச் சான்றுகளை அடுக்கிக் கொண்டே செல்லலாம். சிவகளையில் கண்டெடுக்கப்பட்ட தமிழி எழுத்துக்கள் பொ.ஆ.மு 395 (BCE 395) ஆண்டு பழமையானவை என தெரியவந்துள்ளதாக தமிழக அரசுத்தரப்பில் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டதும்; இதையடுத்து நீதிபதிகள், தமிழ் மொழியே இந்தியாவின் பழமையான மொழி எனத் தெரிய வருகிறது எனக் கருத்து தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

மேற்கூறிய சான்றுகளில் சிலவற்றைக் கருத்திற்கொண்டு University of Cambridge இனைச் சேர்ந்த பேராசிரியர் திலிப் கே. சக்ரபர்த்தி (Dilip K. Chakrabarti) அவர்கள் தான் வெளியிட்ட An Oxford Companion to Indian Archaeology, Indian Archaeological History ஆகிய இரு நூல்களிலும் தமிழி ஆனது அசோகன் பிராமிக்கு முற்பட்டது என்று தெரிவித்துள்ளார். அவ்வாறு அவர் கருத்துத் தெரிவித்தபோது, கீழடி மற்றும் சிவகளை எழுத்து

முடிவுகள் வந்திருக்கவில்லை என்பதும் நினைவிற் கொள்ளத் தக்கது. எனவே தமிழியே எழுத்து வடிவில் தொன்மையானது என்பதனை யாருமே மறுக்கமுடியாது. இந்தியாவில் கிடைத்த பழங் கல்வெட்டுகளில் 65 விழுக்காட்டிற்கும் மேற்பட்டவை தமிழிலேயே இருப்பதும் கவனிக்கத்தக்கது. அண்மையில் கீழடி அகழ்வாய்விலும் பல தமிழி எழுத்துகள் பொறிக்கப்பட்ட சான்றுகள் பெருமளவிற்குக் கிடைத்துவருகின்ற போதும், அவற்றினை உரியமுறையில் ஆய்வுகளுக்கு உட்படுத்த நடுவண் அரசு முட்டுக்கட்டை போட்டுவருவது தெரிந்ததே.

### மொழியின் சிறப்பு

தொன்மை மட்டுமல்ல, மொழியின் சிறப்பிலும் தமிழே உயர்ந்தது. தமிழ் இயற்கையாக வாழ்வியலோடு ஒன்றி அறிவியல் மொழியாகக் காணப்பட, சமற்கிரதமானது புராணங்களை அடியாகக் கொண்ட ஒரு ஆதிக்க மொழியாகவேயுள்ளது. 'எல்லாச் சொற்களும் பொருள் குறித்தனவே' என்ற தொல்காப்பிய விதியோ, தமிழ்மொழியிலுள்ள வேர்ச்சொல் விளக்கங்களையோ சமற்கிரதத்தில் எண்ணிப் பார்க்கவே முடியாது. எடுத்துக்காட்டாக Planet எனும் ஆங்கிலச் சொல்லுக்கான தமிழ்ச்சொல் (கோள்) சமற்கிரதச்சொல் (கிரகம்) என்பவற்றினையே எடுப்போம். இங்கு கிரகம் என்பது ஆளுகைக்காரர் என்ற பொருளில் சோதிட நம்பிக்கையினையும், கோள் என்ற அறிவியற்சொல் தாமாக ஒளிராமல் விண்மீன்களிலிருந்து ஒளியினைக் கொள்வதால் {மின்னுவதால் ஏற்பட்ட மின் 'மீன்' ஆனது போல, கொள்வதால் ஏற்பட்ட கொள் 'கோள்'} கோள் என அறிவியலையும் (சங்க காலத்திலேயே) பேசியுள்ளது. ஒரு புறத்தில் 'பிறப்பொக்கும்' என சமஅறம் பேசும் தமிழ் எங்கே? 'சதுர் வர்ணம் மயா சிருஷ்டம்' என சாதி முறையினைக் கடவுளே படைத்தாகக் கூறும் வடமொழி எங்கே?. மொழியின் பெருமை பேசினால் படலம் நீளும் என்பதால் இத்துடன் முடிப்போம்.

### பாடநூல் குழப்பம்

இறுதியாக, மீண்டும் பாடப் புத்தகத்திற்கு வந்து, ஏன் அவ்வாறு குறிப்பிடப்பட்டது எனப் பார்ப்போம். உண்மையில் இது அறிஞர் George L. Hart என்பவரின் கருத்தாகும். அவர் சமற்கிரதத்தின் தொன்மையினைக் கணிக்கும் போது ஆரியர்களின் படையெடுப்பின் முதல் அலையான 4000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தினையும் (BCE 2000), தமிழின் தொன்மையினை தமிழி எழுத்துகளின் முந்திய கண்டுபிடிப்புக் காலத்தையும் (BCE 300) {உண்மையில் அதனையும் தாண்டிய பல தமிழி எழுத்துகள் இப்போது கண்டுபிடிக்கப்பட்டாலும், அவற்றினை BCE 300 இற்குள் அடக்கும் முயற்சி ஒன்று இந்திய

நடுவண் அரசால் அசோகரின் கல்வெட்டினையே முந்தியதாகக் காட்ட மேற்கொள்ளும் முயற்சியாக மேற்கொள்ளப் படுகின்றது} கவனத்திற் கொண்டு இந்த முடிவிற்கு வந்துள்ளார். அதாவது சமற்கிரத்தின் பேச்சு வடிவத் தொடக்க காலத்தையும் (BCE 2000), தமிழ் மொழியின் எழுத்து வடிவம் கிடைத்துள்ள காலத்தையும் (BCE 300) ஒப்பிட்டுத் தொன்மையினைக் கணித்துள்ளார். இது முற்றிலும் தவறு. ஒன்றில் இரு மொழிகளின் பேச்சுத் தொன்மையினை ஒப்பிட்டிருக்க வேண்டும் அல்லது சான்றுகள் அடிப்படையிலான எழுத்து வடிவத்தினையே ஒப்பிட்டிருக்க வேண்டும். தமிழ் சமற்கிரத பேராசிரியரான அவர் இன்னொரு இடத்தில் புத்தகம் என்ற சொல்லைச் சமற்கிரதச் சொல்லாகவே கூறுகின்றார். உண்மையில் அது ஒரு தமிழ்ச் சொல். பழங்காலத்தில் ஓலைச் சுவடிகளைப் பழுதடையாமல் காப்பதற்காக பொத்தி வைப்பதால் ஏற்பட்ட ‘பொத்தகம்’ என்ற சொல்லே மருவி புத்தகம் ஆகியது. அதனை எடுத்து ‘ஸ்’ என்ற எழுத்தை நுழைத்து ‘புஸ்தகம்’ என வடமொழியாக்கிக் கொண்டார்கள். அச் சொல்லினைத் தவறாகக் கருதியது போன்றே, இந்த ஒப்பீட்டினையும் தவறாகவே அணுகியுள்ளார். அவரின் பிழையான ஒப்பீட்டினை அப்படியே பாட நூலில் உள்வாங்கியிருப்பதனை என்ன சொல்வது! முன்பொரு முறை மோடியே ‘தமிழே சமற்கிரதத்தை விடத் தொன்மையானது’ எனக் கூறியிருக்க, மோடியின் அடிமையான தமிழக அரசு இவ்வாறு பாடப்புத்தகத்தை வெளியிடுவதனை என்ன சொல்வது? ‘More loyal than the king’ என்பதுதானே நினைவிற்கு வந்து தொலைகின்றது.

சுருக்கமாகக் கூறினால், மேலே தமிழே சமற்கிரதத்தைவிடத் தொன்மையானது என மொழிப்பெயர், பேச்சு வடிவம், எழுத்து வடிவம் என்பவற்றைக் கொண்டு நிறுவினோம். எனவே சமற்கிரதத்தித்திலிருந்தே தமிழ் மொழி தோன்றியது என்பது தவறான கருத்து என்று தெளிவாகின்றது.

## முதலாம் படலத்தின் பிழிவு:

இப் படலத்தில் எமது மொழியான ‘தமிழ்’ என்பதற்கான பெயர்க் காரணத்தினையும், அப் பெயர் பழந் தமிழ் இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்ட சான்றுகளையும் பார்த்தோம். தமிழ் மொழியின் தோற்றம் பற்றிய சில தவறான கருதுகோள்களான ‘கல் தோன்றி மண் தோன்றாக் காலத்துத் தமிழ்’, ‘குமரிக்கண்டம்’, ‘இராவணன் காலத்துத் தமிழ்’, ‘சமற்கிரதத்திலிருந்து தோன்றிய தமிழ்’ என்பனவற்றையும் பார்த்தோம். சமற்கிரதத்தினை விடத் தொன்மையான மொழி தமிழ் என்பதனையும், சிந்துவெளிக்கும் தமிழியிக்குமான தொடர்பினையும் கூடப் பார்த்தோம். முடிவாக, எமது மொழி இயல்பாகத் தோன்றிப் பல படிமுறைகளில் படிமலர்ச்சியடைந்து வந்த ஒரு மொழியாகும்.

## துணை நின்ற நூல்கள்


- பத்துப்பாட்டு ஆராய்ச்சி - இராசமாணிக்கர்.
- அறியப்படாத தமிழ்மொழி - கண்ணபிரான் (KRS).
- இதர இராமாயணங்கள் - சி.ஆர்.சீனி வாசய்யங்கார்.
- சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம் - ஆர். பாலகிருஷ்ணன்.
- சிந்துவெளி எழுத்து படிப்பது எப்படி - பேரா.மதிவாணன்.
- Ramajana and Lanka - T. Paramasiva Iyer.

# இரண்டாம் படலம்

## தமிழ் மொழியின் சிறப்பு

முதலாம் படலத்தில் எமது மொழியின் தோற்றம் மற்றும் பெயருக்கான காரணம் என்பவற்றைப் பார்த்திருந்தோம். இப் படலத்தில் எமது மொழியின் தனிச் சிறப்புகள் பற்றிப் பார்ப்போம். ‘தமிழ்’ என்றவுடனேயே எமக்கு உடனே நினைவிற்கு வரும் முதலாவது சிறப்பியல்பு, அது ஒரு செம்மொழி என்பதேயாகும். எனவே அதனையே முதலில் பார்ப்போம்.

**செம்மொழியான தமிழ்:**

இன்று உலகில் ஆயிரக்கணக்கான மொழிகளிருந்தாலும் அவற்றின் தொன்மை, இலக்கியச் செழுமை, வரலாறு போன்ற காரணிகளை அடிப்படையாகக் கொண்டு; ஏழு மொழிகள் மட்டுமே செம்மொழிகளாக உலகளாவியரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் தமிழும் ஒன்று. இவ்வாறு ஏழு மொழிகள் செம்மொழிகளாகவுள்ளபோதும் அவற்றில் தமிழும், சீன மொழியும் மட்டுமே பெருமளவிற்குப் பேச்சு மொழியாகவும், கணினிப் பயன்பாட்டிலும் உள்ள மொழிகளாகும். ஏனைய செம்மொழிகளைப் பெருமளவிற்கு இன்று பொதுப் பயன்பாட்டில் காணமுடிவதில்லை. எடுத்துக்காட்டாக, சமற்கிரதத்தை எடுத்தால் வெறும் 14135 பேர் மட்டுமே அதனைத் தாய்மொழியாகக் கொண்டுள்ளனர் {source: Census of India, 2001. Office of the Registrar and Census}. இத் தொகை கூட மிகைப் படுத்தப்பட்டது என்று கூறுவோரும் உள்ளார்கள். இவ்வாறான நிலையிலேயே தமிழ், சீனம் நீங்கலான ஏனைய செம்மொழிகள் காணப்படுகின்றன. இவ்வாறு இன்றும் பிழைத்திருக்கும் இரண்டே இரண்டு செம்மொழிகளில் ஒன்றான தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிருப்பதற்கு நாம் பெருமைப்பட வேண்டும்.

ஒரு மொழி செம்மொழியாகக் கருதப்படுவதற்கு 11 தகமைகள் தேவை என்று அறிஞர்கள் கருதுகின்றார்கள். அவையாவன வருமாறு.

1. பழமையானது – Antiquity
2. தனித்தன்மையானது – Individuality

3. பொதுவான பண்புகள் – Common characters
4. நடுநிலையானது – Neutrality
5. பெற்றோர் உறவு – Parental kinship
6. கலை - பண்பாடு – Culture & Art
7. மொழியின் விடுதலைத்தன்மை (சுதந்திரம்) – Independence
8. இலக்கியப் பழமை – Literary prowess
9. சிறந்த சிந்தனைகள்/சிறந்த எண்ணங்கள் – Noble ideas
10. தனித்தியங்கும் தன்மை – Acting independently
11. மொழியியல் கொள்கைகள் – lingustics policies

மேற்கூறிய தகைமைகளில் ஆகக் குறைந்தது ஏழு/எட்டு தகைமைகளைக் கொண்டிருந்தாலே ஒரு மொழி செம்மொழியாகும். ‘‘நம் மொழி மட்டுமே உலகில் இந்தப் பதினொரு தகைமைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது’’ என கார்வட் தமிழிருக்கையின் அறிக்கையொன்றில் கூறப்பட்டுள்ளது {Source: Harvard Tamil chair Inc}. இவ்வாறு ஒரு மொழி செம்மொழியாகத் தகுதியடைவதற்கான எல்லாத் தகைமைகளையும் கொண்ட உலகின் ஒரேயொரு வாழும் மொழியாக எமது மொழி திகழ்வது உண்மையிலேயே நாம் பெருமைப் பட வேண்டிய ஒன்றல்லவா!

## தமிழில் எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே:

‘எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே’ என்கின்றது தொல்காப்பியம். சொற்கள் உருவாகும் முறையைத் தொல்காப்பியர் விளக்குகிறார். சொல் ஓர் எழுத்தினாலும், இரண்டு எழுத்தினாலும் அதற்கு மேற்பட்ட பல எழுத்துகளினாலும் அமையும் என்று குறிப்பிடுகிறார் (தொல். எழுத்து. 45). இவ்வாறு எழுத்துகள் இணைவதால் அமையும் சொல் பொருள் தந்தால்தான் சொல் எனப்படும் என்பதை,

> ‘‘எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே’’
>
> [தொல்.சொல். 157]

என்று தெளிவுபடுத்துகிறார். இத்தகைய பெருமை (எல்லாச் சொற்களுக்கும் பொருள் இருக்கும் பெருமை) வேறு எந்த மொழிக்கு இருக்கின்றது! இங்கு உங்களுக்கு ஒரு கேள்வி எழலாம்! அதாவது தமிழிலுள்ள வேற்றுமை உருபுகள், காலம் காட்டும் இடைநிலைகள், விகுதிகள் என்பவற்றுக்குப் பொருள் உண்டா? என்ற ஐயம் எழலாம். தொல்காப்பியர் இவற்றை ‘இடைச் சொற்கள்’ என்று

குறிப்பிடுகின்றார். ‘இடைச் சொற்கள்’ பொருள் உடையன , ஆனால் தனித்து வழங்கும் ஆற்றல் இல்லாதவை; பெயர், வினைகளைச் சார்ந்து வழங்கும் இயல்பினை உடையன என்று இடையியலில் கூறுகிறார். இதனையே இக் கால அறிஞர்கள் உருபன், உருபனியல் போன்றவற்றால் விளக்குகின்றார்கள்.

தமிழில் சொற்கள் பொருள் குறித்தவை என்பது மட்டுமல்லாமல்; அச் சொற்கள் அறிவியல், வாழ்வியல், இயற்கை என்பவற்றுடன் தொடர்பானவை. எடுத்துக்காட்டாகச் சில சொற்களைப் பார்ப்போம். ‘Planet’ என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நிகரான தமிழ்ச் சொல் எது? எனக் கேட்டால், பலரும் ‘கிரகம்’ என்று சொல்லக்கூடும். உண்மையில் ‘கிரஹம்’ என்ற சொல் வடமொழிச் சொல்லாகும். அதனையே நாம் கிரந்தம் நீக்கி ‘கிரகம்’ என எழுதுகின்றோம். அச் சொல் தமிழல்ல. அதற்கான தமிழ்ச் சொல் ‘கோள்’ என்பதாகும். இச் சொல்லுருவாக்கத்தினைப் பார்ப்போம். கோள்கள் தாமாக ஒளிரும் தன்மையில்லாதவை. விண்மீன்களிலிருந்து ஒளியினைப் பெற்றே (கொள்) ஒளிர்வன. இவ்வாறு ஒளியினைக் கொள்வதால் ‘கோள்’ எனப்பட்டது. அதே போன்று Star தாமாகவே ஒளிரக்கூடியது (மின்னுதல்) என்பதால், அது மீன் எனப்பட்டது. ‘கொள்வதால் கோள் (Planet), மின்னுவதால் மீன் (Star)’ . இச் சொற்கள் சங்க காலத்திலேயே பயன்படுத்தப்பட்டவை. இதே நேரத்தில் இன்னொரு மொழியிலுள்ள சொல்லுடன் இதனை ஒப்பிட்டுப் பார்ப்போம். ‘Planet’ இனைக் குறிக்கும் வடமொழிச் சொல் கிரஹம் (ग्रह) என்பதாகும். இப்போது கிரகம் (ग्रह) என்ற வடசொல்லிற்கு என்ன விளக்கம் தெரியுமா? ‘ஆளுகைப்படுத்தல்’ என்பதேயாகும். நவக்கிரகம் (नवग्रह) என்பது ‘ஒன்பது ஆளுகைக்காரர்கள்’ எனப் பொருள்படும். அதாவது சோதிட மூட நம்பிக்கையினை அடிப்படையாகக் கொண்ட விளக்கமே கிரகம் என்பதாகும். தமிழ்ச் சொல்லாக்கத்தின் அறிவியலினைப் பார்த்தீர்களா! அதே போன்று ‘உலகு’ என்ற சொல்லினை எடுப்போம். இதன் வேர்ச் சொல் ‘உல்’ (உல்லுதல்) என்பதாகும். ‘உலா’ என்பது நாம் பொதுவாக அறிந்த சொல் (வீதி உலா). இதிலிருந்து பிறந்ததே ‘உலகு’ என்ற சொல்லாகும். உழல்வதால் (சுழலுதல்) உலகு.

சில உயிரிகளிற்கான பெயரிடலையும் பார்ப்போம். ‘கிளி’ என்ற பறவையானது எவ்வாறு அப் பெயர் பெற்றது? கிளியே மனிதர்களைப் பார்த்துப் பேசக்கூடிய பறவை (கிளைப்பது). கிளைப்பதால் கிளி ஆகியது என்கின்றார் பாவாணர். ‘அணில்’ முதுகில் மூன்று வரிகளை (அணி) உடையதாகையால் அப்பெயர் பெற்றது. இராமயணத்தில் வேண்டுமானால் இராமர் பாலங் கட்ட உதவிய அணிலைத் தூக்கித் தடவியதால் அணிலின் முதுகில் மூன்று கோடுகள் வந்ததாகக்

‘கதை’ விடப்படலாம்; ஆனால் தமிழிலோ கோடுகள் வரிசையாக இருந்ததாலேயே, அவ்வுயிரியே அணில் எனப் பெயரே பெறுகின்றது {‘**மூவரி அணில் என அடை கொடுத்து ஓதி னார்**’: தொல்காப்பியம் மரபியல்}.

தமிழரின் உறவுப் பெயர்களுக்கான காரணங்களை, தொ. பரமசிவன் அவர்கள் தெளிவாக விளக்கியிருப்பார். அவற்றில் சிலவற்றை மட்டும் கீழே தருகின்றேன்.

தம் + அப்பன் = தமப்பன் › தகப்பன்

தம் + அக்கை = தமக்கை

தம் + ஐயன் = தமையன்

தம் + பின் = தம்பி

தன் + ஆய் = தாய்

தன் + ஆந்தை = தந்தை

மேலே தமிழ்ச் சொற்களின் பொருளானது அறிவியல், இயற்கை, வாழ்வியல் சார்ந்து எவ்வாறு அமைந்துள்ளது என்பதனைப் பார்க்கலாம்.

## ஓரெழுத்து ஒரு மொழிச் சொற்கள்:

பொருள் குறித்து அமையுமாயின் தமிழில் ஓர் எழுத்தினாலும் சொல் அமையலாம் என மேலே பார்த்தோம். இவ்வாறான சொற்களையே ‘ஓரெழுத்து ஒரு மொழிச் சொற்கள்’ என்கின்றோம். இவ்வாறு ஆகக் குறைந்தது 42 சொற்களாவது ஒரு எழுத்தில் அமைந்திருப்பது பிற பல மொழிகளுக்கில்லாத ஒரு தனிப் பெருமையாகும். தமிழின் உயிர் எழுத்துகள் பன்னிரண்டுமே இவ்வாறு ‘ஓரெழுத்து ஒருமொழி’யாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

அ = அழகு

ஆ = ஆதல்/ பசு

இ = அண்மை

ஈ = கொடுத்தல்/ ஒரு வகைப் பூச்சி

உ = பக்கம்

ஊ = உணவு

எ = நிலைப்பு

ஏ = அம்பு/ ஏவுதல்

ஐ = தலைவன்

ஒ = சமம் (ஒப்பு)

ஓ = தங்குதல்

ஔ = மகிழ்ச்சி.

இதில் பல எழுத்துகளிற்குப் பின்னே பல வரலாறுண்டு. நாம் குறிப்பாக 'ஐ' என்ற எழுத்தினைப் பார்ப்போம்.

**'ஐ' என்றொரு சிறப்பெழுத்து**

இன்று மொழியிலாளர்கள் 'மொழிகளின் தொன்மை' குறித்தொரு கருத்தினை முன் வைக்கின்றனர். 'ஒரு மொழியில் 'ஐ' (I) என்ற ஒலியமைப்பினைக் கொண்ட எழுத்து, அந்த மொழியின் எழுத்துகள் வரிசையில் ஒன்பதாவது இடத்திலிருந்தால், அந்த மொழி ஒரு தொன்மையான மொழியாகவிருக்கலாம்' என்பதே அக் கருத்தாகும். இப்போது தமிழினைப் பார்த்தால், ஒன்பதாம் இடத்திலிருப்பது 'ஐ' என்றே எழுத்தேயாகும். இப்போது ஆங்கிலத்தினை எடுத்துக் கொள்வோம், இங்கும் ஒன்பதாம் இடத்தில் 'i' என்ற எழுத்தே உண்டு. அதற்காக ஆங்கிலம் தொன்மையானதல்ல, அது கிரேக்க-இலத்தீன் மொழிகளின் தாக்கத்தால் ஏற்பட்டது. எனவே இதனை இவ்வாறு கூறலாம் "ஒரு மொழி தொன்மையான மொழியாகவிருந்தால், அம் மொழியில் 'ஐ' என்ற எழுத்து ஒன்பதாம் இடத்தில் காணப்படும்; அதேவேளை ஒன்பதாம் இடத்தில் ஐ என்ற எழுத்து இருக்கின்ற மொழிகள் எல்லாம் தொன்மையானவையல்ல". இங்கு தமிழ் எழுத்துவரிசையில் 9ம் இடத்தில் அமைந்து 'ஐ' என்ற எழுத்து தமிழின் தொன்மையினை பறைசாற்றுகின்றது.

'ஐ' என்பது ஒரு எழுத்து என்பது மட்டுமல்லாமல், தமிழில் ஒரெழுத்து மொழியாகவும் செயற்படுகின்றது. 'ஐ' எனும் நெட்டெழுத்துச் சொல்லுக்கு இருபத்து நான்கு பொருள்கள் கூறுகின்றது தமிழ்ப் பேரகராதி. அவையாவன – **தலைவன், தந்தை, கணவன், அரசன், கடவுள், தமையன் மனைவி, ஐயம், அழகு, நுண்மை, வியப்பு, கோழை, இருமல், பெருவியாதி, சவ்வீரம் எனும் நஞ்சு, மந்தாரம், ஊண், கை, திசாமுகம், மலைஉச்சி, கடுகு, தும்பை, சர்க்கரை, ஐந்து**.

இத்தகைய வளங்களைக் கொண்ட ஒரு சொல்லானது, இன்று வெறும் வியப்பிற்குரிய ஒலிக்கோவையாகவே பொது வழக்கில் பயன்படுத்தப்படுகின்றது. இலக்கண வழக்கில் இரண்டாம் வேற்றுமை உருபாகவும் பயன்படுத்தப்படுகின்றது. 'ஐ' என்னும் இந்த வேற்றுமை உருபினைப் பயன்படுத்தாமல் நம்மால் பேசவும் ,எழுதவும் இயலாது. வேற்றுமை உருபுகளில் மிகுதியாகப் பயன்படுத்தப்படுவதும் 'ஐ' என்னும் 2ம் வேற்றுமை உருபே. அதன் மிகு பயன்பாட்டைக் கருதியே வேற்றுமை வரிசையில் அதற்கு இரண்டாம் இடம் தந்திருக்கிறார்கள்.

"இரண்டாவதன் உருபு ஐயே அதன் பொருள்
ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல்
ஒத்தல் உடைமையாதி ஆகும்" [நன்னூல்]

**ஐ = தலைவன்**

'ஐ' என்ற ஒரெழுத்து மொழியின் 'தலைவன்' என்ற பொருள் முதன்மையானது. பின்வரும் குறளினைப் பாருங்கள்.

"என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை
முன்நின்று கல்நின் றவர்" [குறள் 771]

பலரென்னை= பலர்+என்+ஐ, ஐ = தலைவர்

{பகைவரே! என்னுடைய தலைவர் முன் எதிர்த்து நிற்காதீர்கள், என்னுடைய தலைவர் முன் எதிர்த்து நின்று கல் வடிவாய் நின்றவர் பலர்.}

ஐ = தலைவன் என அமைந்த திருக்குறள் பார்த்தோம், இப்போது ஒரு புறநானூற்றுப் பாடல் பார்போமா!

'என் ஐக்கு ஊர் இஃது அன்மையானும்
என் ஐக்கு நாடு இஃது அன்மையானும்' [புறநானூறு 85]

திரைப்படப் பாடல் சுவைஞர்கள் (ரசிகர்கள்) 'என் சுவாசக் காற்றே' என்ற படத்தில் இடம்பெறும் 'தீண்டாய் மெய் தீண்டாய்' என்ற பாடலின் தொடக்க வரிகளைக் (கன்றும் உண்ணாது கலத்தினும் படாது) கேட்டிருப்பார்கள். அவ் வரிகள் வருமாறு.

"கன்று முண்ணாது கலத்தினும் படாது
நல்லான் றீம்பா னிலத்துக் காஅங்
கெனக்கு மாகா தென்னைக்கு முதவாது
பசலை யுணீஇயர் வேண்டும்
திதலை யல்குலென் மாமைக் கவினே"

மேலுள்ள திரைப்படப் பாடல் வரிகள் குறுந்தொகையிலிருந்தே எடுத்தாளப்பட்டிருந்தன. இங்கும் 'என்னைக்கும் உதவாது' (தென்னைக்கு முதவாது) என்ற சொற்றொடரானது 'என்+ஐ' எனப் பிரியும். இங்கும் 'ஐ' என்பது தலைவன் என்ற பொருளிலேயே இடம்பெறுகின்றது.

மேற்கூறிய சங்க இலக்கியப் பாடல்களிலும் 'ஐ' என்பது தலைவன் என்ற பொருளில் இடம்பெற்றிருப்பதனைக் காணலாம். இந்த 'ஐ' என்ற ஒரெழுத்து மொழியே; பின்னர் ஐயர், ஐயன் என அர், அன் விகுதிகள் சேர்க்கப்பட்டுத் தலைவரைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுவந்தது. இன்றும் கொங்கு மண்டலத்தில் தலைவரைக் குறிக்க 'ஐயன்' எனும் சொல் பயன்படுத்தப்படுகிறது. அதேபோன்று தமிழில் பரவலாகத் தந்தையினையும் 'ஐயா' எனக் குறிக்கப்படுகின்றது. 'ஐ' எழுத்தினை "ஐயன்னா" என்பதும் வழக்கம். 'ஐயன்னா' இற்கு ஆர் விகுதி

சேர்க்கப்படும்போது, அது ‘ஐயனார்’ ஆகின்றது. இதுவே இன்றும் ஊர் தோறும் காணப்படும் காவற்தெய்வமான ஐயனார் ஆகும்.

இத்தகைய மதிப்பிற்குரிய ‘ஐயர்’ என்ற சொல்லையே பார்ப்பனர்கள் களவாடித் தமது சாதியினைரை மட்டுமே குறிக்கும் ஒரு சொல்லாக மாற்றி விட்டனர்; தமிழரும் பக்தியில் கண்ணை மூடிக் கொண்டுள்ளார்கள். இதைப் பற்றிப் பின்னர் இன்னொரு இடத்தில் விரிவாகப் பார்ப்போம். இப்போதைக்கு ‘ஐயர்’ என்பது தலைவரினையே குறிக்கும் என்பதனை மட்டும் கவனத்திற் கொள்வோம்.

## தமிழ் மொழியின் செழுமையில் பெண்களின் பங்கு:

ஒரு மொழியின் வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பு எந்தளவிற்கு இருக்கின்றது என்பதும் அந்த மொழியின் செழுமையினை அளவிடும் ஒரு கருவியாகக் கொள்ளப்படலாம். பெண்களின் பங்களிப்பானது அந்த இனத்தின் வளர்ச்சியினைத்தானே காட்டும், மொழியின் செழுமையினை எவ்வாறு எதிரொலிக்கும்? எனச் சிலர் கருதலாம். அவ்வாறு கருதுபவர்களினால் கூட, வளர்ச்சியடைந்த ஒரு இனத்தினால்தான் செழுமையான ஒரு மொழியினைப் படைக்க / பேண முடியும் என்பதனை மறுக்கமுடியாது. இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளிற்கு முற்பட்ட சங்க காலத்தில் பெண்களின் பங்களிப்பினைப் பார்ப்போம். சங்க காலத்தில் பெண்களின் கல்வி நிலை எவ்வாறு இருந்தது என்பதற்குச் சான்றாக முப்பதிற்கும் கூடுதலான பெண் சங்க காலப் புலவர்கள் காணப்பட்டமை ஒரு முதன்மையான சான்றாகும் (சிலர் சங்க காலப் பெண் புலவர்களின் எண்ணிக்கையினை 50 வரை இட்டுச்செல்வார்கள்). இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வேறெந்த மொழியிலாயினும் இவ்வளவு பெருமளவான பெண் புலவர்கள் இருந்திருப்பார்களா என்பது ஐயமே. கிரேக்கத்தில் விரல்விட்டு எண்ணக் கூடியவர்களும், வட மொழியில் சுழிய எண்ணிக்கையிலுமே பெண் பாற் புலவர்கள் அக் காலப் பகுதியில் (Before Comman Era) காணப்பட்டனர். எனவே சங்க காலப் பெண் புலவர்களின் எண்ணிக்கையானது எமது மொழியின் பெருமைகளில் ஒன்றாகும். ஏற்கனவே நாம் பார்த்த ‘**கன்று முண்ணாது கலத்தினும் படாது**’ என்ற குறுந்தொகைப் பாடலினைப் பாடியவரே ஒரு பெண்பாற் புலவரான வெள்ளிவீதியார் என்பவராவார். அக் காலத்திலேயே ஒரு பெண் புலவரால் இவ்வாறு காமஞ் சொட்ட சொட்டக் கூடிய ஒரு பாடலினைப் படைக்க முடியுமாயின், அந்த இனம் எப்பேர்ப்பட்ட பால் நிலைச் சமத்துவத்தினைக் கொண்டிருக்கும்!

கீழடி உட்பட வைகைக் கரையோரங்களில் கண்டெடுக்கப்பட்ட மட்பாண்டங்கள் பலவற்றிலும் காணப்படும் எழுத்துக்களானது,

இன்னொரு வகையில் பெண்களின் கல்விச் சிறப்பினை எடுத்துக் காட்டுகின்றது. வெவ்வேறு மட் பாண்டங்களிற்கேற்ப எழுத்துக்கள் மாறுபட்டிருப்பதனைக் கொண்டும், எழுத்தமைவினைக் கொண்டும்; அவ்வெழுத்துகள், மட் பாண்டங்களைப் பயன்படுத்தியோராலேயே, எழுதப்பட்டிருக்கின்றது என்பது அறிஞர்களின் முடிவாகும். பெண்களே பெருமளவிற்கு மட்பாண்டங்களைப் பயன்படுத்தியிருப்பார்கள் என்ற அடிப்படையில், இவற்றில் பல பெண்களால் எழுதப்பட்டிருக்கும் என உய்த்தறியலாம். காஞ்சிபுரம் ‘வெடால்’ என்ற இடத்திலுள்ள சமணப்பள்ளியில் உள்ள கற்குகையில் ஆண்பெண் என இரு பாலாரும் கல்வி கற்றதற்கான சான்றுகள் காணப்படுவதால், அது அக் காலத்திலேயே இருபாலார் (Co-education school) கற்கும் பள்ளிகள் இருந்தமைக்கான சான்றுகளாகக் காணப்படுகின்றது. இவையெல்லாம் அக் காலத்திலேயே தமிழ்ப் பெண்கள் கல்வியறிவு பெற்றுள்ளார்கள் என்பதற்கான சான்றாகக் காணப்படுகின்றன.

மேலே சங்க காலப் பெண்களின் நிலை பற்றிப் பார்த்தவற்றைக் கொண்டு, முற்று முழுதாக அக் காலத்தில் பால் நிலைச் சமத்துவம் இருந்தது என முடிவு செய்துவிடக் கூடாது. அக் காலத்திலும் பால் நிலை சமத்துவமின்மையிருந்தது; ஆனால் ஏனைய இனங்களுடன் ஒப்பிடும் போது சிறப்பான நிலையில் தமிழர்கள் காணப்பட்டார்கள் என்பதே முதன்மையானதாகும். அத்துடன் பொதுப் புத்தியில் பதிந்திருப்பதனைக் காட்டிலும் சிறப்பான ஒரு நிலை காணப்பட்டது என்பதே உண்மையாகும். எடுத்துக்காட்டாக, பெண் உரிமை மேடைகளில் பேசப்படும் ஒரு வசனமான “விபச்சாரி என்ற சொல்லுக்கு ஆண் பாற் சொல் தமிழில் இருக்கின்றதா ! “என்பதனைப் பார்ப்போம்.

முதலில் ‘விபச்சாரி’ என்ற சொல் தமிழே அல்ல. அவ்வாறான தமிழேயல்லாத, இடையில் திணிக்கப்பட்ட ஒரு சொல்லுக்கு, தமிழ் ஏன் குற்றஞ்சாட்டப்படவேண்டும்? அச் சொல்லுக்கு நிகரான தமிழ்ச்சொல் ‘பரத்தை ‘என்பதாகும். இச் சொல்லுக்கு ஆண்பாற் சொல் மட்டுமல்ல, பொதுப்பாற் சொல்லே உண்டு. பொதுப்பாற் சொல்லுக்கான (common gender) சான்று சிலப்பதிகாரத்தில் உண்டு.

“வறுமொழி யாளரொடு வம்பப் பரத்தரொடு
குறுமொழிக் கோட்டி நெடுநகை புக்குப்
பொச்சாப் புண்டு பொருளுரை யாளர்”

இங்கு {வம்பப் பரத்தர் = புதிய காம நுகர்ச்சி விரும்புங் காமுகர்} ‘**பரத்தர்**’ என்ற சொல் இருபாலாரையும் குறிக்கும் சொல்லாகும். சரி, பொதுப்பால் உண்டு. ஆண்பால் உண்டா?

"யார்கொல் அளியள் தானே எம்போல்
மாயப் பரத்தன் வாய்மொழி நம்பி ..." [அகநானூறு 146]

இந்த அகநூற்றுப் பாடலில் வரும் 'பரத்தன் 'என்ற சொல் ஆண்பாற் சொல்லே. எனவே 'பரத்தை' என்ற தமிழ்ச் சொல்லுக்கு 'பரத்தன் 'என்ற ஆண்பாற் சொல் சங்ககாலம் முதலே உண்டு.

முடிவாக, சங்க காலத்தில் பெண்களின் நிலையானது முற்று முழுதான பால் நிலைச் சமத்துவத்தைக் கொண்டதல்ல எனினும்; ஒப்பீட்டு ரீதியில் பிற மொழியாளர்களைக் காட்டிலும், அதே போன்று பொதுப் புத்தியில் பதிந்திருப்பதைக் காட்டிலும் உயர்வாகவேயிருந்திருக்கின்றது.

**சங்க இலக்கியங்கள்:**

பொதுவாக பொது ஆண்டிற்கு (Common era) முன்னரான {இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளிற்கு முற்பட்ட} இலக்கியங்களை 'செவ்வியல் இலக்கியங்கள்' என்பர். சில மொழிகளில் மட்டுமே அத்தகைய செவ்வியல் இலக்கியங்களுண்டு. அத்தகைய சில மொழிகளிலும் பெரும்பான்மையான செம்மொழிகள் இன்றுள்ள மக்களால் விளங்கிக்கொள்ள முடியாதவை. தமிழர்களாகிய எம்மால் இன்றைக்கும் எமது மொழியில் படைக்கப்பட்ட சங்க இலக்கியங்களைப் படித்துப் புரிந்து கொள்ள முடியும். இத்தகைய பேறு எல்லோருக்கும் கிடைக்காது. எட்டுத்தொகை நூல்களும், பத்துப்பாட்டு நூல்களுமாக சேர்த்த 18 நூல்களுமே சங்க இலக்கியங்களாகக் கொள்ளப்படுகின்றன {இவற்றினையே 'பதினெண் மேற் கணக்கு நூல்கள்' என்றும் அழைப்பார்கள்}. எட்டுத்தொகை நூல்களை எளிமையாக நினைவில் வைத்துக்கொள்ளப் பின்வரும் பாடலானது உதவும்.

"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலி யோடு அகம் புறம் என்று
இத்திறத்து எட்டுத்தொகை"

பத்துப்பாட்டு நூல்களை எளிமையாக நினைவில் வைத்துக்கொள்ளப் பின்வரும் பாடலானது உதவும்.

"முருகு, பொருநாறு பாண் இரண்டு முல்லை
பெருகு வள மரக் காஞ்சி – மருவினிய
கோல நெடு நல்வாடை கோல் குறிஞ்சி, பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து."

சங்க இலக்கியங்களானவை எமது மொழியின் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட இலக்கிய வளத்தினை எடுத்துக் காட்டுகின்றன. பிற மொழிகளிலுள்ள பழம் பெரு இலக்கியங்கள் மதம் சார்ந்தவையாகக் காணப்பட; எமது சங்க இலக்கியங்களோ மத சார்பற்ற, பழந் தமிழரின் வாழ்வியலினையும், இயற்கையினையுமே பேசுகின்றன. இந்த மத சார்பற்ற வாழ்வியலை கீழடி அகழ்வாய்வுகளும் உறுதிப்படுத்துகின்றன. இயற்கை எனும் போது, சங்க காலப் பாடல்கள் இன்றைய தமிழ் நாட்டினையோ அல்லது தென்னிந்தியாவினையோ மட்டுமல்லாது முழு இந்தியாவினையும் (அன்றைய சிந்துவெளி) அடக்கிக்கொள்கின்றன. எடுத்துக்காட்டாக, 'எலும்பு தின்னும் ஒட்டகம்' பற்றிய செய்தி அகநானூறு 245 வது பாடலிலே காணப்படுகின்றது.

"குறும் பொறை உணங்கும் ததர் வெள் என்பு
கடுங் கால் ஒட்டகத்து அல்கு பசி தீர்க்கும்" [அகம் 245]

அதே போன்று 'கவரி மா' பற்றிய செய்திகளுமுண்டு.

"நரந்தை நறும்புல் மேய்ந்த கவரி
குவளைப் பைஞ்சுனை பருகி, அயல
தகரத் தண்ணிழல் பிணையொடு வதியும்
வடதிசை யதுவே வான்தோய் இமையம்" [புறநானூறு 132]

இமய மலையில் வாழ்ந்த 'கவரி மா' பற்றிய செய்தியும், அங்குள்ள நரந்தை எனும் நறுமணம் வாய்ந்த புல்லினத்தினை 'கவரி மா' உண்ட செய்தியும் காணப்படுகின்றன. இந்த விலங்கினமே பிற்காலத் தமிழில் கவரிமான் எனத் தவறாகக் கையாளப்பட்ட விலங்காகும்.

**கவரிமான் ஒரு மாயமான்**

பொதுவாக மானத்திற்கு எடுத்துக்காட்டாக நாம் "கவரிமான்" என்ற மானைக் கேள்விப்பட்டிருப்போம் ("நாங்க எல்லாம் கவரிமான் தலைமுறை"). அது பற்றிய ஒரு விளக்கத்தினையும் இங்கே பார்த்துவிடுவோம். உண்மையில் 'கவரிமான்' என்றொரு மானினமே உலகில் இல்லை. 'கத்தூரி மான் '(கஸ்தூரி மான் – Moschus – musk deer) என்ற மான் உண்டு (திருமந்திரம் – "சாந்து கமழுங் கவரியின் கந்தம்போல் வேந்தன் அமரர்க் கருளிய மெய்ந்நெறி...") ஆனால் அதற்கும் மானத்திற்கும் தொடர்பேயில்லை. அவ்வாறாயின் உயிர் நீக்கும் விலங்கு எது? உண்மையில் அது கவரிமா (Bos grunniens = Yak) எனும் ஒரு மாட்டினமே. அதனையே மேலுள்ள புறநானூற்றுப் பாடலில் (132) பார்த்தோம். இப்போது பின்வரும் குறளினைப் பாருங்கள்.

"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்" [குறள் 969]

பார்த்தீர்களா, வள்ளுவன் சரியாக 'கவரிமா' எனவே கூறியுள்ளார். பின்நாளில்தான் குழப்பிவிட்டார்கள் (மா=விலங்கு). இது பற்றி முகம்மது அலி எழுதிய 'இயற்கை: செய்திகள், சிந்தனைகள்' என்ற நூல் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

"கவரி என்றால் மயிர், மா என்றால் விலங்கு. இதுவே கவரிமா. இமயமலையில் கடும் பனிப்பொழிவுக்கு இடையே வாழும் இந்த மாடு உடலிலுள்ள மயிரை இழந்துவிட்டால் [குளிர் தாங்க முடியாமல்] உயிர் துறந்துவிடும். இதையே வள்ளுவர் உவமையாக 'மயிர் நீப்பின் உயிர்வாழாக் கவரிமா' என்று குறிப்பிட்டார். பின்னால் வந்தவர்கள் தங்கள் வசதிக்கேற்ப 'நாங்களெல்லாம் கவரிமான் பரம்பரை' என்று கூறி இல்லாத ஒரு மான் இனத்தை உருவாக்கிவிட்டனர்".

மீண்டும் நாம் எமது கவனத்தினை எமது பேசு பொருளினை நோக்கித் திருப்பினால், சங்க இலக்கியங்களில் இன்றைய இந்தியா முழுமைக்குமான இயற்கைச் செய்திகள் கொட்டிக் கிடக்கின்றன. அவ்வாறு முழுமையான (இன்றைய) இந்தியாவின் இயற்கையைப் பற்றிப் பேசும், ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட ஒரே இலக்கியம் எமது சங்க இலக்கியமே.

சங்க இலக்கியங்களானது சிந்துவெளி நாகரிகத்தின் தொடர்ச்சியாகவும் கூட அமைந்துள்ளது. ஆய்வாளர் ஆர். பாலகிருஷ்ணன் கூறியது போன்று சிந்துவெளி விட்ட இடத்தினைச் சங்க இலக்கியக்கங்கள் தொட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, ஒரு தொடர்ச்சியினைப் பார்ப்போம்.

"நீயே, வடபால் முனிவன் தடவினுள் தோன்றி,
செம்பு புனைந்து இயற்றிய சேண் நெடும் புரிசை,
உவரா ஈகை, துவரை ஆண்டு,
நாற்பத்தொன்பது வழிமுறை வந்த
வேளிருள் வேளே! விறல் போர் அண்ணல்!"

"தாரணி யானைச் சேட்டிருங் கோவே
ஆண்கட னுடைமையிற் பாண்கட னாற்றிய
ஒலியற் கண்ணிப் புலி கடி மாஅல்
யான்றர விவரைக் கொண்மதி வான்கவித்

திருங்கட லுடுத்தவிவ் வையகத் தருந்திறற்
பொன்படு மால்வரைக் கிழவ வென்வேல்''

[புறநானூறு 201]

இப் பாடலில் ''வடக்கே, முனிவர் ஒருவரைக் காப்பாற்ற புலியுடன் போராடிய மன்னன் ஒருவனின் கால்வழியில் வந்தவன் இருங்கோ'' என்கின்றார் கபிலர். சங்ககால இருங்கோ மன்னனின் காலத்தினைப் பொது ஆண்டுக்கு முந்திய நூறு (BCE 100) எனக் கருதுகின்றார்கள். இருங்கோவின் முன்னோனின் (புலியை வென்ற) காலத்தைப் பார்ப்போம். '49 தலைமுறைகளிற்கு முன்னே' என்பதனைக் கொண்டு ஒரு தலைமுறைக்கு 30 ஆண்டுகள் எனக்கொண்டால், 30*49= 1470 ஆண்டுகள். எனவே BCE 1570 ஆண்டு (BCE 100+1470). இது ஏறக்குறைய சிந்துவெளி நாகரிக காலம் {காலக்கணிப்பு – சிந்துவெளியில் தமிழ்மொழி}. இப்போது கபிலர் பாடிய 'புலியை வென்ற மால்' சிந்துவெளி காலத்தைச் சேர்ந்தவர் என்றதும், 'வடக்கே' என்பது சிந்துவெளியின் அமைவிடத்தினையும் காட்டுகின்றது. இப்போது சிந்துவெளி முத்திரை (279) ஒன்றினைப் பார்ப்போம்.



இங்கு ஒருவன் புலியைக் (இரு புலிகள், உயர்வு நவிற்சி) கொல்வது போன்ற உருவத்தினைக் காணலாம் (படம் காண்க). இந்த முத்திரையிலுள்ள எழுத்துகளை ஐராவதம் மகாதேவன் தமிழில் 'இருளா இருளன்' என்றே படிக்கின்றார். இந்தச் செய்தி பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக சிந்துவெளியிலிருந்து, சங்ககாலம் வரை எவ்வாறு கடத்தப்பட்டு வந்தது? பாணர்களால் பாடல்களாகவே கடத்தப்பட்டு வந்திருக்கும் (எழுத்துகள் தோன்ற முன்னர்). இவ்வாறு பாணர்களால் பாடப்பட்டு வந்த பாடல்களே, பிற் காலத்தில் சங்க இலக்கியங்களாகப் புலவர்களால் தொகுக்கப்பட்டன. குறித்த பாடலானது (புறம் 201) சிந்துவெளியின் தொடர்ச்சிக்குச் சிறந்ததொரு எடுத்துக்காட்டாகும்

## தொல்காப்பியம்:

தொல்காப்பியமும் தமிழ் மொழியின் பெருமைகளிலொன்றாகும். தமிழின் முதல் நூல் தொல்காப்பியம் என்றொரு கருத்திருக்கின்றது. அது தவறானது. தொல்காப்பியத்திலேயே “ ‘என்ப’, ‘என்மனார்’, ‘மொழிப’...” போன்ற வசனங்களைக் காணலாம். இத்தகையவை தொல்காப்பியத்திற்கு முந்திய நூல்களோ அல்லது புலவர்களோ உண்டு என்பதனைத் தெளிவாக்குகின்றன. மேலும் இலக்கியங்கள் தோன்றிய பின்பே அவற்றினை முறைமைப்படுத்த இலக்கணங்கள் தோன்றும். எனவே தொல்காப்பியத்திற்கு முந்திய நூல்கள் தமிழிலிருந்திருக்கின்றன. எனவே, தமிழில் இன்று கிடைக்கும் இலக்கண நூல்களில் பழமையானது தொல்காப்பியம் என்பதே சரியானதாகும். தொல்காப்பியத்தின் இலக்கண வளம் பொதுவாக அறியப்பட்டதே. காட்டாக, மொழியிலுள்ள எழுத்துகளை எவ்வாறு ஒலிப்பது என்பது பற்றிய விளக்கங்கங்களைப் பற்றி அக் காலத்திலேயே பேசியிருப்பது வியப்பானதே. அதே வேளையில் தொல்காப்பியம் இலக்கணத்திற்கும் அப்பாற் சென்று பல்வேறு செய்திகளையும் பேசுகின்றது.

### முதற்பொருள்

மதங்கள் எல்லாம் முதற்பொருளுக்கு வெவ்வேறு விளக்கங்கள் கொடுத்து வருகின்ற போதும், அவை எதுவுமே அறிவியலுடன் ஒத்துவரவில்லை. சில நூற்றாண்டுகளிற்கு முன்னர் உருவான மதங்களாலேயே முதற் பொருளினைச் சரிவர வரையறுக்க முடியாமல் திணறும்போது; தொல்காப்பியமானது 2500 ஆண்டுகளிற்கு முன்னரே முதற்பொருளினைச் சரி வர வரையறுத்திருப்பதும் அது இன்றைய அறிவியலுடன் ஒத்துப்போவதனையும் என்னவென்று புரிந்துகொள்வது!

> “முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின்
> இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே” (4)

‘முதற்பொருள் என்பது உலகம் தோன்றிய காலம் முதல் இருக்கும் நிலமும் (Space) பொழுதும் (Time) ஆகும்’ என்ற இந்தத் தொல்காப்பிய நூற்பாவானது குறிப்பது இன்றைய அறிவியல் சொல்வதனையே.

தொல்காப்பியரின் முதற்பொருள் விளக்கம் தொடர்பாகக் கவிப் பேரரசு வைரமுத்து அவர்கள் எழுதியது மனங்கொள்ளத் தக்கதாகும்.

> “உலகத் தோற்றம் குறித்து இதுவரை இரண்டு கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஒன்று மதக் கருத்து; இன்னொன்று

அறிவியல் கருத்து. இந்த அண்டமே கடவுளின் கைவினை என்ற கருத்தையே எல்லா மதங்களும் எழுதிப்போகின்றன. ஆனால், கரிமக்கொள்கை என்ற விஞ்ஞானம் இந்த பூமியின் தோற்றம் குறித்து அதுவரையில் இருந்த எல்லா நம்பிக்கைகளையும் முடிவுக்குக் கொண்டுவந்தது. ஆனால், பல நூற்றாண்டுகளுக்கு முன்பே அறிவியல் எல்லைக்குள் அண்டத்தை அளந்தது தொல்காப்பியம்.''

''நிலம் தீ நீர் வளி விசும்பொடு / ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்'' (பொருளதிகாரம் மரபியல் 86) என்று வரையறுக்கிறது தொல்காப்பியம். நிலம் – நீர் – தீ – வளி – வெளியென்ற ஐந்தின் கலவைதான் இந்த மண்கோள் என்று முரண்பாடில்லாத கருத்தை முன்மொழிகிறது. இந்த பூமி எப்படிப் படைக்கப்பட்டது என்ற மதம்சார் கருத்தியலில் தோயாமல், எதனால் படைக்கப்பட்டது என்ற மெய்ம்மையோடு மட்டும் நின்றுகொண்டதால் தொல்காப்பியத்தை எந்த நூற்றாண்டு அறிவியலும் இடறித்தள்ளவியலாது.''

## உயிரிகளின் பகுப்பு

தொல்காப்பியர் உயிரிகளைப் பிரித்த முறை வியப்பிற்குரியது. இதில் படிமலர்ச்சிக் கொள்கைக்கான (Evolution) சில முன்னோட்டங்களைக் கூடக் காணலாம். பின்வரும் பாடலினைப் பாருங்கள்.

''ஒன்றறிவதுவே உற்றறிவதுவே
இரண்டறிவதுவே அதனொடு நாவே
மூன்றறிவதுவே அவற்றொடு மூக்கே
நான்கறிவதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறிவதுவே அவற்றொடு செவியே
ஆறறிவதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே''

(பொருளதிகாரம் 571)

எவ்வாறு உயிரினங்கள் ஓரறிவு முதல் ஆறறிவு வரைப் பாகுபடுத்தப்பட்டுள்ளன என்பதனைப் பார்த்தீர்களா! இது மட்டுமல்லாமல் எத்தகைய உயிரினங்கள் அவ் வகைகளிற்குள் உள்ளடங்கும் என்பதனையும் கூடத் தொல்காப்பியத்தில் காணலாம்.

''புல்லும் மரனும் ஓரறிவினவே''
''நத்தும் முரளும் ஈரறிவினவே''
''சிதலும் எறும்பும் மூவறிவினவே''
''நண்டும் தும்பியும் நான்கறிவினவே''

"மாவும் மாக்களும் ஐயறிவினவே"
"மக்கள் தாமே ஆறறிவுயிரே"

மேலே புல்லும் மரமும் கூட வேறுபடுத்தப்பட்டிருப்பதனைக் காணலாம்.

"புறக்கா ழனவே புல்லென மொழிப
வகக்க ழனவே மரமென மொழிப"

இன்றைய புதலியல் (Botany) சொல்லும் புல்மர வேறுபாட்டினைக் கூடத் தொல்காப்பியம் தொட்டுள்ளது. இதன் படி தென்னை, மூங்கில் போன்றவை மரங்களல்ல. அவை புல்லினங்கள். அதனாலேயே மூங்கிலிலான குழல் 'புல்லாங்குழல்' எனப்படுகின்றது.

இவ்வாறு தொல்காப்பியமானது பல அறிவியற் செய்திகளையும் கொண்டுள்ளது. அத்துடன் அழகியல் பற்றிக் கூடப் பேசுகின்றது.

**தொல்காப்பியத்தில் தமிழிசை**

தொல்காப்பிய காலத்திற்கு முன்னரே (இற்றைக்கு ஏறத்தாழ 2500/3000 ஆண்டுகள் முன்னரே) இசைபட, இசையுடன் வாழ்ந்தவர்கள் தமிழர்கள்.

"அளபு இறந்து இசைத்தலும் ஒற்று இசை நீடலும்
உள என மொழிப இசையொடு சிவணிய நரம்பின் மறைய
என்மனார் புலவர்" [தொல்காப்பியம். 33]

[பொருள் – இசையொடு பொருந்திய யாழ் நூலில் இசையிலே எழுத்து ஒலிகள் அளவுகடந்து ஒலித்தலும், ஒற்றுக்கள் நீண்டு ஒலித்தலும் உண்டு என்று அறிஞர் கூறுவர் என்பது இதன் பொருள்]

மேற்குறித்த நூற்பாவில் 'என்மனார் புலவர்' என்ற தொல்காப்பியரின் வரிகளைக் கவனிக்கவும். எனவே தொல்காப்பியரிற்கு முன்னரே இசை பற்றிப் புலவர்கள் குறித்துள்ளார்கள் என்பது தெளிவாகின்றது.

இசை பற்றிய ஏனைய சில தொல்காப்பியக் குறிப்புகள் வருமாறு.

"அசையும் சீரும் இசையொடு சேர்த்தி
வகுத்தனர் உணர்த்தலும் வல்லோர் ஆறே"
[தொல்காப்பியம் – 1268]

"இசைப்பு இசையாகும் என்கிறது" [தொல்காப்பியம் – 793]

இசைப்பு என்பது யாழ் போன்ற இசைக் கருவிகளை இசைத்தல் ஆகும் என்பது இந்நூற்பாவின் பொருள்.

தொல்காப்பியம் கூறும் 'யாழ்' என்னும் சொல் (இசைக் கருவியுடன்) பழந்தமிழர் வகுத்த பண்ணிசையைக் குறிக்கும். தொல்காப்பியர் கூறும்

“பறை” என்னும் சொல் (இசைக் கருவியுடன்) தாளம் பற்றியதாகும். இவ்வாறு தொல்காப்பியம் நேரடியாகக் காட்டும் குறிப்புகளை விட மறைமுக செய்திகளையும் கொண்டுள்ளது. ஒலியியல் (Phonetics) என்பது பற்றி இன்று கூடுதலாகப் பேசுகின்றோம். அது பற்றித் தொல்காப்பியமே பேசியுள்ளது. ஒவ்வொரு எழுத்தினையும் எவ்வாறு ஒலிப்பது என. காட்டாக, ‘ச’ என்ற எழுத்தின் ஒலிப்பினைப் பார்ப்போம்.

“ச கார ஞ காரம் இடை நா அண்ணம்
ட கார ண காரம் நுனி நா அண்ணம்”

[தொ.கா பிறப்பியல் 89–91]

நாக்கு = Tongue அண்ணம் = Palate (Roof of Mouth)

{மொழி முதல் - மெய்யெழுத்தோடு ஒற்றி வரும் “ச” தான் = Cha என்று ஒலிக்கும் (sa அல்ல). பிற இடங்களில், அந்தந்த இடங்களுக்கு ஏற்றவாறு ஒலிக்கும் ஓசை நெகிழ்வு தமிழுக்கு உண்டு}. இவ்வாறே (‘ச’) போன்றே ரி,க,ம,ப,த,நி போன்ற எழுத்துகள் ஒலிக்கும் முறைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. இவைதான் பண்கள். இவற்றினை அடியாகக் கொண்டே சங்க காலப் பாடல்கள் பாடப்பட்டன [பாணர்கள் பட்டறிவினால் ஆக்கிய பண்களைத் தொல்காப்பியர் முதலிய புலவர்கள் நெறிப்படுத்தியிருப்பார்கள் என்பதே எனது உய்த்துணர்வு. சான்றில்லை]. இத்தகைய இசையின் தொடர்ச்சியாகவே பரிபாடல், கலித்தொகை என்பனவும், பின்னர் சிலப்பதிகாரமும் காணப்படுகின்றன. இன்றைய தமிழன் வேண்டுமானால் தனது இசையினைக் களவு கொடுத்துவிட்டு, வெறும் ‘துக்கடாக்கள்’ கேட்டு மனநிறைவடையலாம். ஆனால் எமது முன்னோர்கள் இசையுடன் இசைபட வாழ்ந்தவர்கள்.

இவ்வாறு தொல்காப்பியத்தின் புகழினை அடுக்கிக் கொண்டே போகலாம். விரிவஞ்சி இத்துடன் முடிப்போம். இறுதியாக தொல்காப்பியமானது இதுகாறும் எமது மொழியினைப் பல்வேறு பண்பாட்டுப் படையெடுப்புகளிடையேயும் காத்து நிற்கும் ஒரு கருவியாகும் {தொல்+ காப்பு + இயம் = தொல்காப்பியம்}.

## இரண்டாம் படலத்தின் பிழிவு:

இப் படலத்தினுள் எமது மொழியின் சிறப்புக்களான செம்மொழித் தன்மை, எல்லாச் சொற்களும் பொருள் குறித்த தன்மை, ஓரெழுத்து ஒரு மொழிச் சொற்கள், தமிழ்மொழியில் பெண்களின் பங்களிப்பு என்பன பற்றிப் பார்த்தோம். அவை நீங்கலாக, சங்க இலக்கியங்கள், தொல்காப்பியம் என்பன பற்றிய சில வியத்தகு செய்திகளையும் பார்த்தோம். சங்க இலக்கியங்கள்,

தொல்காப்பியம் போன்றே தமிழின் மற்றொரு பெருமையான திருக்குறள் பற்றிப் பலரும் அறிந்திருப்பதால் அதனை இங்கு விளக்கவில்லை. பின்னர் அதனையும் தொட்டுச் செல்லலாம். இறுதியாக, இப் பெருமைகளை இங்கு குறிப்பிடுவது வெறும் தற்பெருமைக்காகவன்றி, இம் மொழியின் தொடர்ச்சியினைத் தக்க வைத்துக் கொள்வதற்கேயாகும்.

## துணை நின்ற நூல்கள்


- தமிழாற்றுப்படை – கவிப்பேரரசு வைரமுத்து.
- பண்பாட்டு அசைவுகள் – தொ. பரமசிவன்.
- தொல்காப்பியத்தில் இசை தொன்மையும் தொடர்ச்சியும் – இரா. கலைவாணி.
- சங்க இலக்கியத்தில் இசை இரா.கலைவாணி - சு. தமிழ்வேலு.

## மூன்றாம் படலம்

# தமிழ் மறைப்பும் தமிழ்ச் சிதைப்பும்

முந்திய படலத்தில் தமிழ் மொழியின் செழுமையினைப் பார்த்தோம். சங்க காலச் செழுமை இன்றிருக்கின்றதா? எனில், இல்லை. இதற்கான காரணங்களாக தமிழ் மறைப்பும், சிதைப்பும் இருக்கின்றன. 'யார் சிதைத்தார்கள்?' என்பதனைக் காட்டிலும் எவ்வாறு சிதைக்கப்பட்டது எனப் பார்ப்பதே பொருத்தமானதாகவிருக்கும். அதனையே இப் படலத்தில் பார்க்கப் போகின்றோம்.

### மொழிக் கலப்பு

தமிழ் மீதான மொழியியல் பண்பாட்டுப் படையெடுப்பானது ஏறக்குறைய 2000 ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றது. பல்வேறு பட்ட மொழிகளின் தாக்கம் தமிழ் மீது ஏற்பட்டது. பவுத்த மதத்தினூடாக பாளி, வணிகத்தினூடாக பிராகிரதம் எனப் பல தாக்கங்கள் ஏற்பட்டிருந்தன. அவற்றினால் பெரும் தாக்கத்தினைத் தமிழில் ஏற்படுத்த முடியவில்லை. வைதீக மதத்தினூடான சமற்கிரதக் கலப்பே தமிழிற்குப் பெருங் கேடாக அமைந்தது. தமிழ்ச் சொற்களையே களவாடி, அவற்றினைத் திரித்து சமற்கிரதமாக்கி, மீண்டும் சிதைந்த வடிவத்தினை தமிழில் கலந்து விட்டார்கள். வைதீக மதத்தினூடாகவும், அரசர்களைக் கையிற்குள் போட்டுப் பெற்றுக் கொண்ட அதிகாரத்தினூடாகவும்; பழந் தமிழ்ச் சொற்கள் மறைக்கப்பட்டு, கிரந்தச் சொற்கள் தமிழில் கலக்கப்பட்டன. சில அறிஞர்களின் கருத்துப்படி; கடைச் சங்க காலத்தில் முல்லைப்பாட்டில் ஏறக்குறைய 3 விழுக்காடளவிலிருந்த இக்கலப்பு, ஒன்பதாம் நூற்றாண்டில் (CE 9th century) திருவாசகத்தில் 7 விழுக்காடாகக் கூடி, இன்று 25-30 விழுக்காடுவரை; எமது மொழியில் கலப்புக் காணப்படுகின்றது. இந்த எண்ணிக்கை சற்று மிகைப்படுத்தப்பட்டதாகக் காணப்படலாம், ஏனெனில் பிந்திய வேர்ச் சொல்லாய்வுகள், நாம் முன்பு வட மொழிச் சொற்கள் எனக் கருதியிருந்த பல சொற்கள் தமிழே என இப்போது சொல்கின்றன {எ.கா – ஆதாயம், திகதி...}; என்ற போதிலும் அறிஞர்கள் கூறிய விழுக்காட்டு எண்ணிக்கையின் போக்குச் (Trend) சரியானதே; அதாவது கடைச் சங்க காலத்தினைக்

காட்டிலும் பத்து மடங்கு கூடுதலான மொழிக் கலப்பினை நாம் கொண்டுள்ளோம். இங்குள்ள இன்னொரு இன்னல் என்னவெனில், கலப்பிற்குப் பின்னரான காலத்தில் எது தமிழ்? எது கலப்பு? எனச் சொல்ல முடியாத நிலையினை ஏற்படுத்தியதாகும்.

உறவாடிக் கெடுக்கும் சமற்கிரதம் கலக்கும்போது கண்டு கொள்வது கடினம். இந்தக் கலப்பினை மேற்கொள்ளுபவர்கள் முதலில் தமிழும் சமற்கிரதமும் இரண்டு கண்கள் என ஆரம்பித்து; கலப்பு ஒரு கட்டத்தைத் தாண்டியபின் தமிழால் தனித்து இயங்க முடியாது, அது ஒரு செம்மொழியல்ல, சமற்கிரதத்தின் வழித்தோன்றலே தமிழ் என்றெல்லாம் கதை பேசுவார்கள். இந்த சூழ்ச்சி நோக்கிற்காக சிவபெருமானையும், அரசனையுமே துணைக்கழைப்பார்கள் (வீரசோழியம்). இவ்வாறான முயற்சியால் மூன்றில் இரண்டு பங்குத் தமிழர்களை ஏற்கனவே தெலுங்கு, கன்னடம், துளு மற்றும் மலையாளம் எனப் பிரித்தெடுத்துவிட்டார்கள். இன்று வழக்கில் நாம் பயன்படுத்தும் தமிழிலும் ஏறக்குறைய 10 முதல் 30 வரையான விழுக்காடு அளவிற்குக் கிரந்தச்சொற்கள் கலந்துள்ளன. எஞ்சியுள்ள தமிழையும் அழிக்கும் முயற்சியினையே இப்போதும் செய்து வருகிறார்கள். சொற்களைக் கலப்பது மட்டுமல்லாமல், சொற்கள் ஒலிக்கும் முறையிலும் சூழ்ச்சி செய்தார்கள். வட்டார வழக்குகள் ஏளனம் செய்யப்பட்டன. இவற்றின் மொத்த விளைவே தமிழிலிருந்து பிற மொழிகள் பிரிந்தமைக்கான காரணமாகும். கண்ணுக்கு முன்னாலுள்ள எடுத்துக்காட்டு – மலையாளம் பிரிந்துபோனமையாகும். சங்க காலத்தில் சேரர்கள் எனச் சிறப்புடன் வாழ்ந்த தமிழர்கள்; சில நூற்றாண்டுகளுக்கு முன்னரே, மொழிக் கலப்பாலும், ஒலிப்பு வேறுபட்டாலும் (மூக்கொலிப்பு) ‘மலையாளர்கள்’ எனப் பிரிந்து சென்றார்கள்.

உண்மையில் இவ்வாறான ஒரு இன்னல் வரும் என முன் கணித்தே தொல்காப்பியர் ஒரு ‘காப்பு’ நடவடிக்கையாகவே தொல்காப்பியத்தினைப் படைத்திருந்தார். குறிப்பாக வடமொழிச் (பிராகிரதம், பாளி, சமற்கிரதம்) சொற்களைத் தமிழில் கையாளுவதற்கான ‘தற்சமம்’, ‘தற்பவம்’ என்பவற்றைக் கூறலாம். வடமொழிச் சொற்கள் தமிழ் மொழியில் தமிழ்ச் சொற்கள் போன்றே மாற்றமின்றி வருவது ‘தற்சமம்’ எனப்படும் (எ.கா – கமலம்). வட மொழிக்குரிய சிறப்பு எழுத்துகள் தமிழ்த் தன்மைக்கு ஏற்ப மாறி வருவது ‘தற்பவம்’ எனப்படும் {எ.கா: பங்கஜம் – பங்கயம், வருஷம் – வருடம்}. ‘தற்பவம்’ விதியினை இன்று எத்தனை பேர் பின்பற்றுகின்றார்கள்? கிரந்த எழுத்துகளைப் பயன்படுத்தி, மிகப் பெரும்பாலானோர் இன்று மீறுகின்றார்களல்லவா! இவ்வாறு எமது

முன்னோர்களும் வேறு வேறு வகைகளில் தொல்காப்பியக் காப்பினை மீறியதனாலேயே, தமிழ் சிதைந்தது.

சிலர் வருஷம் என்ற சொல்லினை ‘வருடம்’ என எழுதினாலே அது தமிழ் தானே என வாதாடுவார்கள். இவர்களிற்கான பதிலினை நன்னூல் பின்வருமாறு தருகின்றது.

“பொது எழுத்தானும் சிறப்பு எழுத்தானும்
ஈர் எழுத்தானும் இயைவன வடசொல்”

(நன்னூல் : 274)

{வடமொழிக்கும் தமிழ் மொழிக்கும் பொதுவாக உள்ள எழுத்துகளாலும் வடமொழிக்குச் சிறப்பாக உள்ள எழுத்துகளாலும் வடமொழியிலிருந்து தமிழ் மொழியில் வந்து வழங்கும் சொற்கள் வடசொற்கள் என்பது இதன் பொருள்}.

**தனித்தமிழ்:**

தனித்தமிழ் என்பது தமிழ் மொழியில் பிற மொழிச் சொற்களைக் கலக்காமல் தனித்தமிழில் எழுதப்படவும், பேசப்படவும் வேண்டும் என்ற கருத்துருவாக்கத்தினைக் குறிக்கும். இவ்வாறு தனியாக ஒரு மொழி பிற மொழிகளின் செல்வாக்கில்லாமல் தனித்து இயங்கினாலே, அம் மொழி செம்மொழியாகக் கருதப்படும். மேலும் பிற மொழிக் கலப்பின் கேடுகளையும் முன்னரே பார்த்துள்ளோம். ‘தனித்தமிழ்’ என்ற பேச்சு எடுத்தாலேயே, சிலர் இது ஒரு வெறுப்பு (துவேச) நடவடிக்கை போலக் கருதுகின்றார்கள். இனத் தூய்மை வாதம் வேறு, ஒரு மொழியின் தனித்து இயங்கும் திறன் வேறு. தலை சிறந்த இடதுசாரித் தலைவர் லெனினே வேற்று மொழிச் சொற்கள் தமது மொழியில் கலப்பதனை விரும்பவில்லை என்பதனைக் கவனியுங்கள். எமது மொழியினைப் பேணுவதற்குத் தனித்தமிழ்ப் பயன்பாடு தேவையானதே.

இன்றைய உலகமயமாதல் நிலையில் தனி மொழிப் பயன்பாடு நடைமுறையில் சரிப்பட்டுவருமா என்று நினைக்கலாம். பாலில் சிறிதளவு நீர் கலக்கப்படுவதற்கும், நீருக்குள் சிறிதளவு பாலைக் கலப்பதற்கும் வேறுபாடு உண்டு. பிந்தைய நிலையிலேயே இன்றைய தமிழ் காணப்படுகின்றது. தனித்தமிழ் பயன்பாட்டிற்குச் செய்ய வேண்டியவை.

1. முடியுமானவரை தமிழிலுள்ள 247 எழுத்துக்களை மட்டுமே பயன்படுத்துங்கள். கிரந்த எழுத்துக்களை ஸ,ஷ,ஜ,ஹ போன்றவற்றை தவிருங்கள். (எடுத்துக்காட்டாக ஹிந்து என்பதை ‘இந்து’ என எழுத வேண்டும்).

2. கிரந்தச் சொற்களிற்குப் பதிலான தூய தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துதல்.

3. புதிய சொற்களிற்கான தமிழ் மொழியாக்கம். (எடுத்துக்காட்டு : Pen drive = விரலி).

இவை ஒவ்வொன்றையும் விரிவாகப் பார்ப்போம்.

**கிரந்த எழுத்துக்களைத் தவிர்த்தல்:**

தனது மொழியில் இல்லாத எழுத்துகளைப் பயன்படுத்தும் கேடு, தமிழல்லாமல் வேறு எந்த மொழிக்கும் கிடையாது. தமிழில் இடைக் காலத்தில் திணிக்கப்பட்டவையே இந்த தமிழல்லாத கிரந்த எழுத்துகளாகும். கிரந்த எழுத்துக்கள்: 'ஸ,ஷ,ஜ,ஹ,க்ஷ,ஶ்ரீ' என்பனவாகும். இவை வெறும் 6 எழுத்துக்களே என எண்ணாதீர்கள். இவை பிற எழுத்துகளுடன் சேர்ந்து மேலும் பலவாகப் பெருகும் (ஸா,ஸி,ஸு..., ஷா,ஷி,ஷீ...) . இவையெல்லாம் சேர்ந்தால் தமிழில் எத்தனை எழுத்துகள்?, எண்ணிப்பாருங்கள்! இந்தளவு பெரிய சுமையினைத் தமிழ் தாங்குமா? தமிழில் வெறும் 247 எழுத்துகளே. அதனை மேலும் எளிமையாக்க உயிர், மெய் என 12+18=30 என எளிமைப்படுத்தலாம்.

"எழுத்து எனப் படுப
அகர முதல் னகர இறுவாய்
முப்பஃது என்ப" [தொல்.எழுத்து.1]

**'சார்ந்து வரல் மரபின் மூன்று அலங்கடையே'** என்ற நூற்பாவினையும் சேர்த்தால், சார்ந்து வருதலாகிய இலக்கணத்தினையுடைய மூன்றும் ஆனவிடத்து முப்பத்து மூன்று என்று சொல்வோருமுண்டு. அதற்கு மேல் ஒரு எழுத்தையும் சேர்க்கக்கூடாது என்பதே தொல்காப்பிய விதியாகும். இதனை மீறியதே தமிழ் மொழியின் சிதைவிற்குக் காரணமாகும்.

கிரந்த எழுத்துக்களைத் தவிர்த்து எழுதமுடியுமா? எனப் பார்ப்போம். சங்க இலக்கியங்கள், திருக்குறள், சிலப்பதிகாரம் முதலான படைப்புக்கள் மட்டுமல்ல, ஆழ்வார்கள், நாயன்மார்கள், கம்பன் கூட இந்த கிரந்த எழுத்துகளைப் பயன்படுத்தவில்லை. இவர்களை விடவா நாம் பெரிதாக எழுதப்போகின்றோம்? அன்று அவர்கள் எழுதினார்கள், இன்று இயலுமா? என்றொரு கேள்வி எழலாம். முயன்றால் முடியும். அதற்குப் பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றவேண்டும்.

1. முடியுமானவரைத் (தனி)தமிழ் சொற்களையே பயன்படுத்தல். (ஜனநாயகம் - குடியாட்சி, ஸம்ஹாரம் - அழிவு...)

2. பிறமொழிச் சொற்களை எமது மொழிக்கேற்ப மாற்றி எழுதுதல். இதனையே தொல்காப்பியர் ‘சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்’ என்கின்றார். (ஜாதி-சாதி, ஸமீபம்-சமீபம்...)

3. மொழியாக்கம் (pen drive – விரலி, Dinosaur – தொன்மா...)

வேற்று மொழிப் பெயர்களை என்ன செய்யலாம்? எனப் பார்ப்போம். முதலில் தமிழர்கள் தமிழிலேயே பெயர் சூட்ட வேண்டும். வேற்று மொழிப் பெயர்களையும் தமிழிற்கேற்ப மாற்றலாம். ‘விபீஷணன்’ என்பதை வீடணன் என்றும் ‘ஜானகி’ என்பதைச் ‘சானகி’ என்றே கம்பரே எழுதுகின்றார். ராமானுஜர் தானே தனது பெயரினை ‘இராமனுசர்’ என மாற்றியுள்ளார். இதற்கும் ஒரு படி மேலே போய் ‘சூரியநாராயண சாஸ்திரியார்’ பார்ப்பனக் குடும்பத்தில் பிறந்திருந்தாலும் தனது பெயரினை ‘பரிதிமாற் கலைஞர்’ என மாற்றியிருந்தார். இது அவரது தமிழ்ப் பற்றின் சிகரம். இதனை நாம் எல்லோரிடமும் எதிர்பார்க்க முடியாது அல்லவா? அவ்வாறானவர்களின் பெயர்களைக் குறிக்க வேண்டுமானால் கிரந்த எழுத்துகளைப் பயன்படுத்தலாம். அதனையும் காலப்போக்கில் மாற்றிவிடலாம் (ஒலியமைப்பு மாறாமலிருக்க ஆங்கிலத்தையும் பயன்படுத்தலாம்). எடுத்துக்காட்டாக ஸ்ராலின் – இசுடாலின் (Stalin). எல்லா ஒலியமைப்புக்களும் தமிழில் இல்லையே? என்றொரு கேள்வி கூட எழுப்பப்படலாம்? தமிழில் மட்டுமல்ல, எந்தவொரு மொழியாலும் எல்லா ஒலியமைப்புக்களையும் வெளிப்படுத்தமுடியாது. எடுத்துக்காட்டாக ‘ழ’ என்ற ஓசை வேறு எந்த மொழியிலும் இல்லை (தமிழ் – tamil). அதற்காக வேறு எந்த மொழியுமே பிற எழுத்துகளைத் தனதாக்கித் தமது மொழியினை சிதைக்கவில்லையே.

சிலர் இன்றெல்லாம் ‘புஸ்தகம்’ என ஏதோ நாகரிகமென எண்ணிப் பயன்படுத்துகின்றார்கள். ஆரம்பத்தில் ஓலைச்சுவடிகளைப் பொத்தி வைத்திருந்ததால் (காப்பிற்காக) ஏற்பட்ட பொத்தகம் என்ற சொல்லே புத்தகம் ஆகியதுவரைச் சரி, அதற்குள் ஏன் ‘ஸ்’? வேறு சிலர் தமிழரின் வேட்டிக்குள்ளேயே ‘ஸ்’ இனை விட்டுவிட்டார்கள் (வேஸ்டி). இவ்வாறு தேவையற்ற முறைகளில் கிரந்த எழுத்துக்களைப் பயன்படுத்துவது மானக்கேடே தவிர நாகரிகம் அன்று. முடிவாக கிரந்த எழுத்துகளைப் பயன்படுத்துவதனை முற்றாகத் தவிர்க்க வேண்டும் (பெயர்கள் மட்டும் புறநடை). தொடக்க காலத்தில் முடியுமானவரையாவது முயற்சிக்க வேண்டும்.

**வட மொழிச் சொற்களை விலக்கல்:**

தமிழ் மொழியில் பல மொழிச் சொற்கள் கலந்து காணப்படும்போதும், வட மொழிச் சொற்களே மிகுதி. மேலும் அவையே கூடுதலாகக் கேடானவை, ஏனெனில் அவற்றினையும்

எம்மில் பலர் தமிழ் என்றே எண்ணியிருப்பதலாகும். நாம் ஏற்கனவே பார்த்தது போல வடமொழி தமிழுக்கு ஒரு ‘கேள் போல் பகை’ (உறவாடிக் கெடுக்கும் பகை) ஆகும். இவ் வடமொழிச் சொற்களை இனங் காண்பதற்குச் சரியான முறையாக வேர்ச்சொல் ஆய்வே காணப்படும். தமிழிலுள்ள சொற்கள் யாவுமே பொருள் குறித்தனவே என ஏற்கனவே பார்த்துள்ளோம். எனவே வேர்ச்சொல் விளக்கம் உரிய முறையிலிருந்தால், அச் சொல் தமிழே. வடமொழிச் சொற்களை இனங் காண்பதற்குச் சில வழிமுறைகளிலிருக்கின்றன. அவற்றினை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

1. ஒரு சொல்லில் கிரந்த எழுத்துகள் {நாம் ஏற்கனவே பார்த்த ஸ,ஷ,ஜ,ஹ,ஸ்ரீ...} இருந்தால், அச் சொல் தமிழல்ல. அவ்வாறான சில வடமொழிச் சொற்களையும், அவற்றுக்கான தமிழ்ச் சொற்களையும் பார்ப்போம்.

வருஷம் = **ஆண்டு**
சந்தோஷம் = **மகிழ்ச்சி**
போஜனம் = **உணவு**
சகஜம் = **வழக்கம்**
ஸந்ததி = **கால்வழி**
ஜனநாயகம் = **மக்களாட்சி**

அதே வேளை சில தமிழ்ச் சொற்களிடையே கிரந்த எழுத்துகளை வலிந்து புகுத்தியுள்ளார்கள் (எ.கா. புஸ்தகம், வேஸ்டி). இவற்றில் கிரந்த எழுத்துகளை நீக்கிப் பயன்படுத்த வேண்டும் (எ.கா. புத்தகம், வேட்டி). எவ்வாறு இனங் காண்பது? வேர்ச் சொல் விளக்கமே தீர்வாகும். எடுத்துக்காட்டாக, பழங்காலத்தில் ஓலைச் சுவடிகளைப் பொத்தி வைத்துப் பேணி வந்ததால், அவை பொத்தகம் என அழைக்கப்பட்டுப் பின் புத்தகம் என மருவியது. அதே போன்று துணியினை வெட்டுவதால், வேட்டி எனப்பட்டது {அறுப்பதால் அறுவை (உடை) போன்று}.

2. பெருமளவிற்கு முன்னொட்டுக் கொடுத்து எதிர்ச்சொற்கள் ஆக்கப்படும் ‘சொல்இணைகள்’ வடமொழிச் சொற்களே. குறிப்பாக ‘அ’ முன்னொட்டுப் பயன்படுத்தப்படும் இணைகள். அவ்வாறான சிலவற்றைப் பார்ப்போம்.

| | |
|---|---|
| சாதரணம் – அசாதரணம் | ::: **வழமை – வழமையல்லாத** |
| தர்மம் – அதர்மம் | ::: **அறம் – அறமின்மை** |
| சுத்தம் – அசுத்தம் | ::: **தூய்மை – அழுக்கு** |
| கிரமம் – அக்கிரமம் | ::: **ஒழுங்கு – ஒழுங்கின்மை** |
| ஹிம்சை – அஹிம்சை | ::: **வன்முறை – வன்முறையற்ற** |

3. தமிழில் முதலெழுத்தாகச் சில எழுத்துகள் (ட, ண, ர, ல, ழ, ள, ற, ன) வராது. அவ்வாறு வந்தால் அவை வடமொழிச் சொற்களே

லட்சம் = **நூறாயிரம்**

லட்சியம் = **குறிக்கோள்**

ரதம் = **தேர்**

ராத்திரி = **இரவு**

யதார்த்தம் = **இருப்புநிலை, உண்மைநிலை**

ரகசியம் = **மறைபொருள்**

{மேலுள்ள சொல்லினை இரகசியம் என எழுதினாலும் அது தமிழாகாது}

4. தமிழில் குறில் எழுத்தில் தொடங்கும் தமிழ்ச் சொல்லுக்கு அடுத்து 'ர்' என்ற மெய் தோன்றாது. அவ்வாறு தோன்றின் அது தமிழல்ல.

அர்த்தம் = **பொருள்**

அர்ப்பணம் = **படையல்**

சொர்க்கம் = **பரமபதம்**

கர்மம் = **செயல்**

5. 'சௌ' என்ற எழுத்தில் தொடங்கும் சொற்களும் தமிழாகாதவை.

சௌக்கியம் = **நலம்**

சௌந்தர்யம் = **பேரழகு**

மேற்கூறிய முறைகளைக் கடைப்பிடித்துப் பெருமளவு சொற்களை இனங் கண்டுகொள்ளலாம். இவற்றினைத் தவிர ஏனைய வட சொற்களை வேர்ச்சொல் விளக்கம் மூலமே கண்டுகொள்ள முடியும்.

அதே வேளை 'ச' வரிசையிலேயே தமிழ்ச் சொற்கள் தொடங்காது என்றொரு பிழையான கருத்துண்டு. அதனையும் பார்த்து விடுவோம்.

**'ச' வரிசை முதல் எழுத்தாக வருமா?**

தொல்காப்பியம் 'ச' வரிசையில் தமிழ்ச் சொற்கள் தொடங்காது எனச் சொன்னதா? அல்லது தொல்காப்பியத்தினைப் படி (Copy) எடுக்கும் போது ஏற்பட்ட தவறினால் அவ்வாறு இடம்பெற்றதா! எனப் பார்ப்போம். முதலில் சங்க இலக்கியங்களில் 'ச' இல் தொடங்கும் சொற்கள் உள்ளனவா? என ஆராய்ந்தால், இக் குழப்பம் தீரும். சகடம், சடை, சந்து, சந்தி, சமழ்ப்பு என ஒரு நீண்ட வரிசையில் தமிழ்ச் சொற்கள் சங்க இலக்கியங்களில் கொட்டிக்கிடக்கின்றன. தொல்காப்பியர் அவ்வாறு சொல்லியிருந்தால், சங்க இலக்கியங்களில் அந்த விதி மீறப்பட்டிருக்காது. 'சமன்' எனும் சொல் திருக்குறளிலேயே

உண்டு . தொல்காப்பியர் கூறியிருந்தால், வள்ளுவரே மீறியிருப்பாரா? அவ்வாறாயின் தொல்காப்பியர் சொன்னதாகக் கருதப்படுவது யாது?

"சகரக் கிளவியும் அவற்றோர் அற்றே
அ ஐ ஔ என்னும் மூன்றலங் கடையே"

இதனைக் கொண்டே இக் குழப்பம். இது தொல்காப்பிய மூலத்திலிருந்து படி எடுக்கும்போது ஏற்பட்ட குழறுபடியாகவோ அல்லது வேண்டுமென்றே 'ச' இல் தொடங்கும் தமிழ்ச் சொற்களை களவாடும் வஞ்சக நோக்கில் செய்யப்பட்ட ஒரு திரிபு வேலையாகவோ இருக்கலாம். அவ்வாறாயின் அதன் மூல வடிவம் என்ன? இதோ மொழி ஞாயிறு பாவாணர் சொல்கின்றார்.

"சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே
அவை ஔ என்னும் ஒன்றலங் கடையே" .

அதாவது 'சௌ 'எழுத்தில் மட்டும் தொடங்காது என்கிறார். முடிவாக, 'ச' என்ற எழுத்தில் தமிழ்ச் சொற்கள் தொடங்கும். 'ச' வில் தொடங்கும் சில வட மொழிச் சொற்கள் உண்டு {சதா, சக்தி...}. ஆனால் 'ச' வரிசையில் தொடங்கும் பல்லாயிரக் கணக்கான தூய தமிழ்ச் சொற்களுமுண்டு. 'ச' வரிசையில் இடம்பெறும் 'சௌ' என்ற எழுத்தில் மட்டுமே தமிழ்ச் சொற்கள் தொடங்க மாட்டாது.

இப் பகுதியினுள் இறுதியாக எம்மால் பெருமளவிற்குப் பயன்படுத்தப்படும் சில வட சொற்களையும், அவற்றுக்கான தமிழ்ச் சொற்களையும் கூடப் பார்த்துவிடுவோம்.

அத்தியாயம் – **படலம்**
அகங்காரம் – **செருக்கு**
அதிபர் – **தலைவர்**
அபூர்வம் – **புதுமை**
அனுபவம் – **பட்டறிவு**
அனுமதி – **இசைவு**
அர்த்தம் – **பொருள்**
ஆச்சரியம் – **வியப்பு**
ஆனந்தம் – **பெரு மகிழ்வு**
இராகம் – **பண்**
இலஞ்சம் – **கையூட்டு**
உபயோகம் – **பயன்**
உத்தரவு – **கட்டளை**
உற்பத்தி – **ஆக்கம்**
உதாரணம் – **எடுத்துக்காட்டு**

எசமான் – **தலைவன்**
ஐதீகம் – **சடங்கு**
கல்யாணம் – **திருமணம்**
கோபம் – **சினம்**
சதம் – **நூறு**
சத்தம் – **ஒலி**
சந்தேகம் – **ஐயம்**
சரித்திரம் – **வரலாறு**
சத்தியம் – **உண்மை**
சமஸ்டி – **கூட்டாச்சி**
சவுக்காரம் – **வழலை**
சம்பவம் – **நிகழ்வு**
சாரதி – **ஓட்டுநர்**
சாரம் – **பிழிவு**
சிகிச்சை – **மருத்துவம்**

மத்தியானம் – **நண்பகல்**
மந்திரி – **அமைச்சர்**
யந்திரம் – **பொறி**
விஞ்ஞானம் – **அறிவியல்**
விவசாயம் – **உழவு, கமம்**
வைபவம் – **விழா**
பயம் – **அச்சம்**
பரிணாமம் – **படிமலர்ச்சி**
பாசை – **மொழி**
பிதா – **தந்தை**
பேட்டி – **நேர்காணல்**
பௌர்ணமி – **நிறைமதி**
மரணம் – **இறப்பு**
மேளம் – **பதலை**
மௌனம் – **பேசாமை**
யாகம் – **வேள்வி**
வதந்தி – **புரளி**
வினாடி – **நொடி**
நிமிடம் – **மணித்துளி**
வருசம் – **ஆண்டு**
தசாப்தம் – **பதிற்றாண்டு**

இவ்வாறு மேலும் பட்டியல் நீளும். இந்த வட மொழிச் சொற்களை முடியுமானவரைத் தவிர்த்துப் பயன்படுத்துங்கள். சிறிது சிறிதாக மாற்றம் நிகழட்டும். எமது மொழி மீண்டும் செழுமை பெறட்டும்.

வட மொழி எனப் போலியாகக் காட்டித் தமிழ்ச் சொற்களைக் களவாடும் போக்கு ஒன்றும் காணப்படுகின்றது. இது குறித்தும் கவனம் செலுத்த வேண்டும். காட்டாக, முதலாவது குறளில் வரும் எல்லாச் சொற்களும் வடமொழியே என்றொரு கூட்டம் கிளம்பும். உண்மையில் முதலாவது குறளில் வரும் எல்லாச் சொற்களும் தமிழே.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

**அகரம்** : தமிழின் முதலெழுத்து.

**ஆதி** : "ஆதல்" என்பதனை வேராகக் கொண்டது.

**பகவன்** : பகு + வ் + அன் = பகவன் (Pagavan என்ற பலுக்கல், 'ப்பாகவான்' Bhagawan அல்ல. ''பகு' என்ற வேரினை அடியாகக் கொண்டது.

**உலகு** : ஏற்கனவே பார்த்துள்ளோம்.

திருக்குறளில் வெறும் விரல்விட்டு எண்ணக் கூடிய வட சொற்களேயுண்டு. முனைவர் இரவி சங்கர் கண்ணபிரான் வெறும் 8 சொற்கள் மட்டுமே குறளில் இடம்பெற்ற வட சொற்கள் எனக் கூறுகின்றார். அவையாவன: **இந்திரன், அவி, ஆகுலம், ஆசாரம், சலம், அந்தம், நாமம், பாவி**. வேறு சில அறிஞர்கள் இவற்றினைக் கூடக் குறைப்பார்கள். இச் சொற்களைக் கூட இடித்துச் சொல்வதற்கே வள்ளுவன் கையாண்டுள்ளான். காட்டாக, வேள்வி (யாகம்)

தமிழரின் பண்பாடல்ல என்பதனைக் குறிக்கவே 'அவி' (அவிஸ்) என்ற சொல்லை வள்ளுவன் கையாளுவார். எனவே இங்கு தமிழ்ச் சொற்களையும் நாம் வட மொழி என ஒதுக்கிவிடக்கூடாது என்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

மேலே தமிழ் எழுத்துகளும், தமிழ்ச் சொற்களும் எவ்வாறு மறைக்கப்பட்டும், சிதைக்கப்பட்டுமுள்ளன எனப் பார்த்தோம். இப்போது, தமிழ்ப் பெயர்களையாவது விட்டு வைத்தார்களா எனப் பார்ப்போம்.

## தமிழ்ப் பெயர்கள் மறைப்பு:

இன்றுள்ள தமிழர்களில் தமிழிலேயே பெயர் வைத்துள்ளவர்கள் எத்தனை விழுக்காடு தெரியுமா? சரியான தரவுகளில்லாத போதும் பாதிக்கு மிகக் கூடுதலான அளவில் தமிழல்லாத பெயர்களையே வைத்துள்ளார்கள். தமது மொழியல்லாத இன்னொரு மொழிப் பெயர்களை வைத்துள்ள கேட்டினை எவ்வாறு புரிந்துகொள்வது? தமிழ்ப் பெயர்களைக் கூட விடுங்கள், பலர் தமிழ் எழுத்துகளை மட்டுமே (கிரந்த எழுத்து நீங்கலாக) பயன்படுத்தி எழுத முடியாத பெயர்களையல்லவா வைக்கின்றார்கள். அவ்வாறு வைப்பதுதான் நாகரிகம் என்று வேறு கருதுகின்றார்கள். அவ்வாறான சில 'நாகரிகப் பெயர்களைப்' பார்ப்போமா: அபர்ணா, ஜாசிக்கா, கேசவ் . சரி, இவற்றுக்கான பொருள் என்ன?

அபர்ணா – ஆடையில்லாதவள்
ஜாசிக்கா – பிச்சைக்காரி
கேசவ் – மயிராண்டி.

இதுவா நாகரிகம்! கீழடி அகழ்வாய்வில் கிடைத்த சில தமிழ்ப் பெயர்களைப் பார்ப்போம். **ஆதன், திசன், குவிரன், இயனன், கோதை...** எத்தகைய பொருள் பொதிந்த அழகான தமிழ்ப் பெயர்கள். சங்க இலக்கியங்களில் மிகுதியான தமிழ்ப் பெயர்கள் கொட்டியுள்ளனவே. ஏன் தமிழில் பெயரிடும் மரபு மாறியது? விடை: மதம் + சோதிடம் + சாதி ஆகிய பிற்போக்குத் தனங்கள். ஒருவரின் முதன்மையான அடையாளம் அவரது பெயரே; அது கூட அவரது மொழியில் இல்லையாயின், என்ன சொல்வது! ஆட்களின் பெயர்கள் மட்டுமல்லாமல், அமைப்புக்களின் பெயர்கள், கதை மாந்தர்களின் பெயர்கள் என அனைத்தும் தமிழில் புழங்கப்பட வேண்டும்.

கீழடிப் பெருமை பழந் தமிழரின் முயற்சியாகும். அத்தகைய முயற்சியினைப் பார்த்து வியப்பது மட்டுமல்லாமல், அப் பெயர்களையாவது நாளாந்தப் பயன்பாட்டிற்கு கொண்டுவர

வேண்டும். இத்தகைய ஒரு முயற்சியாக 'சூட்டி மகிழ்வோம் தூய தமிழ்ப்பெயர்கள்' என்றொரு நூல் சிக்காக்கோ தமிழ் மாநாட்டில் வெளியிடப்பட்டது. அதில் 46,000 பெயர்களை நமக்கு கொடுத்துள்ளனர். உண்மையில் இது மிகவும் பாராட்டத்தக்க முயற்சி. அதே போன்று ஈழத்திலும் போராளிகளின் நிழலாட்சிக் காலத்தில் 'தமிழ்ப் பெயர்க் கையேடு' ஒன்று வெளியிடப்பட்டது. அக் காலத்தில் ஈழத்தில் ஏற்கனவேயிருந்த பலரின் வடமொழிப் பெயர்கள் கூடத் தமிழாக மாற்றப்பட்டன. அத்தகைய ஒரு முயற்சியினூடாகவே எமது அடையாளத்தினை நாம் பேணிக் கொள்ள முடியும்.

### தமிழ் ஊர்ப் பெயர்கள் மறைப்பு:

ஈழத்தில் ஒரு பெரும் போரின் மூலமும், திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் மூலமும் பல தமிழ் ஊர்ப் பெயர்கள் சிங்களமாக்கப்பட்டது தெரிந்ததே. தமிழகத்திலோ எத்தகைய போருமின்றிப் பல ஊர்ப் பெயர்கள் வடமொழிப் பெயர்களாக்கப்பட்டமை பலருக்குத் தெரிந்திருக்காது. அவற்றில் சில வருமாறு.

புளியங்காடு ›› **திண்டிவனம்**

மயிலாடுதுறை ›› **மாயவரம்**

குரங்காடுதுறை ›› **கபிஸ்தலம்**

அழிவிலி ›› **அவினாசி**

முகவை ›› **ராமேஸ்வரம்**

மரைக்காடு ›› **வேதாரண்யம்**

பட்டியல் நீளும். இங்குள்ள தமிழ்ப் பெயர்களைப் பாருங்கள். அவை இயற்கையுடன் இயைந்து, அப் பகுதிகளில் காணப்பட்ட விலங்குகள், மரங்கள் என்பவற்றின் பெயரோடு காணப்படுகின்றது. அவை ஒவ்வொன்றும் அந்த ஊரின் பழைய வரலாற்றினைக் குறிப்பன. இவற்றினை வடமொழியாக்கி, அவற்றின் தொன்மையும் கெடுக்கப்படுகின்றன. இந்தச் சிதைப்பு நுட்பமாகவே நடைபெற்றது. எடுத்துக் காட்டாக 'மரைக்காடு' என்ற ஊரினைப் பார்ப்போம். மரை விலங்குகள் நிறைந்திருந்த முல்லை (திணை) நிலமாகக் காணப்பட்ட ஊர் என்பதால் அப் பெயர் பெற்றிருந்தது. அதில் 'மரை' என்ற சொல்லினை 'மறை' என முதலில் சிதைத்தார்கள் (மறைக்காடு). பின்பு 'மறை' என்றால் 'வேதம்'எனவே வேதாரண்யம் என மாற்றிவிட்டார்கள். மதம் பிடித்த தமிழனும் கண்ணை மூடிக் கொண்டு, தனது திணை சார்ந்த பெயரிடலைத் தொலைத்து நிற்கின்றான் இவற்றினையும் மாற்றி தமிழ் ஊர்ப் பெயர்களையும் மீட்டெடுக்க வேண்டியுள்ளது. முதலில் எமது நாளாந்தப் பயன்பாட்டில் தமிழ்ப் பெயர்களைக் கொண்டுவர வேண்டும்.

## தமிழ் நூல்கள் மறைப்பு:

நாம் ஏற்கனவே பார்த்தது போல தொல்காப்பியத்திற்கு முன்னரே பல தமிழ் நூல்களிருந்திருக்கின்றன. அவையெல்லாம் என்னவாயின? கவிப்பேரரசு பின்வருமாறு சொல்கின்றார்

> "இந்த ஓலைகளின் மீதுதான் தமிழன் மரபணுக்கள் மாறி மாறிப் பயணப்பட்டன. இந்த ஏடுகளைத்தான் தின்றழித்தது கடல், நின்றழித்தது தீ, உண்டழித்தது மூடம், தமிழை மறந்த ஆட்சியும் அழித்தது, தமிழ் தெரியாத பூச்சியும் அழித்தது"

அவர் தனக்கே உரிய கவி நடையில் சொல்லியுள்ளார். அனல்வாதம் (தீ), புனல் வாதம் (நீர்) எனத் தமிழ் ஏடுகள் அழிக்கப்பட்டன. எந்த 'சைவம்' (சைவ சமயம்) தமிழ் வளர்த்தது என்று சொல்கின்றார்களோ! அதே சைவம் தான் பார்ப்பனியத்தின் பக்கம் நின்று தமிழ் ஏடுகளை அழித்தது. மொழி ஞாயிறு பாவாணர் தனது 'தமிழர் வரலாறு' எனும் ஆய்வு நூலில் **"வைணவம், சைவம் ஆகிய இரண்டுமே வேத மரபு சார்ந்தவை என்ற போதிலும், வைணவத்தை விட சைவமே தமிழ் மொழியினை அதிகம் சிதைத்தது"** என்கின்றார். பல்லவர் காலத்திலிருந்து அதற்குப் பிற்பட்ட மன்னர்களும் அதற்குத் துணை போயினர். மக்களும் மதம் எனும் மூடத்தில் மூழ்கியிருந்தமையால் கண்டுகொள்ளவில்லை. பழந் தமிழ் நூல்கள் எவ்வாறு அழிக்கப்பட்டன என்பதற்குத் தமிழ்த் தாத்தா உ.வே.சா (சாமி நாத அய்யர்) வின் 'என் சரிதம்' எனும் நூல் சான்று பகர்கின்றது. சிலப்பதிகாரத்தின் சிறந்த (ஒலைச்) சுவடி தேடி 'கரிவலம் வந்த நல்லூர் பால் வண்ணநாதன்' கோயிலினை அடைந்து கோயில் தர்மகர்த்தாவிடம் சுவடிகளைக் கேட்கின்றார். அதற்குத் தர்மகர்த்தா பின்வருமாறு பதிலளிப்பதாக உ.வே.சா தனது என் சரிதம் நூலில் பதிவு செய்துள்ளார்.

> "ஆகம சாஸ்திரத்தில் சொன்னபடி அவற்றை நெய்யில் தோய்த்து ஹோமம் செய்து விட்டார்கள்"

அதாவது ஆகம சாத்திரங்களின் படி தமிழ் ஏடுகளை நெய்யில் தோய்த்து யாகத்தில் போட்டு எரித்து விட்டார்கள். பழந் தமிழரின் அரும் பெரும் நூல்கள் பலவும், இடைக்காலத் தமிழரின் கோயிலுக்கான கொடையான நெய்யில், அதே தமிழர்களின் முன்னிலையில் யாகத்தில் எரிக்கப்பட; மதம் பிடித்த இடைக்காலத் தமிழர்கள் கண்ணை மூடிக் கும்பிட்டு, தட்சணையும் வழங்கியிருக்கின்றார்கள். 'என் சரிதம்' எழுதியது வைதீகத்தில் தோய்ந்த உ.வே.சா அய்யர் என்பதால் யாராலும் இச் செய்தியினைப் புறக்கணிக்க முடியாது.

இடைக்காலத்தில் பக்தியில் கண்ணை மூடிக் கொண்ட தமிழன் இன்னமும் விழித்துக்கொள்ளவில்லை என்பதுதான் இங்குள்ள இன்னலாகும்.

தமிழ் நூல்களை அழித்தது மட்டுமன்றி, அவற்றுக்கான பொருளினைக் கூடப் பலவிடங்களில் மாற்றியமைத்தார்கள். திருக்குறளின் உரை விளக்கம் (குறிப்பாக பரிமேலழகர் உரை, இது பற்றிப் பின்னர் பார்ப்போம்), பல இடைச் செருகல்கள் எனப் பட்டியல் நீளும். சங்க இலக்கியங்களில் ‘கடவுள் வாழ்த்து’ என்றொரு பகுதியினைப் புகுத்தினார்கள். ஒன்பதாம் நூற்றாண்டில் (CE 9th cent) வாழ்ந்த பாரதம் பாடிய பெருந்தேவனார் என்பவரினை வைத்து அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை ஆகிய நூல்களில் கடவுள் வாழ்த்து உள் நுழைக்கப்பட்டது. இவ்வாறு பல குழறுபடிகள் செய்தார்கள்.

ஆத்திசூடியில் சங்கராச்சாரியார் நடாத்திய விளையாட்டினை முனைவர் கண்ணபிரான் ‘அறியப்படாத தமிழ்மொழி’யில் படம்பிடித்துக் காட்டுவார். ஆத்திசூடி ‘அறம் செய விரும்பு’, ‘ஆறுவது சினம்’ என அ, ஆ, இ... என எழுத்துவரிசையில் இடம்பெறும். இந்த எழுத்து வரிசையில் ய,ர,ல,வ–க்கு

‘இயல்பு அலாதன செய்யேல்’
‘அரவம் ஆட்டேல்’
‘இலவம் பஞ்சில் துயில்’
‘வஞ்சகம் பேசேல்’

வரிகள் வந்துவிட்டன (ய,ர... போன்ற எழுத்துகள் முதலெழுத்தாக வராத போது, இரண்டாம் எழுத்தாக வரும்).

அடுத்த எழுத்து ‘ற’. இது (ற) முதல் எழுத்தாக வரமுடியாது என்பதால் இரண்டாம் எழுத்தாகவே வரும்.

**‘அறனை மறவேல்’** என்பதே எழுத்துவரிசைப்படி சரியாக அமையும்.

அறனை மறவேல் = அறம் [Ethics] மறக்காதே!

இங்குதான் சங்கராச்சாரியார் புகுந்து விளையாடினார். ‘ற’ வினை ‘ர’ ஆக மாற்றி, “அறன்” – “அரன்” எனக் கடவுளாக மாற்றிவிட்டார். இவரது தில்லுமுள்ளினை அடுத்த வரியான ‘அனந்தல் ஆடேல்’ (ன) காட்டிக்கொடுத்துவிட்டது. இப்படிப்பட்ட பல சிதைப்புகள் நடந்தேறியுள்ளன.

## தமிழர்களின் பண்பாட்டுச் சிதைப்பு:

தமிழர்களின் பண்பாட்டினையும் எதிரிகள் விட்டுவைக்கவில்லை. பெண்களும் சங்க காலத்தில் (அக் கால) கல்வியறிவு பெற்றிருந்தார்கள் என இரண்டாம் படலத்தில் பார்த்திருந்தோம். பிற்காலத்தில் அது என்னவாயிற்று?

> "கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
> மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே" [புறம் 183]

என்று ஆரியப் படையினை மட்டுமல்லாமல், ஆரியக் கருத்தினையும் கடந்த நெடுஞ்செழியன் எனும் மன்னன் பாடினானே! பிற்காலத்தில் அதற்கு முற்றிலும் மாறான முறையில், மனுதர்மத்தின் (மனுஸ்மிர்தி) படி, மன்னர்களே பெண்களுக்கும், தாழ்த்தப்பட்ட சாதியினர்களுக்கும் கல்வியுரிமை மறுத்தார்கள்.

> "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
> தொகுத்தவற்றுள் எல்லாந் தலை" [குறள் 322]

என்ற குறளிற்கேற்ப பகுத்துண்டு வாழ்ந்த தமிழர்களின், '**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே**' (மணிமேகலை) என வாழ்ந்த தமழர்களின், பண்பாட்டிற்கு என்னாயிற்று? மேற்கூறிய தமிழர்களின் பண்பாடுகள் எல்லாம் சாதி, மதம் என்ற இடைச் செருகல்கள் மூலம் சிதைக்கப்பட்டன. {சாதி,மதம் பற்றி விரிவாக அடுத்த படலங்களில் பார்ப்போம்}. தமிழர்களின் விழாக்களிற்கு என்னாயிற்று? உழவர் நாளான தைப் பொங்கலிற்குக் கூடப் புராணக்கதை புனையப்பட்டதே! மகர சங்கராந்திதான் தைப் பொங்கல் என்பது ஏற்கனவே அவர்களால் முன்வைக்கப்பட்ட ஒரு விளக்கம். கதிரவனின் வட செலவு (வடக்கு நோக்கிய நகர்வு) என்பதற்கான ஒரு வடமொழிப் பெயராக 'சங்கராந்தி' என்பதனைக் கொண்டு வந்துபார்த்தார்கள். அதில் வடமொழிப் பெயரினை மட்டும் நீக்கிவிட்டால், அது ஒரு இயற்கை சார் நிகழ்வே. இதில் மதம் சார்ந்த எதுவுமில்லை என நினைத்தார்களோ என்னவோ புதுப் புராணக்கதை ஒன்றினையும் கொண்டு வந்தார்கள். அதுவே 'கோவர்த்தன மலைக் கதை' ஆகும். இக் கதையின் படி, இந்திராவினை (இந்திரனை) வணங்காமல் மக்கள் புறக்கணித்தமையால், இந்திரா சினமுற்றார். இதனால் மழை, மின்னல் போன்றவற்றை மக்கள் மீது ஏவினார். அதனால் அச்சமுற்ற மக்கள் கிருசுணரிடம் முறையிட, அவர் கோவர்த்தன மலையினைத் தூக்கிக் குடையாகப் பிடித்து, மக்களைக் காப்பாற்றினார் ('மழைக்கு நல்ல குடை என மலை பிடித்த கண்ணனாம்' பாடல் நினைவிருக்கின்றதா, அதே தான்). பின்னர் இந்திரா தவறினை உணர்ந்தமையால், அவருக்குப் பொங்கி மகிழ்ந்தார்கள். அதுதான் பொங்கல்

ஆயிற்று. இவ்வாறு செல்கின்றது அந்தக் கதை. சரி, இந்தக் கதை உண்மையென்றால் பொங்கலன்று இந்திராவிற்கு அல்லவா படைத்து வணங்குவார்கள். ஏன் கதிரவனையே வணங்குகின்றார்கள் எனக் கேளுங்கள். பதிலிருக்காது. ஏனெனில், இன்றைய பொங்கலுடன், பழங்கால (சிலப்பதிகாரம் குறிப்பிடும்) இந்திர விழாவினையும் சேர்த்துக் களவாட முனைந்து, இரண்டையுமே கோட்டை விட்ட புராணக்கதைதான் இந்தக் கோவர்த்தன மலைக் கதை.

தைப் பொங்கலிற்கு ஒரு புராணக்கதை கட்டியவர்கள் மாட்டுப் பொங்கலை மட்டும் விட்டு வைப்பார்களா என்ன? அதற்கும் ஒரு புராணக் கதை. ஒரு முறை சிவன், நந்தியிடம் பூமியிலிலுள்ள மக்களிடம் சென்று 'மாதமொரு முறை எண்ணெய் தேய்த்துக் குளித்து, மாதமொருமுறை உண்ணுமாறு' சொல்லச் சொல்லிக் கேட்கின்றார். நந்தி தவறுதலாக ஒவ்வொரு நாளும் உண்ணுமாறு கூறி விடுகின்றது (நல்லவேளை நந்தி மாறிக் கூறியிருக்காவிடின், இன்றைக்கு எமக்கு மாதத்திற்கொருமுறைதான் உணவு). இவ்வாறு பொய் சொன்னதற்காகச் சாபம் பெற்ற நந்திதான் பின்னர் மாடுகளாக உலகில் பிறந்தது எனவும், அதனால் மாடுகளாகப் பிறந்த நந்திக்காகவே மாட்டுப் பொங்கல் பொங்கப்படுகின்றது எனச் செல்கின்றது அந்தப் புராணக்கதை. இம் முறை ஏறு தழுவலிற்கு வேறு புதிதாக இன்னொரு புராணக்கதை வேறு கட்டப்பட்டது.

மேற்கூறிய விழாக்கள் குறித்த புராணக்கதைகள் பொய் என்பது பலருக்கும் தெரிந்ததே. ஆனால் பழந் தமிழர்களின்

'விளக்கீடு' எனும் இயற்கை சார் விழா வைதீகத்தின் பிடிக்குள் சென்றமையினைப் பலரும் அறிந்திருக்க மாட்டார்கள். இதற்கும் அடி முடி தேடிய ஒரு புராணக்கதை புனையப்பட்டது. அதே போன்று சங்க காலப் பாடல்கள் குறிப்பிடும் 'பாவை நோன்பு' எனும் இயற்கையினைப் போற்றும் விழா, இன்று 'திருவம்பாவை' என்றாகிவிட்டது. இவ்வாறு களவாடப்பட்ட விழாக்களை அடுக்கிக்கொண்டே போகலாம். அதே போன்று 'தீபாவளி' போன்ற விழாக்கள் தமிழர்களின் தலையில் திணிக்கப்பட்டன. மற்றையவர்களின் இறப்பினைக் கொண்டாடுவது தமிழர்களின் மரபல்ல (ஏன் மனிதப் பண்பேயல்ல). 'தீபாவளி' குறித்து ஈழத்து அறிஞர் பேரா. மௌனகுரு தனது கருத்தினை தனது முகநூலில் பதிவிட்டிருந்தார். அப் பதிவு வருமாறு.

"இது ஓர் தீபாவளிக் கதை

பாவம் நரகாசுரன்

இன்று தீபாவளி. அடிக்கடி நண்பர்களும், மாணவர்களும் தொலைபேசியில் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார்கள்.

அனைவரும் மகிழ்ச்சிகரமாக இருகிறார்கள் போலத் தெரிகிறது.

கொண்டாட்டம் என்பது மகிழ்ச்சிதானே?

மகிழ்ச்சியாக எல்லோரும் இருப்பதைத்தானே நாம் விரும்புகின்றோம்.

மட்டக்களப்பில் நான் பிறந்த காலங்களில் 1940 களில் இற்றைக்கு 77 வருடங்களுக்கு முன்னர் தீபாவளியை யாரும் கொண்டாடவில்லை.

நாங்களும் வீட்டில் இதனைக் கொண்டாடியதாக ஞாபகம் இல்லை.

எமக்கு அன்று கொண்டாட்டம்,சித்திரைமாதப் புது வருடம்தான்.

அன்றுதான் எங்கள் வீட்டில் பலகாரம் சுடுவார்கள்.

/முதல் நாளிரவு நான்கைந்து குடும்பங்கள் சேர்ந்து பலகாரம் சுட்டு அதனைத் தமக்குள் பகிர்ந்து கொள்வார்கள்.

குடும்பங்களின் விழா அது. கிராமங்களின் விழா அது.

புது உடுப்புகளை காலையில் முதலில் தென்னம் பிள்ளைகளுக்கு உடுத்திவிடச் சொல்லுவார் அம்மா.

தென்னம்பிள்ளைகள் அணிந்த உடுப்பைத்தான் நாம் பின்னர் அணிவோம்.

இயற்கையை நேசித்த மனிதர்கள் அன்று.

சித்திரை நாள் எங்களுக்குப் பெரும் கொண்டாட்ட நாள்.

தைப் பொங்கலும் கொண்டாட்ட நாள்தான்.

அதனை விவசாயிகள் கொண்டாடுவர். ஏனையோரும் வீட்டில் பொங்கி மகிழ்வர்.

ஆனால் சித்திரை வருடமளவு அது அன்று பெரும் கொண்டாட்டமில்லை.

சின்ன வயதில் தமிழ் நாட்டிலிருந்து.

கல்கி தீபாவளி ஆண்டுமலர்.

ஆனந்த விகடன் தீபாவளி ஆண்டுமலர்.

கலைமகள் தீபாவளி ஆண்டுமலர்.

அமுதசுரபி தீபாவளி ஆண்டுமலர்.

எனச் சில தீபாவளி மலர்கள் பள பளப்பான தாளில் கவர்ச்சிகரமான வர்ணப்படங்களுடன் பெரிய பெரிய அளவில் ஆண்டு தோறும் தீபாவளி நாளில் வெளிவரும்.

அவற்றின்மூலம்தான் தமிழகத் தீபாவளி எமக்கு அறிமுகமாகியதாக ஞாபகம்.

அதன்மூலம்தான்

தலைத் தீபாவளி,

கங்காஸ்னானம்,

அத்திம்பேர்,

தீபாவளிச் சீடை, முறுக்கு,

விசிறியச் சுழட்டும் குடும்பிவைத்த பூணூல் போட்ட தத்தாமார், மடிசார்வைத்த பெண்கள்

எனப் பல தீபாவளி சார்ந்த சமாசாரங்கள் சிறுவயது மனதில் படிய ஆரம்பித்தன.

தீபாவளிச் சிறு கதைகள் வேறு அவற்றை மனதில் அழுத்தின.

நரகாசுரனை சத்தியபாமா துணையுடன் கிருஸ்ண பகவான் அழித்த கதையும் எம்மனதில் வேரூன்றியது.

நரகாசுரன் பூமியை மீட்க விஸ்ணு வராக அவதாரம் அதாவது பன்றி அவதாரம் எடுத்து பூமியை மீட்டகதையும், தன்னைமீட்ட வராக அவதாரத்தின் மீது பூமாதேவி காதல் கொள்ள விஸ்ணுவுக்கும், பூமாதேவிக்கும் பிறந்தவனே நரகாசுரன் எனும் கதையும் அவன் கொடுமை பொறுக்க முடியாமல் தந்தையே பிள்ளையைக்கொல்லும் நிலை உருவானது எனும் கதையும் உருவானது.

சற்று வளர்ந்த பின் எனது 15 ஆவது வயதில் திராவிடக் கழகக் கருத்துக்களுக்கு அறிமுகமானபோது நரகாசுரன் என்ற திராவிட குலத் தலைவனை ஆரியனாகிய கண்ணன் அழித்த கதை எமக்கு அறிமுகமானது.

நரகாசுரன் என்பவன் நரன்

அதாவது மனிதன்

அசுரன் என்பதன் அர்த்தம் சுரன் அல்லாதவன்.

சுரர் என்றால் தேவர்

தேவர்கள் என அழைக்கப்பட்ட ஆரியர்கள். அவர்கள் சுரபானம் எனும் மதுவை அருந்தியதால் சுரர் என அழைகப்பட்டனர்.

திராவிடர்கள் ஒழுக்க சீலர்கள்.

மது அருந்தாதோர். ஆகவே அசுரர் என்றால் சுரம் அருந்தாதோர் என்பது அர்த்தம் என்ற கருத்துகள் கூறப்பட்டன.

(அ + சுரம்) என்ற விளக்கங்களைத் திராவிடக் கழக நூல்கள் தந்தபோது இளைஞரான நாம் அதனால் ஈர்க்கப்பட்டோம்.

இவற்றையெல்லாம் தாண்டி மெல்ல மெல்ல தமிழகத் தீபாவளி மட்டக்களப்புத் தமிழ்ப் பண்பாட்டினுள் புகத் தொடங்கி சித்திரை வருடத்திற்கு அடுத்த பெரும் கொண்டாட்டமாக இடம் பெறலாயிற்று.

1960களில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருந்த காலத்தில் எமக்கு

சமணத் தமிழ் இலக்கியங்கள்,

சமணர் எழுதிய இலக்கணங்கள்,

சமணப்புலவர்களின் தனிப்பாடல்கள்

என்பன அறிமுமமாகின.

அவர்கள் பிராமண மதத்திற்கு, வைதீக மதத்திற்கு எதிரானவர்கள்

நால்வகை வருணப்பகுபாட்டை விரும்பாதவர்கள்.

அற ஒழுக்கக் கருத்துகளை மிக அதிகமாக வற்புறுத்தியவர்கள்

சாதாரண

மக்கள் பால் நின்றவர்கள்.

தமிழ் நாட்டின் பெரும் தாக்கத்தை அன்று எற்படுத்தியவர்கள் என்ற விபரங்களும்

சமண தலைவரான மஹாவீரர், அவர் ஸ்தபித்த சமணமதம், அதன் தத்துவங்கள் என்பனவும் அறிமுகமாகின.

இவற்றை எமக்கு அறிமுகம் செய்தவர்கள்

பேராசிரியர்களான கணபதிப்பிள்ளை, வித்தியானந்தன், கைலாசபதி, வேலுப்பிள்ளை ஆகியோராவர்.

கைலாசபதி வகுப்பில் தொடர்ச்சியாகச் சமண தத்துவத்தை எமக்கு விளக்கினார்.

வேலுப்பிள்ளையும் தமிழ்ச்சமணம், தமிழ்ப்பௌத்தம் பற்றி ஆராய்ந்து எமக்குக் கூறினார்.

சமண தீர்த்தங்கரரும் மஹா ஞானியுமான மகாவீரர் மீது ஓர் மதிப்பும் உண்டாயிற்று.

மூத்த பேராசிரியரான கணபதிப்பிள்ளையின் வகுப்புகள் வெகு சுவராஸ்யமானவை.

சிரித்துக்கொண்டு கதையோடு கதையாகப் பல ஆழமான விடயங்களை மிக எளிமையாகக் கூறிசெல்வார்.

ஒரு நாள் அவர் எங்களுக்குப் படிப்பித்துக்கொண்டிருக்கையில்

“உந்தத் தீபாவளி எப்படி வந்தது என்று தெரியுமோடா’

என்று கேட்டார்.

நாங்கள் நரகாசுரன் கதையைக் கூறினோம்.

“அதெல்லாம் புழுகடா. சமண மதத்தின் தலைவரான மஹாவீரர் சமாதி அடைந்த நாளை நினைவுகூர பல தீபங்களை ஏற்றிவைத்து சமணர் கொண்டாடிய சமண விழாவை சைவர்கள் தம் வசப்படுத்திக் கொண்ட கதைதாண்டா தீபாவளி. அதற்காக உருவாக்கப்பட்ட கதைதான் நரகாசுரன் கதை”

என்றார்.

சைவம், சமண மதத்திலிருந்து பல விடயங்களைத் தம்வயப்படுத்திச் சைவமாக்கிக் கொண்டது என்பதற்கு நிறைய உதாரணங்கள் கூறி

“இதுவும் அதில் ஒன்றடா”

என்றார்.

எங்களுக்கு வியப்பு அதிகமாயிற்று

தீபாவளியின் மூலம் பற்றி பேராசிரியர் வேலுப்பிள்ளைகூட தனது நூலில் ஒரு கட்டுரை எழுதியமை ஞாபகம் வருகிறது

ஆனால் அது கண்டுகொள்ளப்படவில்லை

காலங்கள் பல கடந்து விட்டன

இன்று 2017 ஆம் ஆண்டு.

இன்று மட்டக்களப்பில் தீபாவளி பெரும் கொண்டாட்டம்.

நரகாசுரனை அழித்த கதை பாடசாலைகளிலும், சமயச் சொற்பொழிவுகளிலும் சர்வசாதரணமாக சொல்லப்படுவதாயிற்று.

அரசியல் வாதிகளும்,

ஆட்சியதிகாரத்தில் உள்ள பெரும் தலைவர்களும்

சமயத் தலைவர்களும்

இது நரகாசுரன் ஒழிந்த நாள் என்றே மக்களுக்கு வாழ்த்துத் தெரிவிகின்றனர்.

நரகாசுரன் அழிவு மக்கள் மனதில் ஆழமாகப் பதிக்கப்பட்டு விட்டது.

நரகாசுரனுடன் தீபாவளி இணைக்கப்பட்டுவிட்டது.

பெரும் சமயக் கொண்டாட்டமுமாகிவிட்டது.

இக்கொண்டாட்டத்தை இனி மக்களிடமிருந்து பிரிக்கமுடையாது.

காரணங்கள் பல

ஒன்று

இது ஓர் பெரும் சமய விழாவாகிவிட்டது

இரண்டு

இது ஓர் பெரும் கொண்டாட்டமாகிவிட்டது.

கொண்டாட்டமானமையினால் மக்கள் கூடுதல், அதனால் கிடைக்கும் பெரு மகிழ்ச்ச்சி ஒருவருக்கொருவர் மகிழ்ச்சி தெரிவித்தல் என்ற மனித குலம் விரும்பும் அடிமன நல் இயல்புகள் இதில் உள்ளன

மூன்று

பெரும் வணிக நிறுவனங்களின் லாபம் இக்கொண்டாட்டத்தில் அடங்கியுள்ளது, சேலை உடுப்பு, பட்டாசு, பலகார வகைகளுக்கான மூலப்பொருள் வியாபாரம் என்பன இதில் அடங்கும்.

நான்கு

கோயில் வருமானம், பூசகர் வருமானம் என்பன இன்னொருபுறம் உள்ளது.

ஐந்து

பத்திரிகைகளின் தீபாவளி மலர் வருமானம், மற்றொரு புறம் உள்ளது.

ஆறு

தொலைக்காட்சி, போன்ற ஊடகங்களின் இடைவிடாத கருத்தேற்றமும் அவை அவற்றால் அவை அடையும் பெரு வருமானமும் இன்னொருபுறம் உள்ளது.

ஏழு

இவ்வூடகங்களின் அழைப்பை விரும்பி ஏற்றுக் காட்சிகளில் தோன்றிப் புகழ் பெறச்செல்லும் நமது கலைஞர்களும் அறிஞர்களும் இன்னொருபுறம் பெருவாரியாகக் காணப்படுகிறர்கள்.

எட்டு

இது குழந்தைகள் மத்தாப்புக் கொளுத்தி விளையாடும் ஒரு பெரு விழாவாகவும்,அவர்கள் புத்துடை அணியும் விழாவாகவும் கட்டமைக்கப்பட்டு விட்டது. குழந்தைகளின் மகிழ்ச்சிக்காப் பெற்றோர் எதனையும் செய்வர்.

எனவே தீபாவளியைக் கொண்டாட வேண்டாம் என எப்படி சொன்னாலும் அக்கொண்டாட்டத்தை இலகுவில் போக்கிவிட முடியாது.

அது இந்து மக்கள் கொண்டாட்டமாகிவிட்டது.

கொண்டாட்டங்களை மிகவும் வரவேற்கும் பின் நவீன சிந்தனையாளர்களை நாம் காண்கிறோம்.

மக்கள் இணைகிறார்கள் மக்கள் மகிழ்கிறார்கள் என அவர்கள் கொண்டாட்டங்களுக்கு ஓர் புது வியாக்கியானம் அளிக்கிறார்கள்.

ஆனால் கொண்டாட்டங்களுக்குப் பின்னால் மறைந்து கிடக்கும் சுரண்டலையும் பேதங்களை மறக்க வைக்கும் போதை நிலையையும் அவர்கள் தோலுரித்துக் காட்டுவதில்லை.

தீபாவளியைக் கட்டுடைத்துப் பார்க்கலாம்.

அதன் அதிகாரம் எங்கிருக்கிறது என்று பார்க்கலாம்.

தீபாவளிக் கதை கூறும் நரகாசுரன் கதைப் பிரதியை கட்டுடைத்துப் பார்க்கலாம்.

இவையாவும் ஒரு புலமைத்துவ இன்பப் பயிற்சியுமாகும் [Intellectual pleasure exercise].

தீபாவளி அன்றையபோல் இன்றில்லை.

நிறைய மாறிவிட்டிருக்கிறது.

இன்னும் மாறும்.

இடையில் வந்து மாட்டிக்கொண்டான் நரகாசுரன்.

பாவம் நரகாசுரன்.

அவனுக்கு என் ஆழ்ந்த அனுதாபங்கள்"

– சி. மௌனகுரு

இவ்வாறுதான் தமிழர்களின் பண்பாட்டுக் கூறுகள் காலத்திற்குக் காலம் சிதைக்கப்பட்டன. இப் பண்பாட்டுச் சிதைப்பில் மதமும், சாதியும் வகித்த பங்கு அளப்பெரியது. அவற்றினையே அடுத்த படலங்களில் பார்ப்போம்.

## மூன்றாம் படலத்தின் பிழிவு:

இப் படலத்தில் தமிழ் எழுத்துகள் எவ்வாறு சிதைக்கப்பட்டு, கிரந்த எழுத்துகள் புகுத்தப்பட்டன எனவும் ; தமிழ்ச் சொற்கள் எவ்வாறு மறைக்கப்பட்டு வட மொழிச் சொற்கள் திணிக்கப்பட்டன எனவும் பார்த்தோம். தமிழர்களின் அடையாளமான ஆட்களின் பெயர்கள் + ஊர்களின் பெயர்கள் எவ்வாறு மாற்றப்பட்டன எனவும் தமிழ் நூல்கள் அழிக்கப்பட்ட விதம் பற்றியும் பார்த்தோம். இறுதியாக, பண்பாட்டுக் கூறுகளில் ஏற்பட்ட சிதைவுகள் பற்றியும் கூட இப் படலத்தில் பார்த்துள்ளோம். இத்தகைய சிதைப்புகளில் மதம், சாதி என்பன முதன்மைப் பங்கினை வகித்துள்ளன. அவற்றினையே அடுத்த படலங்களில் பார்க்கவுள்ளோம்.

## துணை நின்ற நூல்கள்


- 'வடசொல் அறிவோம்' தொடர் கட்டுரைகள் – கவிஞர் மகுடேசுவரன்.
- அறியப்படாத தமிழ்மொழி – கண்ணபிரான் (KRS).
- தமிழாற்றுப்படை – கவிப்பேரரசு வைரமுத்து.
- என் சரிதம் – உ.வே.சா.
- 'பாவம் நரகாசுரன்' என்ற தலைப்பிலான பேரா. மௌனகுருவின் முகநூல் பதிவு.

## நான்காம் படலம்

## மதம் கொ[ண்ட/ன்ற] தமிழ்

**‘த**மிழர்களின் மதம் எது?’ எனப் பெரிய ஒரு வாதம் பல காலமாக இடம் பெற்று வருகின்றது. மணிமேகலை நூலிலேயே ‘சமயக் கணக்கர் தம் திறம் கேட்ட காதை’ என்ற பகுதியில் பல்வேறு சமயங்களுக்கிடையேயான கருத்து மோதலைக் காணலாம். இவ்வாறு கடைச் சங்க காலம் முதல் பல்வேறு சமயங்கள் தமிழர்களின் வாழ்வியலில் புகுந்துள்ளன. ஆனால் அதற்கு முன்னரான காலப்பகுதியில் தமிழர்களிடம் ‘மதம்’ என்றொரு கருத்துரு இருந்திருக்கவில்லை. இதற்குச் சிறந்ததொரு எடுத்துக்காட்டாக கீழடித் தொல்லியல் ஆய்வு முடிவு காணப்படுகின்றது. கீழடியில் கண்டெடுக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கான பொருட்களில் மதம் சார்ந்த பொருள் ஒன்று கூட இல்லாமை, பழந் தமிழர்களின் மதமற்ற வாழ்வியலினைக் காட்டுகின்றது. இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வின் நிலையும் அதே. **“தமிழகத் தொல்லியல் ஆய்வில் கிடைத்த பானை ஓட்டுத் தமிழ் பிராமி எழுத்துகள் எம் மதத்தையும் சாராது நிற்கின்றன**” என தொல்லியலாளர் கா. ராஜன் அவர்கள் தெரிவித்திருப்பதும் (தொல்லியல் நோக்கில் சங்ககாலம், பக்கம் 2) இங்கு நோக்கத்தக்கது. தொல்லியல் ஆய்வுகள் மட்டுமல்லாமல், இலக்கியச் சான்றுகளும் சுட்டுவது பழந் தமிழர்களின் மதசார்பற்ற வாழ்வியலினையேயாகும்.

‘சங்க இலக்கியங்கள் மதசார்பற்றவை’ எனும் போது, உங்களுக்குச் சில கேள்விகள் எழக்கூடும். சங்க இலக்கியங்களில் தமிழர்களின் நம்பிக்கைகள் சில குறிப்பிடப்படுகின்றனவே? என்ற கேள்வி எழலாம். பழந் தமிழர்களிடம் இயற்கை சார்ந்த சில வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள், மூட நம்பிக்கைகள் என்பன காணப்பட்ட போதும்; அவர்களிடம் நிறுவனப்படுத்தப்பட்ட சமயங்கள் எதுவுமில்லை என்பதே இதற்கான பதிலாகும். இன்னொரு கேள்வியாக திருமுருகாற்றுப்படை, கலித்தொகை, பரிபாடல் போன்ற சங்க இலக்கியப் பாடல்கள் எழலாம்? அவை மூன்றும் சங்க கால மரபில் பாடப்பட்டு சங்க இலக்கியமாகத் தொகுக்கப்பட்டுள்ள போதும்,

அப் பாடல்கள் பாடப்பட்ட காலம் பிந்தியது என்பதே இதற்கான பதிலாகும். இதனைச் சற்று விரிவாகப் பார்ப்போம்.

**சங்க காலத்திற்குரிய இலக்கியங்கள் – சங்க இலக்கியங்கள்:**

சங்க காலம் என்பது பொது ஆண்டிற்கு முந்திய ஆறாம் நூற்றாண்டு முதல் பொது ஆண்டு வரையான {BCE 6th cent – Comman era} காலப் பகுதிவரையான காலம் என இதுவரை உறுதிப்படுத்தப்பட்ட சான்றுகளைக் (கீழடி) கொண்டு கூறலாம். சங்க காலப் பாடல்கள் எல்லாமே இக் காலத்தில் படைக்கப்பட்ட பாடல்களல்ல. சில பாடல்கள் பாணர்களால் பல காலமாகப் பாடப்பட்டு வந்து பின்னர் புலவர்களால் தொகுக்கப்பட்டவை. எடுத்துக்காட்டாக, இரண்டாம் படலத்தில் பார்த்த 'புலியைக் கொன்ற இருங்கோ – இருளா இருளன் – புறநானூறு 201' செய்தியானது பல காலமாகப் பாணர்களால் பாடப்பட்டு வந்தே, பிற்காலத்தில் (BCE 100) கபிலரால் தொகுக்கப்பட்டது. அவ்வாறு கடத்தப்பட்டு வந்திருக்காவிடில் கபிலரால் பல நூற்றாண்டுகளிற்கு முன்னர் இடம் பெற்ற நிகழ்வினை அறிந்திருக்க முடியாது. அதே போன்று சங்க காலத்திற்கு பிந்திய சில நூல்களும் எட்டுத்தொகை, பத்துப்பாடல்களில் உள் நுழைக்கப்பட்டுள்ளன.

முதலில் பரிபாடலினைப் பார்ப்போம். இது பற்றிப் பேராசிரியர் கா.சிவத்தம்பி **"பரிபாடல் முற்றுமுழுதாக சங்க காலத்திற்குரிய இலக்கியமல்ல"** எனக் கூறுகின்றார் (சங்க இலக்கியம் கவிதையும் கருத்தும் P. 126). மேலும் பேராசிரியர் கமில் ஸ்வெலபில் போன்றோர் பரிபாடலை தமிழ் பக்தி யுகத்தின் தொடக்க காலமாகவே கொள்வர். இது பற்றிப் 'பரிபாடல் கிளப்பும் பிரச்சனை' என்ற தலைப்பில் 2009 உலகத் தமிழராய்ச்சி மாநாட்டில் ஒரு ஆய்வுக் கட்டுரையும் படிக்கப்பட்டது. மேலும் பரிபாடலில் ஏலக்காய் பற்றிய குறிப்பு உண்டு. ஏலக்காய் 5ம் நூற்றாண்டளவிலேயே (CE 5th cent) தமிழகம் வந்ததாகக் கணிக்கின்றார்கள். எனவே பரிபாடல் ஐந்தாம் நூற்றாண்டிற்கு பிற்பட்டது. அதேவேளை பாடலின் வடிவத்தைக் கொண்டு ஆகப் பிற்காலத்திற்கும் கொண்டுவர முடியாது. எனவே பரிபாடல் ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதி அல்லது ஆறாம் நூற்றாண்டின் முற்பகுதியினைச் சேர்ந்தது எனக்கொள்ளலாம். அடுத்து கலித்தொகையினை எடுத்தால், அது எட்டுத்தொகையில் வராது என பேரா.கா.சிவத்தம்பி சங்க இலக்கியம் கவிதையும் கருத்தும் என்ற நூலில் (126-127 பக்கங்களில்) விளக்குகின்றார். எனவே பரிபாடலைப் போன்று, கலித்தொகையும் பிற்காலத்தினைச் சேர்ந்ததே.

இனி பத்துப்பாடல்களில் இடம்பெறும் திருமுருகாற்றுப்படையும் சங்ககாலத்திற்குப் பிந்தியதே என்பதனைப் பார்ப்போம். உ.வே.சா (சங்கவிலக்கியங்களைப் பதிப்பித்தவர்) திருமுருகாற்றுப்படையினைப்

படிக்கும்போதே, தனக்கு பரிபாடல் என்று ஒன்று இருந்தது எனத் தெரிய வந்ததாகக் கூறுகின்றார் (உ.வே.சா – என் சரிதம்). இதிலிருந்து பரிபாடலுக்குப் பிற்பட்டதே திருமுருகாற்றுப்படை என்பது தெளிவாகின்றது. எனவே பரிபாடலே சங்க காலத்திற்குரியதல்ல எனும் போது திருமுருகாற்றுப்படை எங்கனம் சங்கவிலக்கியமாகும்? மேலும் திருமுருகாற்றுப்படையும் பதினொராவது திருமுறையில் வருகின்றது. திருமுறைகள் பக்தி இலக்கிய காலத்திற்குரியவை. பக்தி இலக்கிய நூலொன்று எவ்வாறு சங்க காலத்திற்குரிய இலக்கியமாகும்? இது, ஆறாம் நூற்றாண்டிற்குப் பின்னர் தமிழகம் வந்த விநாயகரிடம் "சங்கத் தமிழ் மூன்றும் தா" எனக் கேட்பதைப் போன்றதல்லவா! இவையெல்லாம் மதம் பிடித்த சிலர் மேற்கொண்ட தமிழ்ப்படுகொலை எனில் அது மிகையல்ல.

முடிவாக, தொல்லியற் சான்றுகள், சங்க இலக்கியச் சான்றுகள் என்பவற்றினடிப்படையில் பழந் தமிழர்களிடம் 'மதம்' என்றொரு கருத்துரு இருந்திருக்கவில்லை.

**மதங்கள் தமிழகம் வந்த கதை:**

இன்றுள்ள பலர் 'தமிழர்களில் பெரும்பாலானவர்கள் எப்போதுமே இந்துக்கள்/சைவர்கள்' என்றே எண்ணிவருகின்றார்கள். முதலில் 'இந்து' என்ற பெயரே அண்மைக் காலத்திற்குரியது. இதோ இந்து மதத்தின் உலக (ஜகத்) குருவான சங்கராச்சாரியரே பின்வருமாறு கூறுகின்றார்.

> "இப்போது ஹிந்து மதம் என்று ஒன்றைச் சொல்கிறோம். இதற்கு உண்மையில் இப்பெயர் கிடையாது. நம்முடைய பழைய சாஸ்திரங்கள் எதிலும் ஹிந்து மதம் என்கிற வார்த்தையே கிடையாது. ஹிந்துக்கள் என்பது அந்நிய நாட்டினர் நமக்கு வைத்த பெயர்தான்."
>
> [தெய்வத்தின் குரல் பாகம்– 1, பக்கம்– 126]

> "வெள்ளைக்காரன் நமக்கு ஹிந்துக்கள் என்று பொதுப் பெயர் வைத்தானோ நாம் பிழைத்தோம். அவன் வைத்த பெயர் நம்மைக் காப்பாற்றியது. அவன் மட்டும் 'ஹிந்து' என்று பெயர் வைத்திருக்காவிட்டால் ஒவ்வொரு ஊரிலும் சைவர், வைஷ்ணவர், சாக்தர், முருக பக்தர், பிள்ளையார் உபாசகர், அய்யப்பன் பக்தர், எல்லையம்மனைக் கும்பிடுகிறவர் என்று நம்மைப் பிரித்துக் கொண்டு தனித்தனி மதமாக நினைத்துக் கொண்டிருப்போம்."
>
> [தெய்வத்தின் குரல் பாகம்– 1, பக்கம்– 267]

இந்து மதத்தின் தொன்மை அவ்வளவுதான். சரி, சைவத்தினைப் பார்ப்போமா! சைவ – வைணவ மதங்கள் பல்லவர் காலத்திலேயே தோற்றம் பெற்று, பக்தி இயக்க காலத்தின் பின்னரே பெரும் சமயங்களாக உருவெடுக்கின்றன. இதற்குப் பெரிய புராணத்திலேயே சான்றுகளுண்டு.

"சமண் சமயம் மிக்கு ஆங்கு
மன்னிய சைவம் ஏதுமின்றி"

மேலுள்ள தேவாரப் பாடலிலேயே சான்றினைக் காணலாம். மேலும் தமிழிலுள்ள ஐம்பெருங் காப்பியங்கள், ஐஞ்சிறு காப்பியங்கள் என யாவுமே சமண, பவுத்தமதம் சார்ந்தவையே. தமிழின் பதினெண் கீழ் கணக்கு நூல்களும் ஒன்றில் மதசார்பற்றவை அல்லது சமண பவுத்த மதக் கருத்துகள் தாங்கியவையே. எனவே சைவ-வைணவ சமயங்களுக்கு முன்னரே பவுத்த-சமண மதங்கள் தமிழகத்தில் வலுப் பெற்றிருந்தமை உறுதியாகின்றன. இங்கு இன்னொன்றையும் கவனத்திற் கொள்ள வேண்டும்; அதாவது சங்க காலப் பாடல்களில் இடம் பெறும் முருகன், கொற்றவை போன்ற தெய்வங்களை இன்றைய சைவத்துடன் தொடர்புபடுத்திக் குழப்பிக்கொள்ளக் கூடாது. அவை இயற்கை சார்ந்த வழிபாடுகளே! பிற்காலத்திலேயே சமயத்தினுள் உள்வாங்கப்படுகின்றன.

சைவ – வைணவ சமயங்களிற்கு முற்பட்ட பவுத்த – சைன நெறிகள் கூடத் தமிழகம் எப்போது வந்தன என்பதற்கான சான்றுகள் உண்டு. குறிப்பாக

பவுத்தம் அசோகரது ஆட்சிக் காலத்திலும், சைனம் சந்திர குப்த மன்னர் காலத்தில் 'பத்திரபாகு முனி' தலைமையிலும் தமிழகத்திற்குப் பெருமளவில் வந்து சேருகின்றன {இங்கு விடுபட்ட ஆசீவகம் பற்றித் தனியாகப் பார்ப்போம்}. இவை எல்லாவற்றுக்கும் மிகப் பிந்திய காலத்திலேயே இசுலாம், கிறித்தவம் ஆகிய மதங்கள் வந்து சேர்கின்றன.

எனவே மதமற்ற தமிழர்களிடம் எல்லா மதங்களும் ஒவ்வொன்றாகக் கடைச் சங்க காலத்திலிருந்தே வந்து சேர்கின்றன. தமிழர்களுக்கு என்று தனித்த ஒரு பொதுவான மதம் ஒருபோதுமிருந்ததில்லை. அது தனிப்பட்டவர்களைப் பொறுத்து அமையும். அதேவேளை மதமற்ற தமிழர்களும் கால காலமாக வாழ்ந்து கொண்டேயிருக்கின்றார்கள்.

## அறியப்படாத ஆசீவகமும், அதன் எஞ்சிய சுவடுகளும்:

இந்தியப் பெரு நிலப் பரப்பில் உருவாகிய சமயங்களில் பெரிதும் அறியப்படாத ஒரு சமயம் உண்டு எனில் அது ஆசீவகமே. அறிஞர் A. L. Basham எழுதிய 'A Vanished Indian Religion' என்ற நூலே இச்

சமயம் மீது மக்களின் பார்வையினை முதலில் திருப்பியிருந்தது. அண்மைக் காலத்தில் முனைவர் நெடுஞ்செழியன் அவர்கள் களவாய்வு செய்து வெளியிட்டிருந்த ‘ஆசீவகமும் ஐயனார் வரலாறும்’ என்ற நூலும், அவரது பிற கட்டுரைகளும் பல புதிய செய்திகளையும் வெளிப்படுத்தியுள்ளன. முன்னர் அஜீவக என்ற வடமொழிப் பெயரே ஆசீவகம் என அழைக்கப்பட்டதாகத் தவறாகக் கருதப்பட்டபோதும், அண்மைக் காலத்தில் அது ஒரு தமிழ்ச்சொல்லே என்றும் கண்டுணரப்பட்டுள்ளது.

ஆசீவகம் = ஆசு+ஈவு+அகம்

ஆசு – கேட்ட போதே தங்கு தடையின்றி மடையுடைந்த வெள்ளமென

(ஆசுகவி = கேட்டவுடன் கவி பாடும் கவிஞர்)

ஈவு – தீர்வு (எ.கா. கணிதத்தில் வகுத்தலின் போது கிடைப்பது)

அகம் – தருமிடம்.

ஆசீவகமானது தற்போதைய சான்றுகளின் படி, தமிழ்நாட்டிலேயே உருவான ஒரு சமயமாகக் கருதப்படுகின்றது. இந்திய இலக்கியங்களை ஆழ்ந்து நோக்கினால், வட இந்தியாவினை விடத் தமிழ்நாட்டில் ஆசீவகம் சிறப்புற்றிருந்தது தெரியவரும். சைனர்கள், பவுத்தர்கள் போன்று ஆசீவகர்கள் கூட்டமாகத் தமிழகம் வந்த செய்திகள் இல்லை. இந்த ஆசீவகமதமானது மற்கலி கோசலார் என்பவரால் (புத்தர், மகாவீரரின் சம காலத்தவர்) ஏற்படுத்தப்பட்டது.

வேறு சிலர் ஆசீவகத்தின் தோற்றத்தினை வெகு காலத்திற்கு முன்னே கொண்டு செல்வார்கள். அது தவறு. பழந்தமிழரிடமிருந்த உலகாயுதம் போன்ற கடவுள் மறுப்புக் கோட்பாட்டினை, ஆசீவகமானது பிற்காலத்தில் உள்வாங்கிக் கொண்டது என்பதே சரியானது. இந்த மற்கலி கோசலார் என்பவரே இறப்பின் பின்னர் ஐயனாராகக் கருதப்பட்டுள்ளார் என்று கருதப்படுகின்றது {பேரா. நெடுஞ்செழியன் ஐயனார் ஒருவரல்ல, மூவர் என்பார்}. பெரிய புராணத்தின் ‘வெள்ளானைச் சருக்கம்’ என்ற பகுதியானது ஐயனார் பிறந்த இடம் திருச்சி மாவட்டம் சமயபுரம் அருகேயுள்ள ‘திருப்பிடவூர்’ என்று கூறுகின்றது. இதனை அங்கே கள ஆய்வு செய்து, ஐயனார் பிறந்த ஊர் அதுதான் என்பதற்கான கல்வெட்டுச் சான்றினையும், ஐயனார் கோயிலையும் நெடுஞ்செழியன் ஐயா அவர்கள் கண்டறிந்துள்ளார். மேற்கூறியவற்றால் ஆசீவகமானது தமிழ்நாட்டில் தோன்றி, வடக்கேயும், கீழே இலங்கை வரையும் பரவிய ஒரு சமயமாகக் காணப்படுகின்றது. வடக்கே ஆசீவகமானது செல்வாக்குப் பெற்றிருந்ததனை அசோகரின் கல்வெட்டுச் சான்றும்

{பிகார் மாநிலத்தின் ஜகானாபாத் (Jehanabad) மாவட்டத்தில் உள்ள பராபர் (Barabar) எனும் ஊரிலுள்ளது} பாளி மூலமான நூல்களும் காட்டுகின்றன. இலங்கை பற்றி விரிவாகப் பின்னர் பார்ப்போம். அதே போன்று தமிழகத்தில் ஆசீவகம் பெற்றிருந்த செல்வாக்கினை குகை ஓவியங்கள் (எ.கா. சித்தன்னவாசல் குகை ஓவியங்கள், செஞ்சி பாறை ஓவியம்), கற்படுக்கை எழுத்துகள் (இவை யாவுமே சைன (Jainism) மதத்தவர்களது என முன்னர் தவறாகக் கருதப்பட்டவை), இலக்கியங்கள் (சிலப்பதிகாரம், மணிமேகலை, நீலகேசி, பெரியபுராணம்) என்பன காணப்படுகின்றன. பொதுவாகக் கல்வெட்டுகள், இலக்கியங்களை விட எளிய மக்களிடம் ஏதாவது ஒன்று பெற்றிருந்த செல்வாக்கினை மக்கள் வழக்காறு சிறப்பாக எடுத்துக் காட்டும். பின்வரும் பழமொழியினைப் பாருங்கள்.

‘ஏரிக்கொரு ஐயனார், ஊருக்கொரு பிடாரி’

தமிழகத்தின் ஊர்ப்புறங்களில் வேறு தெய்வங்கள் இல்லாத ஊரில் கூட ஐயனார் கோயில்கள் இருப்பதனைக் காணலாம். இந்த ஐயனார் ஒருவர்தானா? என்றொரு கேள்வி உண்டு. முனைவர் நெடுஞ்செழியன் மூன்று பேர் ஐயனார்கள் என சித்தன்னவாசல் ஓவியத்தில் மூன்று பேர் இருப்பதனைக் கொண்டு கூறுகின்றார். ஆனால், இதில் மேலும் ஆய்வு செய்யப்படவேண்டும். பழந் தமிழர்களின் நடுகல் வழிபாடு/ மரித்தோர் வழிபாடு என்பனவும் ஐயனாராக உள்வாங்கப்பட்டார்களா? அல்லது இணைக்கப்பட்டார்களா? எனவும் ஆய்வு செய்யப்படவேண்டும். எனக்கு இந்த ஐயத்தினை நீலகேசியில் வரும் பின்வரும் கதை ஏற்படுத்துகின்றது.

> “‘பிடாரி’ எனும் தெய்வத்துக்கு ஆடுகள் பலியிடப்படுவது வழக்கம். அதனை முனிச்சந்திரபட்டராகர் என்ற துறவி ஆடுளுக்குப் பதில் மண்ணுருவில் செய்த ஆடுகளை பலியிடுமாறு கூறி மக்களை மாற்றுகின்றார். இதனால் ஊன்பலி கிடைக்காத நீலகேசி என்ற பேய் துறவியைக் கொல்ல முயன்று, தோற்று அவளும் சமண[சைன]மதத்தைத் தழுவுகின்றாள். பின்பு ஆசீவக மதத்தினரான பூரணனையும் சமய வாதத்தில் தோற்கடிக்கின்றாள்.”

மேற்குறித்த கதையில் பிடாரி என்ற தெய்வம் ஆசீவகத்திலிருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றது. முதலில் நாம் பார்த்த பழமொழியில் (‘ஏரிக்கொரு ஐயனார், ஊருக்கொரு பிடாரி’) ஒன்றோடு ஒன்று இணைந்து காணப்பட்ட ஐயனாரும், பிடாரியும் இங்கு வேறுபட்டுவிடுகின்றார்கள். அதே போன்று இன்னொரு பழமொழி வருமாறு.

'ஒண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியை விரட்டியது போல'


இது புது வகையான ஒரு பிடாரித் தெய்வம் வந்து பழைய ஊர்ப் பிடாரியினை துரத்திவிட்டதா? என்பன போன்ற கேள்விகள் தொக்கி நிற்கின்றன. இன்னமும் பல ஆய்வுகள் நடைபெற்றாலே இவற்றுக்கான தெளிவு கிடைக்கும்.

ஒரு காலத்தில் ஆசீவகம் பெற்றிருந்த செல்வாக்கினை, புத்தரின் சொற்களிலிருந்தே அறிந்து கொள்ளலாம். **"ஆற்றுக் கழிமுகத்திலிருந்து மீன்களைப் பிடிப்பது போல மற்கலி கோசலார் மக்களைக் கவர்ந்திழுக்கின்றார்"** என புத்தர் கூறுகின்றார். தமிழகத்தில் தோன்றி, இத்தகைய செல்வாக்குப் பெற்றிருந்த ஒரு சமயத்தினைப் பற்றி நாம் பெரிதும் அறிந்திருக்காமைக்குப் பின்வருவன காரணங்களாக இருந்திருக்கக் கூடும்.

1. பலரும் ஆசீவகத்தினை சைன மதத்துடன் இணைத்து /அதன் ஒரு பிரிவாக அடையாளங் கண்டமை. தமிழில் சைனத்தை சமணம் என அழைத்தமை மேலும் குழப்பத்தைக் கூட்டியுள்ளது. மேலும் மகாவீரரும் மற்கலி கோசலாரும் சில ஆண்டுகள் ஒன்றாகவிருந்து பின்னர் பிரிந்தமையும் இந்தக் குழப்பத்தினைக் கூட்டியுள்ளது.

2. ஆசீவகமானது வேத எதிர்ப்பிலும், வர்ணாச்சிரம எதிர்ப்பிலும் பவுத்த சைன மதங்களைக் காட்டிலும் கடுமையாகவிருந்தமையால் வைதீகமானது முற்கூட்டியே ஆசீவகத்தை முற்றாக அழித்தமை.

இப்போது ஆசீவத்தின் மத அடையாளங்களைப் பார்ப்போம். ஆசீவக மதத்தின் தலையாய அடையாளமாக **யானை** காணப்படுகின்றது. இன்னும் சில அடையாளங்களைப் பார்ப்போம்.



**திருநிலை**: மலர் மீது திருமகள் உட்கார்ந்திருக்க இரு புறமும் யானைகள் நிற்கும். வடமொழியில் இதனை 'கஜலஷ்மி' என்பார்கள். {இந்தத் திருமகளே பின்னர் லஷ்மி ஆக்கப்பட்ட இந்துமத கடவுள்}.

**சுழற்குறி**: இதனையே ஸ்வஸ்திக் (Swastika) என்கின்றார்கள்.

**முத்தலைக்கோல்**: பெரும்பாலும் இரு புற முத்தலைக் கோலாகவே காணப்படும். (திரிசூலம்).

**சுருள் வளைவு**: இது ஒரு வகையில் முடிவிலி போன்றது.

**இலங்கையில் ஆசீவகம்**:

இலங்கைக்கு பவுத்தமானது பொ.மு 3ம் நூற்றாண்டில் (BCE 3rd cent) தேவநம்பிய திசன் ஆட்சியின்போது வந்துசேருகின்றது. அப்போது அங்கே ஏற்கனவேயிருந்த ஒரு சமயம் பற்றி மகாவம்சம் கூறுகின்றது. மகாவம்சத்தில் விசயன் கதை போன்ற புனைவுகள் இருந்தாலும், அதற்குப் பிந்திய பழைய அரசர்களின் காலத்தினையும் வரலாற்றினையும் அறிந்து கொள்வதற்குத் துணை நிற்கக்கூடிய ஒரு நூலே அதுவாகும். மௌரியர் ஆட்சிக் காலத்தின் போது, இலங்கையில் தேவநம்பியதிசனின் பாட்டனான பண்டுகாபயன் ஆட்சிக்காலத்தில் 'ஆசீவகர்களுக்கான உறைவிடம்' (Ajivikanam geham) ஒன்றை அனுராதபுரத்தில் அமைத்திருந்தான் என மகாவம்சம் கூறுகின்றது {Source – Mahavamsa, W. Geiger , Pali text society , London, 1908. X. 101-102.}. 'பண்டு காபய' என்று மகாவம்சத்தில் குறிப்பிடப்படும் இம்மன்னன் சிங்கள மன்னனாகச் சொல்லப்பட்டாலும், இவனது பெயர் "பண்டு கபாயன்" என்பதாகும் ('பண்டு' = "பழைய"). இதே 'பண்டு' என்ற சொல்லே பாண்டியன் (பண்டு+இயன்) என்ற பெயரின் வேர்ச் சொல்லுமாகும். எனவே பண்டுகாபயன் என்பவர் ஒரு தமிழ் மன்னனாகவே இருந்திருக்கலாம். {இல்லாதுவிடின் எலு மொழியானது தமிழின் ஒரு கிளை மொழியாகவிருந்திருக்கலாம்}.

தமிழகத் தொடர்பு மூலம் ஆசீவகமானது இலங்கையினையும் அடைந்திருக்கின்றது. இப்போது தேவநம்பிய திசன் காலத்திற்கு வந்தால், அவரது பெயர் 'திசன்' என்பதே. 'தேவநம்பிய' என்பது பின்னர் வந்து சேர்ந்த பட்டமாகும். இங்கு திசன் என்பது ஒரு தமிழ்ப் பெயராகும். 'திசன்' என்பது தமிழா அல்லது சிங்களமா என ஒரு பெரிய கருத்துமோதல் இலங்கை அரசியலில் வடக்கின் முன்னை நாள் முதலமைச்சர் விக்கினேசுவரன் அவர்கட்கும் முன்னை நாள் கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் சரத்வீர சேகர என்பவருக்குமிடையே இலங்கை ஊடகங்களில் சில ஆண்டுகளிற்கு முன்னர் இடம்பெற்றிருந்தது. {சிங்கள மொழியே 7ம் நூற்றாண்டிலேயே தோன்றியிருக்க, அதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முந்தியே வாழ்ந்த

ஒருவரைச் சிங்களவர் என வலியுறுத்துவதனை என்னவென்று சொல்வது}. 'திசன்' என்ற பெயரின் வேர்ச்சொல் 'திசை' என்பதாகும். எனவே திசன் (திசைகளையுடையோன் = எல்லைகளையுடையோன்) என்ற பெயரின் பொருள் தலைவனாகும். திசை என்ற சொல்லை அடியாகக் கொண்டு திசன் தவிர 'திசயன்', 'திசிலன்' போன்ற பழந் தமிழ்ப் பெயர்களும் உண்டு. 'திசையன் விளை' என்ற ஊரே திருநெல்வேலி மாவட்டத்திலுண்டு. இன்று கீழடி அகழ்வாய்வில் கிடைத்த மட்பாண்டங்களில் எழுதப்பட்டிருந்த பெயர்களில் 'திசன்' என்ற பெயரும் முதன்மையானது. எனவே திசன் என்பது ஒரு தமிழ்ப் பெயரே என்பது ஐயத்திற்கு இடமின்றிச் சான்றுப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையிலிருந்த நாக அரசர்கள் தலைமுறையில் வந்த சிறீ நாகன் என்ற நாக அரசனின் தந்தை பெயரும் 'வீர திசன்' (CE 4th cent) என்பதாகும். அசோக மன்னர்களின் தூதுவர்களாலேயே தேவநம்பிய திசன் பவுத்தத்திற்கு மாறுகின்றான். அதுவரை அம் மன்னன் கடைப்பிடித்தது ஆசீவகமே. இங்கு அசோகரும் ஆசீவக மதச் செல்வாக்கிற்கு உட்ட்டிருந்தே பின்னர் பவுத்தத்திற்கு மாறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆசீவகத்தின் அடையாளங்களில் யானைக்கு அடுத்ததாக இடம்பெறும் விலங்கு காளை மாடாகும். தமிழகத்திலுள்ள பல ஐயனார் கோயில்களில் யானையும் காளையும் இணைந்து காணப்படுவதனை பேரா.நெடுஞ்செழியன் விளக்கியிருப்பார். அத்தகைய காளை மாடுகளின் அடையாளம் பொறிக்கப்பட்ட பொ.மு 3ம் நூற்றாண்டைச் சேர்ந்த நாணயங்கள் கிடைத்துள்ளதாக பேராசிரியர். ப. புஷ்பரட்ணம் கூறியுள்ளார். வேறு நாணயங்கள் சிலவற்றில் திருநிலை (திருமகள்), சுழற்குறி போன்ற ஆசீவக அடையாளங்கள் கிடைத்ததனை 'யாழ் மாவட்ட அண்மைக்கால தொல்லியல் ஆய்வும் ஆதிக்குடிகளும்' என்ற நூலில் முனைவர் க. சிற்றம்பலம் கூறியுள்ளார் {அவர் அவற்றினை முறையே இலக்குமி, ஸ்வஸ்தித் என்ற பெயரிலேயே அழைத்திருந்தார்}. மன்னார் கட்டுக்கரைக் குளத்திற்கு அருகில் 1600 ஆண்டுகளிற்கு முற்பட்ட காலத்தினைச் சேர்ந்த ஐயனார் கோயில் ஒன்று யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வாறு அகழ்வாய்வில் 1600 ஆண்டுகளிற்கு முற்பட்ட ஐயனார் கோயில் (கோட்டம்) ஒன்று கண்டுபிடிக்கப்பட்டமை இலங்கையில் ஆசீவகத்தின் இருப்பிற்கு அசைக்க முடியாத சான்றாகும். இன்றும் இலங்கையில் பல ஐயனார் கோயில்கள் இந்து மதக் கோயில்களாக மாற்றியமைக்கப்பட்டுள்ள நிலையிலுள்ளன. சிலாபம் முனியேசுவரன் கோயில் கூட, ஒரு ஐயனார் கோயிலேயாகும். பின்னர் பல சன்னிதிகள் உருவக்கப்பட்டு, இன்று ஈசுவரன் கோயிலாகவே கருதப்படுகின்றது. இன்றும் அங்குள்ள 5 சன்னிதிகளில் {ஐயனார், புத்தர், காளி,

சிவன், பிள்ளையார்} ஒன்று ஐயனாருக்குரியதே. இந்த ஐயனாரை, சிங்களவர்கள் 'ஐய நாயக்க' (அய்ய நாயக்க) என்ற பெயரில் வழிபடுகின்றார்கள். யாழ்ப்பாணத்திலுள்ள ஐயனார் கோயில்களில் பல தீவுப்பகுதிகளில் அமைந்திருப்பது, அவற்றின் தமிழகத் தொடர்பினை எடுத்துக்காட்டும் {அனலைதீவு, ஊர்காவற்துறை, அராலி, காரைநகர்...} யாழிற்கு வெளியேயும் பல ஐயனார் கோயில்கள் உண்டு {பரவிப்பாஞ்சான் ஐயனார் – கிளிநொச்சி, கல்முனை ஐயனார் – அம்பாறை}. கிழக்கே சடங்குத் தெய்வங்கள் மீது பாடப்படும் ஒரு வகைப் பாடல் 'காவியம்' எனப்படும். இதில் வைரவர் மீது பாடப்படும் காவியங்கள் ஐயனார் மீதான காவியங்கள் போன்றே காணப்படுகின்றன. எனவே இங்கிருந்த ஐயனார் கோயில்கள் வைரவர் கோயில்களாக மாற்றப்படடனவா(?) என ஆய்விற்கு உட்படுத்தப்பட வேண்டும். அதே போன்று பல ஐயனார் கோயில்கள் பிற சைவக்கோயில்களாக மாற்றப்பட்டுமுள்ளன. இன்று 'ஈழத்துச் சிதம்பரம்' என்று அழைக்கப்படும் காரைநகர் சிவன் கோயிலின் பழைய பெயர் 'ஆண்டிக்கேணி ஐயனார் கோயில்' என்பதாகும்.

## ஆசீவக அழிப்பு:


ஆசீவத்துடனான கருத்து மோதலில் மற்றைய இரு வேத மறுப்பு மதங்களான பவுத்தமும் சைனமும் கூட ஈடுபட்டிருந்தன. பவுத்தர்களுடனான கருத்து மோதலில் தோல்வியுற்ற ஆசீவகத் துறவி நீரிலிறங்கித் தற்கொலை செய்ததாகப் பாளி மொழியிலான பவுத்த நூல் குறிப்பிடுகின்றது (இதனையே சித்தன்னவாசல் பாறை ஒவியமும் குறிப்பதாகவும் கொள்வர்). அதே போன்று நீலகேசி 'சைனர்கள் ஐயனாரை வணங்கக்கூடாது' எனக் கூறுகின்றது. இவை கருத்து மோதலுடன் நிற்க, வைதீகமோ களத்திலேயே இறங்கி அடித்தது. இதனை 'சமணர் அழிப்பு' என்றே நாம் படித்திருப்போம். {இங்கு சமணர் அழிப்பு எனும் போது சைனமும் சேர்ந்ததேயாயினும், சைனம் ஒரு கட்டத்தில் வைதீகத்துடன் இணங்கிக்கொண்டமையால் ஒரளவிற்குத் தப்பிப்பிழைக்க,



ஆசீவகம் அழிவுற்றது}. ஆசீவக அழிப்பிற்கான அகச் சான்றுகளை சைவ சமயத்திலேயே காணலாம். சிவனின் வீரத்தினை விளக்கும் எட்டு வடிவங்களில் (அட்ட வீராட்ட வடிவங்களில்) ஒன்றான 'கஜாரி' வடிவமானது ஆசீவக அழிப்பின் உருவகப்படுத்தலேயாகும். ஏற்கனவே யானை ஆசீவகக் குறியீடு எனப் பார்த்தோம். இவ்வடிவில் (கஜாரி) சிவன் யானையினைப் பிளந்துகொண்டு வருவார்.

இந்தக் காட்சியினை அப்பரும் தனது தேவாரத்தில் காட்டுவார்.

"பொழிலவன் புயலவன் புயலியக்கும்
தொழிலவன் றுயரவன் துயரகற்றும்
கழலவன் கரியுரி போர்த்து கந்த
எழிலவன் வளநக ரிடைமருதே."



அப்பரின் தேவாரத்தின் 'கரியுரி போர்த்துகந்த எழிலவன்' என்ற வரிகள் குறிப்பது கஜாரி வடிவத்தினையே (ஆசீவக அழிப்பின் உருவகப்படுத்தல்). இதன் பின்னர் பல ஆசீவக்கோயில்கள் வைதீகக் கோயில்களாக மாற்றப்பட்டன. "எங்கெல்லாம் யானை முதலையிடம்/ சிங்கத்திடம் அடி வாங்கும் ஒவியம்/ சிற்பம் காணப்படுகின்றதோ, அக் கோயில்கள் யாவும் ஆசீவகமாகவிருந்து பின்னர் மாற்றப்பட்டவையே" என முனைவர் நெடுஞ்செழியன் குறிப்பிடுவார்.

இவ்வாறு சைவத்திடம் அடிவாங்கிய ஆசீவகமானது, இயலாமல் இறுதியில் வைணவத்திடமே அடைக்கலம் புகுந்தது. இதனையே 'கஜேந்திரமோட்சம்' என்ற வைணவ நிலை காட்டும். முதலையின் பிடியிலிருந்து கஜேந்திரன் எனும் யானையைக் காத்த திருமால் சிற்பம் (கஜேந்திர மோட்சம்) இன்றும் தசாவதாரக் கோயிலில் காணப்படுகின்றது. இவ்வாறு வலுவிழந்து வைணவத்திடம் முதலிலும், பின்பு சைனத்திடனும் கரைந்து ஆசீவகம் காணமற் போய்விட்டது.

இப்போது உங்களுக்கு 'ஏன் ஆசீவகத்தினைத் தமிழ் மதம் எனச் சொல்லக்கூடாது?' என்றொரு கேள்வி எழலாம். ஆசீவகம் தமிழகத்தில் தோன்றியது என்பது சரியானதே, ஆனால் அது முழுத் தமிழர்களாலும் கடைப்பிடிக்கப்பட்டதா? முதலில் அது மதமா அல்லது ஒரு வாழ்வியல் நெறியா? மதமாக மாறியது எனின்

எப்போது? என்ற பல கேள்விகளிற்கு விடை காண வேண்டியுள்ளது. எது எவ்வாறாயினும், ஆசீவக அழிப்பினூடே குறிப்பிடத்தக்க தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளும் கூடச் சேர்த்தே அழிக்கப்பட்டுள்ளன என்பது திண்ணமாகும்.

### முருகன் – சுப்பிரமணியன்:

தமிழின் இயற்கை சார்ந்த சில வழிபாட்டுத் தெய்வங்களை வைதீகமானது உள்வாங்கிக் கொண்டது என மேலே பார்த்தோம். அதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாக முருகன் எவ்வாறு சுப்பிரமணியன் ஆக்கப்பட்டான் எனப் பார்ப்போம். இதனைப் பார்ப்பதற்கு, ஒரு கேள்வியினை எழுப்பி அதற்கான பதிலினையும் பார்ப்பது, சிறந்த ஒரு அணுகுமுறையாகக் காணப்படலாம். 'முருகன் ஒரு தமிழ்க் கடவுள்' என்ற ஒரு பொதுக் கருத்து இருக்கின்றது. அதனையே கேள்வியாக்கிப் பதிலினையும் பார்ப்போம். இதற்கு நேரடியாகப் பதிலளிப்பதற்கு முன் சில செய்திகளைத் தெளிவுபடுத்த வேண்டியிருப்பதால், இதற்கான பதிலினை இப் பகுதியின் இறுதியில் பார்ப்போம்.

### பழங்காலத் தமிழர் வழிபாடுகளில் முருகன்

முதலில் பழங்காலத்தில் தமிழர்கள் முருகனை வழிபட்டார்களா எனப் பார்ப்போம். பழைய வரலாறுகளுக்குச் சான்றாகப் பொதுவாக தொல்பொருளாய்வுச் சான்றுகளையும், பழைய இலக்கியங்களையும் கொள்வர். இவ்வாறான தொல்பொருள் சான்றாக 'நடுகல்' வழிபாட்டினைக் காட்டி நிற்கும் நடுகற்கள் காணப்படுகின்றன. தமிழரும், அக்காலத்தில் வாழ்ந்த பிற இனத்தினரைப் போன்று, முதலில் மூதாதையோரை வழிபட்டு வந்தனர். இம் மூதாதையர் வழிபாட்டினை நினைவூட்டும் ஈம அடக்கங்கள், ஈமப்படையல்களின் எச்சங்கள் என்பன தமிழகத்தில் மட்டுமன்றி, யாழ்ப்பாணத்தில் கந்தரோடை போன்ற இடங்களிலும் அகழ்வாய்வின் போது கண்டுபிடிக்கப்பட்டன. இத்தகைய மூத்தோர் வழிபாட்டு முறையின் ஒரு பகுதியாக மரித்தோர் நினைவாக நடுகற்கள் நடப்பட்டன. அதற்குப் பின்னரான காலப்பகுதியில் இதே முறையில் போரில் வீரச்சாவு அடைந்தவர்களிற்கு நடுகற்கள் நடப்பட்டன. மூத்தோர் நடுகல் வழிபாட்டிலிருந்தே வீரர்களிற்கான நடுகல் வணக்கமுறை தோன்றியதாக க. கைலாசபதி கூறுவார். பழங்காலத்தில் நடுகல் வணக்கம் தவிர வேறு சிறந்த கடவுள் வழிபாடு இல்லை என்பதனை மாங்குடி கிழார் "அடலருந் துப்பின்..." எனத் தொடங்கும் பாடலில் (புறநானூறு 335) பாடுவார்.

"கல்லே பரவின் அல்லது
நெல்உகுத்துப் பரவும் கடவுளும் இலவே."

இத்தகைய முன்னோர் மற்றும் வீரர்களின் நடுகல் வழிபாடும் ஒரு வகை முருக வழிபாடாகக் கருதப்பட்டது. இத்தகைய நடுகல்லான கல் – தூண் என்பதையே சுருக்கி கந்து எனக்கூறிப் பின்னர் கந்தன் (ஸ்கந்தா Skanda என்பது வேறு) என அழைக்கப்பட்டது எனவும் கூறுவர். மேற்கூறியவாறு இத்தகைய நடுகல் வழிபாடு ஒரு வகைப் பழங்காலத் தமிழரின் முருக வழிபாடாகும். இதே போன்று குறிஞ்சி நிலத் தலைவனாகவும் முருக வழிபாடு காணப்பட்டது. இதனையே தொல்காப்பியம் "சேயோன் மேய மைவரை உலகமும்..." எனப் பாடும். அதாவது மலைசார்ந்த பகுதிகளில் தமிழர்கள்/தமிழர்களின் முன்னோர் வாழ்ந்த போது, அப் பகுதியின் தலைவனாக சேயோன்/முருகன் கருதப்பட்டார். இதே போன்று இயற்கை வழிபாடான சூரிய வழிபாட்டின் மருவிய வடிவமும் மற்றொரு வகை முருக வழிபாடாயிற்று என சாரங்கபாணி எனும் அறிஞர் பரிபாடற் திறன் எனும் நூலில் "மாக்கடலினின்று நிவர்ந்தெழுந்த ... செவ்வேள்" எனக் குறிப்பிட அதனை மறைமலை அடிகளாரும் பின்னர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

முருகனின் மற்றொரு வடிவம் வேலினை அடிப்படையாகக் கொண்ட வேலன் ஆகும். பழங்கால முன்னோர் வேட்டையினையும், உணவு சேகரித்தலையும் அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்த காலத்தில் தோன்றியதே இந்த 'வேலன்' எனும் வடிவமாகும். வேட்டையினை முடித்து வந்தவர்கள் மீண்டுமொரு முறை வேட்டையில் நடந்தவற்றைச் செய்து பார்த்தனர். இதன்போது நாடகம், கூத்து என்பன தோன்றியதாகவும், இதன்போது வேலை ஏந்துபவன் வேலனாகக் கருதப்பட்டான் எனவும் அறிஞர்கள் குறிப்பிடுவார்கள். இவ்வாறான காலப்பகுதியில் பூசாரி வேல் ஏந்தி உருக்கொண்டதாக எண்ணிக்கொண்டு ஆடும் ஆட்டமே 'வெறியாட்டு' என க. கைலாசபதி கூறுகிறார். இத்தகைய வெறியாட்டத்தின் போது வேலை ஏந்துபவரும் வேலனாகவே கருதப்பட்டார். மேற்குறித்த பல வகையான பழந்தமிழ் வழிபாட்டு முறைகள் நமது முன்னோர்களிடம் காணப்பட்டன என்பது எவ்வளவு உண்மையோ, அதேயளவிற்கு உண்மை யாதெனில் இன்றைய நிலையிலுள்ள வழிபாட்டு முறைகள் எதுவும் அன்றைய முறைகளுடன் அறவே தொடர்பற்றன என்பதாகும். இதனை விளங்கிக்கொள்வதற்கு நாம் முருகன் சுப்பிரமணிய ஸ்வாமி/ஸ்கந்த (Skanda) ஆகிய கதையினை அறிந்துகொள்ளவேண்டும்.

**ஆரியப் படையெடுப்பால் சுப்பிரமணிய ஸ்வாமியாகிய முருகன்:**

இற்றைக்கு ஏறத்தாழ 3500 ஆண்டுகளிற்கு முன்னர் {பொதுயுகத்திற்கு முந்திய 1500 ஆண்டளவில் (BCE 1500) இடம்பெற்ற ஆரியப் படையெடுப்பானது இந்தியப் பழங்குடி மக்களிற்கு மட்டுமல்லாமல், அவர்களின் இயற்கையோடு ஒன்றிய வழிபாட்டு முறைகளுக்கும் இருண்ட காலத்தினைக் கொண்டு

வந்தது. ஆரியப் பார்ப்பனர்கள் முதலில் அக்கினி, இந்திரா, சோமன் போன்ற கடவுள்களுக்கே முதன்மை கொடுத்து வழிபட்டதுடன், அவற்றையே ஏனையோரிடமும் பரப்பவும் முனைந்தனர். இதனை நாம் ரிக், யசூர் ஆகிய வேதங்களில் அக் கடவுள்களுக்கு கொடுத்த முதன்மையிலிருந்து அறிந்துகொள்ளலாம். இன்று இந்துக்களிடையே பரவலடைந்துள்ள எந்தவொரு கடவுளும் அன்று வேதங்களில் முதன்மை பெற்றிருக்கவில்லை. இதற்கு சுப்பிரமணிய ஸ்வாமியாகிய ஸ்கந்தாவும் புறநடையல்ல. ஸ்கந்தா (Skanda) என்பவர் குமார (Kumara) என்ற பெயருடன் அக்னியுடன் தொடர்புள்ளவராக ரிக் வேதத்தில் முதன்முதலில் காணப்படுகிறார். வேதத்தின் மற்றொரு பகுதியில் ஸ்கந்தா, ருத்திராவுடன் – Rudra (பிற்காலத்தில் சிவனாகப்போகும் ருத்திரா) தொடர்புடையவராகக் காணப்படுகின்றார். இவ்வாறு வேதங்களில் முதன்மையற்று சிறு சிறு இடங்களில் காணப்பட்ட ருத்திரா, ஸ்கந்தா போன்ற கடவுள்கள் திடீரென முதன்மை பெற்று பேருரு எடுப்பதற்கு ஒரு வரலாற்றுப் பின்னனி காரணமாகவுள்ளது. பவுத்தப் புரட்சியினை எதிர்கொண்டு தமது பார்ப்பனிய ஆதிக்கத்தை மீண்டும் நிலைநாட்டுவதற்குப் பார்ப்பனர்கள் தமது அக்கினிக்குப் பலியிட்டு வழிபடும் முறையினைக் கைவிட்டு ஆதிக்குடிகளின் வழிபாட்டுத் தெய்வங்களைத் தமது வேத காலக் கடவுள்களுடன் இணைத்து பல புராணக்கதைகளை உருவாக்கினார்கள். இந்தப் பின்புலத்திலேயே ஏனைய தொல்குடி மக்களின் வழிபாட்டுமுறைகள், வேதத்தில் வரும் ஸ்கந்தா, குமாரா போன்றவர்கள், உபநிடதங்களில் வந்த சனத்குமார் (Sanath Kumar)என்பவற்றுடன் தமிழர்களிடையே இருந்த பல்வேறு வகைப்பட்ட முருக வழிபாட்டு முறைகளையும் இணைத்து, சுப்பிரமணிய ஸ்வாமி உருவாக்கப்பட்டார். இதுவே சுப்பிரமணிய ஸ்வாமி தோன்றிய வரலாறாகும். இவ்வாறான பல்வேறு கடவுள்களின் தொகுப்பாக அமைந்ததாலேயே வேறு எந்தக் கடவுள்களுக்கும் இல்லாதளவில் சுப்பிரமணிய ஸ்வாமிக்கு அதிகளவில் பெயர்கள் இருப்பதும், அவரின் பிறப்பு, வளர்ப்புடன் தொடர்புடையதாகப் பல பெற்றோர்கள் (ருத்திரா, பார்வதி, அக்கினி, கார்த்திகைப் பெண்கள்...} காணப்படுவதும் அமைந்துள்ளது.

இவ்வாறு முற்றிலும் பார்ப்பன மயப்படுத்தப்பட்ட ஸ்கந்தா என்ற போர்க் கடவுள் குப்தர் காலத்தில் இந்தியா முழுவதும் பரவலடைந்திருந்த போதும், குப்த பேரரசின் வீழ்ச்சியுடன் இந்தியாவின் ஏனைய பகுதிகளில் வீழ்ச்சியடைய, தமிழ் நாட்டில் மட்டுமே பழந்தமிழர்களின் பண்பாட்டுடன் இணைக்கப்பட்டிருந்த காரணத்தால் முதன்மையினை இழக்காமலிருந்தது. இந்தப் போர்க் கடவுளின் ஒன்றிணைப்பு மூலமான தோற்றத்தினை நியாயப்படுத்தும்

நோக்கில் ஸ்கந்த புராண (Skanda Purana) உருவாக்கப்பட்டது. இதனையடிப்படையாகக் கொண்டு இப் புராணக்கதையினை தமிழர்களிடம் கொண்டு போய்ச் சேர்ப்பதற்காக கந்தபுராணம் எனும் புராணம் கச்சியப்ப சிவாச்சாரியாரால் தமிழில் இயற்றப்பட்டது.

கந்த புராணத்தை எவ்வளவோ கவனம் எடுத்து இயற்றியபோதும் அதில் பல தர்க்கரீதியான முரண்கள் காணப்படுகின்றன. குறிப்பாக சுப்பிரமணிய ஸ்வாமி சூரனை அழித்து, அவனை மயில் வாகனமாகவும் சேவற்கொடியாகவும் ஆக்கியதாகக் கந்தபுராணம் பாடும். அவ்வாறாயின் அதற்கு முன்னரே சிறுவனாகவிருக்கும் போதே பிள்ளையாருடன் மாம்பழத்திற்குச் சண்டையிட்டு மயிலேறி உலகம் சுற்றியது எவ்வாறு? என்ற கேள்வி எழும். தூங்கும் குழந்தைகள் உட்பட மொத்த ஊரையே கடலுள் மூழ்கடித்தவர் ("முஞ்சு தானை களார்ப்பொடு குழீ ..." பாடல்) எவ்வாறு கருணையே உருவான கடவுளாக முடியும். இவ்வாறான முரண்கள் கந்த புராணத்தில் காணப்படுவதாலேயே தமிழக ஊர்ப் புறங்களில் ஒருவர் நம்ப முடியாத பொய்களை/புழுகுகளைக் கூறும்போது, **"இந்தப் புழுகு கந்த புராணத்திலும் இல்லாத புழுகு"** எனக் கூறுவார்கள். (இதனை சில பக்தர்கள் "கந்த புராணத்தில் இல்லாதது வேறு எந்த புராணத்திலும் இல்லை" என மாற்றிக்கூறிவருகின்ற போதிலும் முன்னையதே நாட்டுப்புற வழக்கிலுள்ளது).

இதற்கிடையில் முருகனுக்கும் சுப்பிரமணியனுக்குமிடையேயான ஒரு வேறுபாட்டினை, முருகனின் ஊர்தியினைக் கொண்டே ஒப்பிட்டுப் பார்ப்போம். புராணங்களில் சுப்பிரமணியனின் ஊர்தி (வாகனம்) மயில். தமிழில் முருகனின் ஊர்தி யானையே ஆகும்.

"சூருடை முழு முதல் தடிந்த பேர் இசை,
கடுஞ் சின விறல் வேள் களிறு ஊர்ந்தாங்கு"
[பதிற்றுப்பத்து 11-5-6]

மேலுள்ள பாடலில், நெடுஞ்சேரலாதன் அரசனை குறிஞ்சி நிலத் தலைவன் முருகனுடன் (வேள்) ஒப்பிடப்படும் பாடலில், முருகனின் ஊர்தியாக யானை (களிறு) குறிப்பிடப்படுகின்றது.

அடுத்து ஒரு புறநானூற்றுப் பாடல் ஒன்றினைப் பார்ப்போம்.

"பனைக் கொடியோனும், மண்ணுறு திருமணி
புரையும் மேனி விண் உயர் புட்கொடி
விறல்வெய்யோனும், மணிமயில் உயரிய மாறா
வென்றிப் பிணி முக ஊர்தி ஒண் செய்யோனும்."
[புறம் : 56 : 1.8]

இப் பாடலில் மயிலைக் கொடியாகவும், யானை (பிணி முக) ஊர்தியாகவும் முருகன் கொண்டுள்ளார்.

"ததும்பு சீர் இன் இயம் கறங்க, கைதொழுது,
உரு கெழு சிறப்பின் முருகு மனைத் தரீஇக்,
கடம்பும் களிறும் பாடி"

[அகநானூறு 138]

மேலுள்ள பாடலில் முருகனது கடம்ப மாலையும் களிறும் (யானை) பாடப்படுவதனைக் காணலாம். எனவே தமிழிலக்கியங்களில் யானைதான் குறிஞ்சி நிலத் தலைவனின் ஊர்தியாகக் குறிப்பிடப்படுவதனைத் தெளிவாக காணலாம். யானைப் படை என்று ஒன்றே சில நூற்றாண்டுகளிற்கு முன்னர் வரைக் காணப்பட்டமையால் இது அறிவிற்கும் பொருத்தமானது. மறுபுறத்தே மயிலுக்கு மேல் ஏறியிருந்தால், மயில் சுமையினைத் தாங்குமா?

இப்போது கேள்விக்கான பதில் காண்பதற்கான நேரம் வந்துவிட்டது. இங்கு பதில் காண்பதற்கு முன் கேள்வியினை முழுமையாக உள்வாங்கிக்கொள்ள வேண்டியுள்ளது. முருகன் பற்றித் தேவையானளவு மேலே ஏற்கனவே பார்த்துள்ளோம். தமிழ் பற்றியும் முந்திய படலங்களில் தெளிவாகவே பார்த்துள்ளோம். இறுதிச் சொல்லான 'கடவுள்' என்பது சற்றுச் சிக்கலானது. அகராதியின் படி கடவுள் (God) என்பவர் புடவி (Universe) முழுவதையும் படைத்துக் காப்பவர் என்றும், அவர் எல்லா ஆற்றல்களும் பொருந்தியவர் (Supreme power) என்றும், எல்லாச் செயல்களிற்கும் காரணமானவர் எனவும் வரைவிலக்கணப் படுத்தப்படுகிறார். இப்போது பதிலுக்கு வந்தால் 'முருகன் தமிழ்க்கடவுளா?' என்பதற்கு முன் தமிழுக்கு எனத் தனியாகக் கடவுள் இருக்கலாமா எனப் பார்த்தால், பதில் கடவுளின் வரைவிலக்கணப்படி இல்லை என்பதேயாகும். விளங்கக் கூறின், ஒரு வாதத்திற்கு கடவுள் இருக்கிறார் எனக்கொண்டாலும் அவர் உலகு முழுவதற்கும் பொதுவானவாராக இருப்பாரேயன்றி மாறாக தமிழர்களுக்கு முருகன், சமசுகிரத ஆரியருக்கு இராமர், ஐரோப்பியருக்கு இயேசு, அராபியருக்கு அல்லா என இருக்கமுடியாது.

முடிவாக, முருகன் எனும் இயற்கை சார் போற்றுதலை, இன்றைய அறிவியல் நிலையில் "எல்லாம் வல்ல கடவுள்" என்ற வரைவிலக்கணத்திற்குள் அடைக்கத் தேவையில்லை; மாறாக பழந்தமிழ்க் கலைப்பண்பாட்டு வரலாற்று அடையாளமாகக் கொள்ளலாம்.

## நான்காம் படலத்தின் பிழிவு:

பழந் தமிழர்கள் மத சார்பற்றவர்கள் என்பதனைத் தொல்லியல் மற்றும் இலக்கியச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு பார்த்தோம். பரிபாடல், கலித்தொகை, திருமுருகாற்றுப்படை ஆகியவற்றைச் சங்ககாலத்திற்குரிய நூல்களாகக் கருதுவதிலுள்ள சிக்கல்களையும் பார்த்தோம். ஒவ்வொரு மதங்களும் எத்தகைய காலப்பகுதியில் தமிழகம் வந்தது எனவும் பார்த்தோம். ஆசீவக மதம், இலங்கையில் அதன் பரவல், அதன் அழிவு என்பனவற்றையும் சுருக்கமாகப் பார்த்தோம். அதே போன்று பழந்தமிழரின் இயற்கை சார் முருகன் எவ்வாறு சுப்பிரமணியன் ஆக்கப்பட்டு, பழந் தமிழர்களின் தொன்மம் மதத்தினுள் களவாடப்பட்டது எனவும் பார்த்தோம்.

## துணை நின்ற நூல்கள்


- தொல்லியல் நோக்கில் சங்ககாலம் – கா.ராஜன்.
- சங்க இலக்கியம் கவிதையும் கருத்தும் – பேரா. கா.சிவத்தம்பி.
- History and Doctrines of the Ajivikas: A Vanished Indian Religion – A. L. Basham.
- ஆசீவகமும் ஐயனார் வரலாறும் – க.நெடுஞ்செழியன்.
- பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும் – க.கைலாசபதி.
- Kumara in Essays on Indo-Aryan Mythology Vol 1 – Narayan Aiyangar.
- Acculturation Process Mythicised in Puranas and Acculturation: A Historico-Anthropological Perspective – Nath Vijay.

# ஐந்தாம் படலம்

## தமிழும் சாதியும்

**த**மிழர்களிடம் ஆதியிலிருந்தே சாதிகள் உண்டா? எப்போது சாதி உருவாக்கப்பட்டது? ஆதியில் யார் ஆண்ட சாதி? இராசராச சோழன் எந்தச் சாதி? சாதியைக் கொண்டு யார் தமிழர் எனக் கண்டுபிடிக்கமுடியுமா? என்பன போன்ற பல கேள்விகள் அண்மைக் காலத்தில் பரவலாக எழுப்பப்படும் கேள்விகளாகக் காணப்படுகின்றன. அத்தகைய கேள்விகளுக்குப் பதில் காணுமுகமாக தமிழர்களிடம் சாதியின் தோற்றம் பற்றிய ஒரு சுருக்கமான விளக்கமாகவே இப் படலம் அமையும். இதனை முழுமையாகப் பார்ப்பதற்குத் தமிழர்களின் கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளிலான எழுத்திலுள்ள வரலாற்றினைப் பார்க்கவேண்டும். பொதுவாக இலக்கியங்கள் அந்தந்த காலங்களைப் படம் பிடித்துக் காட்டும் கருவியாகச் சொல்லப்படுவதால், ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகள் இடைவெளியில் இடம்பெற்ற இரு பாடல்களைக் கொண்டு; இச் சிக்கலினை அணுகுவோம்.

முதலில் இரண்டாயிரம் ஆண்டுகளிற்கு முன்னர் சங்க காலத்தில் இடம்பெற்ற புறநானூற்றுப் பாடல் ஒன்றினைப் பார்ப்போம். ‘அடலருந் துப்பின்...’ எனத் தொடங்கும் பாடலின் (புறம்-335) பின்வரும் வரிகளைப் பாருங்கள்.

“துடியன், பாணன், பறையன், கடம்பன், என்று
இந்நான் கல்லது குடியும் இல்லை;
ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி,
ஒளிறுஏந்து மருப்பின் களிறுஎறிந்து வீழ்ந்தெனக்,
கல்லே பரவின் அல்லது,
நெல்உகுத்துப் பரவும் கடவுளும் இலவே”

(புறம்335)

இப் பாடல் வரிகளில் புலவர் மாங்குடி கிழார் ‘துடியன், பாணன், பறையன், கடம்பன்’ என்ற நான்கு குடிகளே சிறந்த குடிகள் என்கின்றார். {இப் பாடலைக் கொண்டே சிலர் “முன்பு

பறையர்கள் தான் ஆண்ட சாதி'' என தற்போதைய தாழ்த்தும் சாதிகளிற்குப் போட்டியாக, தமது சொந்தச் சாதிப் பெருமையினைப் பேசிவருகின்றார்கள். இது ஏன் தவறு எனப் பின்னர் பார்ப்போம்}.

இப்போது அப்படியே 2000 ஆண்டுகளைக் கடந்துவந்து இன்னொரு பாடலினைப் பார்ப்போம். அலை ஓசை (1985) என்ற படத்தில் ''போராடடா ஒரு வாளேந்தடா, வேங்கைகளும் இனித் தூங்கதடா...'' எனத் தொடங்கும் பாடலின் பின்வரும் வரிகளைப் பாருங்கள்.

''இன்னும் இங்கு பள்ளு பறையென
சொல்லும் மடமைகள் உள்ளதடா
நித்தம் சிறு சேரி சிறகுகள்
வேள்வி விறகென மாறுதடா''

இப்போது பள்ளு, பறை என்று சொல்வதே கீழானதும், மடமையானதும் என்ற நிலை வந்துவிட்டது. இவ்விரு பாடல் வரிகளையும் மேலோட்டமாகப் பார்த்தால், சங்க காலத்தில் சாதியடுக்குகளில் மேலேயிருந்த 'பறையர்' போன்ற சாதிகள் தற்போது கீழே வந்துவிட்டது என்பது போன்ற ஒரு தோற்றம் ஏற்படலாம் (அவ்வாறு கூறியும் சிலர் அரசியல் செய்கின்றார்கள்). உண்மை அதுவன்று, உண்மையில் சங்க காலத்தில் சாதி என்ற சொல்லோ அல்லது அந்தக் கருத்துருவாக்கமோ தமிழர்களிடமில்லை. அவ்வாறாயின் மேற்கூறிய புறநானூற்றுப் பாடல் வரிகள் என்ன? என்ற கேள்வி எழலாம். அப் பாடல் வரியிலேயே அதற்கான பதில் உண்டு. அதுதான் '**குடி**'. சாதி என்பது குடிகுலம் என்பதிலிருந்து வேறுபட்டது. இதனைச் சற்று விரிவாகப் பார்ப்போம்.

சாதி (Caste) என்பது பிறப்பிலடிப்படையிலான தொழிற் பாகுபாட்டினையும், அக மண முறையினையும் கெட்டியாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட மக்களின் குழுக்களைக் குறிக்கும். இங்கு **பிறப்பிலடிப்படையிலான தொழில், அக மணமுறை, மதப்பின்புலம்** என்பன சாதியின் அடிப்படைக் கூறுகளாகும். இப் படலத்தின் தொடக்கத்தில் குறிப்பிடப்பட்ட முதலாவது கேள்வியான ''தமிழர்களிடம் ஆதியிலிருந்தே சாதிகள் உண்டா?'' என்ற கேள்விக்கான பதில் சாதி என்ற சொல்லிலேயே உண்டு, அதாவது சாதி என்ற சொல்லே தமிழல்ல. அது ஜாதி என்ற வட சொல்லின் கிரந்தம் நீக்கிய வடிவமே (ஜாதகம் – சாதகம் போன்று). ஜா என்பது ஜனனம் (பிறத்தல்) என்பதுடன் தொடர்புடையது. ஜாதி/சாதி என்ற சொல் தமிழல்ல என்பது மட்டுமல்ல, அதற்கு இணையான தமிழ்ச் சொல் வேறு எதுவும் கூட வழக்கில் இல்லை (குலம், குடி

போன்ற தமிழ்ச் சொற்களின் பொருளினைப் பின்பு பார்ப்போம்). இப்போது பலர் 'சாதி' என்று சொல்லக் கூச்சப்பட்டு/அவ்வாறு நடித்து சமூகம், சமுதாயம் (சமன்+ஆயம்) என்ற சொற்களால் சாதியினைக் குறிக்கின்றார்கள். இது முற்றிலும் தவறு; ஏனெனில் அவ்விரு சொற்களும் சமன் என்ற வேர்ச்சொல்லினை அடியாகக் கொண்ட சொற்களாகையால், அவை சமனற்ற சாதி முறையினைக் குறிக்கமாட்டாது (அதே போன்று ஸமூகம் என்ற வடசொல்லும் 'ஸங்கமித்தல் = ஒன்றுசேர்தல்' என்பதனைக் குறிப்பதால் அதுவும் பொருத்தமற்றது). அதனால்தான் சொல்கின்றோம் சாதி என்ற சொல்லுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொல்லேயில்லை, ஏனெனில் சாதி தமிழரின் மரபன்று.

சொல்லின் பொருளைப் பார்த்தோம். இப்போது இலக்கியச் சான்றுகளைப் பார்ப்போம். சாதி என்பது பிறப்பினடிப்படையிலானது என முன்னரே பார்த்தோம். இந்த நிலையில் பின்வரும் குறளினைப் பாருங்கள்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்" [குறள் 972]

இக் குறளானது பிறப்பினால் அனைவரும் ஒருவரே. பிறப்பில் வேறுபாடு இல்லை என்பதை உலகிற்கு உரக்க உரைத்திற்று.

அடுத்ததாக சங்க இலக்கியத்தில் குறுந்தொகையிலுள்ள ஒரு பாடலைப் பாருங்கள்.

"யாயும் ஞாயும் யாரா கியரோ,
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்,
யானும் நீயும் எவ்வழி யறிதும்,
செம்புலப் பெயனீர் போல,
அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே" [குறுந்தொகை]

இப் பாடலானது தமிழர்களிடையே புறமண முறை காணப்பட்டதனை ஆணித்தரமாக எடுத்துரைக்கிறது. புறமணம் உள்ள ஒரு சமூகத்தில் சாதியமைப்பு இருப்பதற்கான வாய்ப்பேயில்லை. இந்த ஒரு பாடல் மட்டுமன்றி சங்கப் பாடல்களில் பலவற்றிலும் {எ.கா. குறுந்தொகை 167 '**முளிதயிர் பிசைந்த**', கலித்தொகை 107 '**அன்னை நோதக்கதோ இல்லைமன் நின் நெஞ்சம்**',...} ஒரு ஆயத்திலுள்ள தலைவியினை ஆயத்திற்கு வெளியேயிருந்து வரும் ஒரு தலைவனே விரும்புகிறான். இப் பாடல்களைக் கொண்டு சங்க காலத்திலிருந்தது புறமணமுறையே என்பதனை உய்த்தறியலாம். பேரா. கா. சிவத்தம்பி அவர்களும் தனது 'சங்க இலக்கியம்

கவிதையும் கருத்தும்' எனும் நூலில் (பக்கங்கள் 85-86) பல்வேறு சான்றுகளைக் கொண்டு, சங்ககாலத்திலிருந்தது புறமண முறையே என நிறுவுவார்.

சங்க காலத்தில் புறமண முறை காணப்பட்டதனை மேலே பார்த்தோம். அதே போன்று பிறப்பிலடிப்படையிலான தொழிலினை மேற்கொள்ளவில்லை என்பதனையும் ஐங்குறுநூறுவில் இடம்பெறும் பின்வரும் பாடல் காட்டுகின்றது.

"முள் எயிற்றுப் பாண்மகள் இன் கெடிறு சொரிந்த
அகன் பெரு வட்டி நிறைய, மனையோள்
அரிகாற் பெரும் பயறு நிறைக்கும் ஊர!
மாண் இழை ஆயம் அறியும் நின்
பாணன் போலப் பல பொய்த்தல்லே" [ஐங்குறுநூறு 47]

இப் பாடலில் பாட்டுப் பாடும் பாணரே மீன்பிடித்து ஊரில் கொண்டு சென்று, மீனுக்கு நிகர் பயறோ, நெல்லோ கொடுத்துப் பண்டம் மாற்றிக்கொண்ட நிகழ்வினை ஐங்குறுநூறு காட்டும். அதே போன்று நக்கீரப்புலவருக்கோ புலவர் பணி, தந்தைக்கோ கணக்காயர் பணி; புலவரான சீத்தலைச் சாத்தனாரின் தந்தை கூலவாணிகம் தொழில் செய்பவர். இவ்வாறு பல சான்றுகள், சங்க காலத்தில் பிறப்பிலடிப்படையிலான தொழில் காணப்படவில்லை என்பதனை எடுத்துக்காட்டுகின்றன.

மேற் கூறியவற்றை உற்றுப் பார்த்தால் சங்க காலத்தில் நிலவிய குடி/குலம் என்பதற்கும் இன்றைய சாதி முறைக்குமுள்ள வேறுபாட்டினை அறிந்துகொள்ளலாம். சுருக்கமாகச் சொன்னால் பழங்கால குடிகளிடம் அகமணமுறையோ கட்டாய பிறப்பிலடிப்படையிலான தலைமுறைத் தொழில்முறையோ இல்லை. தமிழர்களிடம் சங்க காலத்தில் காணப்பட்ட குலக்குழுக்கள் (tribes), குடிகள் என்பவற்றைச் சாதியுடன்போட்டுக் குழம்பத் தேவையில்லை, ஏனெனில் அவை உலகெங்கும் பழங்குடி மக்களிடையே காணப்பட்ட பிரிவுகள் போன்றனவையே. அவற்றில் அகமணம், பிறப்பிலடிப்படையிலான தொழில் கட்டாயம் என்பனவில்லை. இதுவே சாதிக்கும் குடிக்குமுள்ள வேறுபாடாகும்.

**சங்க காலப் பாடல்களில் சில குழப்பங்கள்:**

மேலே சங்க காலத்தில் 'சாதி' என்ற கருத்துரு ஒன்றில்லை எனப் பார்த்தோம். ஆனால், சில சங்க காலப் பாடல்களில் ஒரு குழப்பமான நிலை காணப்படலாம்; அது அக் காலப் பாடல்களுக்கு, இக் காலத்தில் பொருள் கொள்வதிலுள்ள சிக்கல்களேயாகும்.

அவ்வாறு சங்க காலத்திற்கும் – நிகழ்காலத்திற்குமிடையே பொருள் வேறுபடும் சில சொற்களைப் பார்ப்போம்.

**புலையர்**

புலையர் என்ற சொல் பரந்த பொருளில் பயன்படுத்தக்கூடிய ஒரு சொல்லாகும். இதன் வேர்ச் சொல்லாகப் 'புல்' என்பது காணப்படுகின்றது. இங்கு புல் என்பது ஒரு வகையான மூங்கிலைக் குறிக்கும். புல் என்ற வகைப்பட்ட மூங்கிலைக் கொண்டு பின்னுவதில் வல்லவர்களே புலையர் எனப்பட்டார்கள். அதே போன்று புல் வகையிலான மூங்கிலில் வேலும் செய்யப்பட்டது. இதனாலேயே வேலனிற்கு சடங்கு நடத்துபவர்களும் புலையர்கள் (புரோகிதர்கள்) எனப்பட்டார்கள். புலன்களை அடிப்படையாகக் கொண்டு வேலை செய்வதால் புலையர் என்ற பெயர் ஏற்பட்டது என்ற வேறொரு கருத்துமுண்டு. இத்தகைய சமூக முதன்மை வாய்ந்த நிகழ்வின் நாயகனாக அன்று இருந்தவன் 'வேலன்' என்ற பட்டம் தாங்கிய புலையன் ஆவான். சடங்கு முடிந்ததும் அவனும் மக்களோடு மக்களாகப் பிற பணிகளிற்கும் செல்வான் (இன்றைய நாட்டுப்புற பூசாரிகள் போன்று). புல் என்ற மூங்கிலை இழைவோர் மட்டுமன்றி, தோல் இழைவோரும் புலையரே. சங்க காலத்தில் அவ்வாறு தோற் தொழிலுடன் தொடர்புடையோர்கள் கீழானவர்களாகக் கருதப்பட்ட சான்றுகள் இல்லை. பின்வரும் புறநானூற்றுப் பாடல்) வரிகளைப் பாருங்கள்.

"துடியன், பாணன், பறையன், கடம்பன், என்று
இந்நான் கல்லது குடியும் இல்லை" [புறம் 335]

பறையன், துடியன் (உடுக்குப் போன்ற சிறு பறை அடிப்போன்) போன்ற சிறந்த குடிகளே இல்லை என்று அவர்களைப் போற்றியல்லவா பாடப்படுகின்றது. இவ்வாறு பறை போன்ற தோலுடன் தொடர்புடையவர்களின் சிறப்பினைக் காட்டும் பல பாடல்கள் சங்க காலத்தில் உண்டு. பறைக்குப் பலியிடப்படுவதன் மூலம், தெய்வத்திற்கு நிகராகப் பறை கருதப்பட்டதனைச் சங்ககால பத்திற்பத்தில் இடம்பெறும் பின்வரும் பாடலில் காணலாம்.

"கடம்பு அறுத்து இயற்றிய வலம்படு வியன்பனை
ஆடுநர் பெயர்ந்து வந்து அரும்பலி தூஉய்
கடிப்புக் கண் உறூஉம் தொடித்தோள் இயவர்"
[பதி. 17: 6–7]

இறந்தோரிற்கான சடங்குகளைச் செய்பவனும் புலையனே என்பதில் மாற்றுக்கருத்தில்லை. அரச செய்திகளை மக்களிடம் பறையும் (கூறும்) அதே பறையர்களே, மணவிழாவில் பறை

இசைத்தும், இறப்பு நிகழ்வில் பறை இசைத்தும், போரினைப் பறை அறைந்தும் தொடக்கிவைத்தும் இருந்தார்கள்.

> "புலையன் ஏவப் புல்மேல் அமர்ந்துண்டு
> அழல்வாய்ப் புக்க பின்னும்
> பலர்வாய்த் திராஅர் பகுத்துண்டோரே"

வேலனுக்குச் சடங்கு செய்யும் அதே புலையனே இங்கு இறுதிச்சடங்கும் செய்பவன் (இன்றும் சில மதங்களில் இத்தகைய நிலையினைக் காணலாம்). மேலும் "புலையன் ஏவ" (ஏவ = கட்டளையிட) என்ற வரியினையும் கவனத்திற்கொள்க. இத்தகைய புலையர்கள் இன்றைய சாதி அடுக்குகளில் கீழ் நிலைப்பட்டவர்களாக இருப்பது போன்ற நிலை அன்றில்லை (அன்று சாதியே இல்லை).

**இழிசினன்**

சங்க இலக்கியங்களில் இடம்பெறும் 'இழிசினன்' என்ற சொல்லின் பொருள் தவறாகவே கொள்ளப்பட்டு வருகின்றது. இச் சொல்லானது இழி, சினன் (இழி+சினன் = இழிசினன்) என்ற இரு சொற்களாகப் பிரியும். இங்கு 'இழி' என்ற என்ற சொல்லின் பொருள் 'இறங்கு' என்பதே. இப்போது 'ஈழம்' என்ற சொல்லை எடுத்தால், அது (ஈழம்) தமிழகத்திலிருந்து புவியியல் ரீதியாகக் கீழே இறங்கியிருப்பதால், அப் பெயர் பெறும்.

இழிவு › ஈழ் › ஈழம்

தமிழகத்தை விட்டு "இறங்கி" இருப்பதால் = ஈழம், அதே வேளையில் காழ்தல் = ஏறுதல் என்பதால் காழகம் என்று இன்றைய மியன்மாரினை (பர்மா) அழைத்தனர். இப்போது சொல்லுங்கள், ஈழம் என்ன தமிழகத்தைவிடத் தாழ்ந்த சாதியா?. இல்லையே, அது போன்றதே இழி என்ற சொல்லும் இறங்குதல் என்ற பொருளே தவிர, கீழ்ச்சாதி என்ற பொருள் இல்லை. அடுத்ததாக சங்க காலப் பாடல்களில் 'இழிவு' என்ற சொல்லின் பொருளினைப் பார்ப்போம்.

> "காண்டல் விருப்பொடு தளர்புதளர்பு ஓடும்
> பூங்கட் புதல்வனை நோக்கி, 'நெடுந்தேர்
> தாங்குமதி, வலவ!' என்று இழிந்தனன், தாங்காது,
> மணிபுரை செவ்வாய் மார்பகம் சிவணப்
> புல்லிப் பெரும! செல்இனி, அகத்து' எனக்"
>
> [அகநானூறு 66 : 11–15]

மேற் குறித்த பாடலில் தேரினை நிறுத்துமாறு கூறி 'இறங்கினன்' என்பதற்கு 'இழிந்தனன்' என்றுதான் குறிக்கப் பெற்றுள்ளது.

திருக்குறள் ஒன்று பார்ப்போமா!

"தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை" [குறள் 964]

இங்கு 'இழிந்த மயிர்' என்பது கீழே விழுந்த மயிர் என்ற பொருளே பெறுகின்றது. எனவே சங்க காலத்தில் இழி என்ற சொல் இறங்கு/விழு என்ற பொருளே பெறுகின்றது.

அடுத்ததாக, 'சினன்' என்ற சொல் அறிவுடையோன் என்ற பொருளினைப் பெறும். இன்றைய அகராதிகள் கூடச் 'சினன்' என்ற சொல்லிற்குப் 'புத்தன்/அருகன்' என்ற பொருள் தருகின்றன. எனவே இழிசினன் என்ற சொல்லானது 'கீழிறங்கும் அறிவுடையோன்' என்ற பொருள் பெறுகின்றது. குறிப்பாகப் புலையன் வேலனாக மாறிச் சடங்குகள் செய்யும்போது, அவனில் முருகு வந்து இறங்குவதாக; இதனைச் சொல்லலாம். அறிஞர் இலக்குவனார் திருவள்ளுவன் அவர்கள் 'அவதாரம்' என்ற வடமொழிச் சொல்லுக்கு நிகரான தமிழ்ச் சொல்லாக 'இழிசினன்' என்ற சங்கத் தமிழ்ச் சொல்லினையே கொள்வார் {அவதாரம் என்ற சொல்லும் மேலிருந்து கீழே இறங்கி வரல் என்ற பொருள் பெறும்}. எனவே சங்க காலத்தில் 'இழிசினன்' என்ற சொல் பெருமைக்குரிய ஒரு சொல்லேயாகும். ஒரு பாடலில் எவ்வாறு இச்சொல் கையாளப்படுகின்றது என்பதனையும் பார்த்துவிடுவோமா!

"கட்டில் நிணக்கும் இழிசினன் கையது
போழ்தூண்டு ஊசியின் விரைந்தன்று மாதே"
[புறநானூறு : 82]

இப் பாடலில் சோழன் பெருநற்கிள்ளி போரில் காட்டும் விரைவுக்கு உவமையாகவே கட்டில் புனையும் தொழிலாளி ஒருவனின் வினைத்திறன் காட்டப்படுகின்றது. பொதுவாக ஒன்றுக்கு உவமையாகக் காட்டப்படும் மற்றொன்று முன்னையதனைவிட உயர்வாகவல்லவா காணப்படும். எனவே அரசனின் வீரத்திற்கு இணையாகக் காட்டப்படும் இழிசினன் என்ற உவமையும் உயர்வாகத்தானே காணப்படும்.

**இழிபிறப்பாளன்**

புறம் 170 பாடலைப் பாடிய 'உறையூர் மருத்துவன் தாமோதரனார்' பற்றி அறிஞர்கள் குறிப்பிடும் போது "உடுக்கு அடிக்கும் வேலனை இவர் 'இருபிறப்பாளன்' என்று குறிப்பிடுகிறார்" என்கின்றார்கள். அதாவது, எளிய மனிதனாக உள்ள போது அவனுக்கு உள்ளது ஒரு பிறப்பு. வீட்டு விழாவில் அகத்திணைப் பாடல்களில் தலைவிக்கு முருகயரும் போது மற்றொரு பிறப்பு. இப்படி ஒருவனே இரு பிறப்பாளனாக மாறுகிறான். இங்கு முருகு வந்து இறங்கும்

போது ஏற்படும் இரண்டாவதான 'முருகு இறங்கும் பிறப்பினையே 'இழிபிறப்பாளன்' என்பது குறிக்கின்றது. எனவே இங்கும் எந்தவொரு சாதிய ஏற்றத்தாழ்வும் இல்லை.

**தொல்காப்பிய இடைச்செருகல்**

'தொல்காப்பியம் வகுத்த தொழில் பிரிவினை மனுவின் நால் வருணத் தர்மத்தோடு பொருந்துகிறது' என்றொரு கருத்தும் பரவலாகவுண்டு. இதில் ஓரளவு உண்மை இருக்கின்றது. ஆனால் அதற்குக் காரணம் தொல்காப்பிய (குறிப்பாக மரபியல்) உரைகளில் ஏற்பட்ட சிக்கல்களும், சில இடைச் செருகல்களுமே. உரைச் சிக்கல்களுக்கு எடுத்துக்காட்டாக, 'நால்வர்' என்று இடம்பெற்றாலே நால் வர்ணம் என்றும் 'ஐயர்' என்றாலே பார்ப்பனர் என்றும் உரை எழுதிவிட்டார்கள். ஏன் நால்வர் என்பது நான்கு நிலத்தவர்களையும் {முறைமையில் திரிந்ததே பாலை} ஐயர் என்பது தலைவரையும் குறிக்கக்கூடாது?! {'ஐ' என்ற ஒரெழுத்து மொழியின் பொருளே தலைவன்}. இடைச் செருகலுக்குச் சான்றாக 'குரங்கின் ஏற்றினைக் கடுவன் என்றலும்...' எனத்தொடங்கி விலங்குகளின் ஆண்-பெண் இளமைப் பெயர்கள் எனச் சென்றுகொண்டிருந்த பாடலில் திடீரென அந்தணர், அரசர், வைசிகன் என வரும். 'வைசிகன்' என்ற சொல்லே அக் காலத்தில் கிடையாதே. வணிகன் என்று கூறியிருந்தாலாவது ஓரளவிற்கு இடைச்செருகல் வெளித் தெரிந்திருக்காது. இவ்வாறான உரைக் குழறுபடிகளையும், இடைச்செருகல்களையும் முனைவர் கண்ணபிரான் இரவிசங்கர் தனது 'அறியப்படாத தமிழ்மொழி' எனும் நூலில் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டியிருப்பார் (பக்கம் 180-187).

மேலுள்ளவற்றை விளங்கிக்கொண்டால், குறிப்பாகச் சங்க காலப் பொருளிலேயே அப் பாடல்களைப் புரிந்துகொண்டால், பல குழப்பங்கள் தீரும்.

இலக்கியச் சான்றுகளையும் விட முதன்மையானது அகழ்வாய்வுச் சான்றுகளாகும். கீழடி அகழ்வாய்வில் முதல் ஐந்து கட்டங்களில் கண்டெடுக்கப்பட்ட 15,000 இற்கும் மேற்பட்ட பொருட்களில் எதுவுமே சாதி – மத அடையாளத்தைக் குறிக்காமலிருப்பது, நமது 'சங்க காலத்தில் சாதி இல்லை' என்ற கூற்றினை வலுப்படுத்துகின்றது.

**சாதியின் தமிழக வருகை:**

சாதி என்ற சொல்லே சங்கமருவிய காலத்திலேயே முதன்முதலில் சிலப்பதிகாரத்தில் வர்ணங்களை குறித்தே வருகின்றது.

"நால்வகை சாதியும், நலம்பெற நோக்கி"

[வேனில் காதை 41]

அடுத்ததாக மணிமேகலையில் இடம் பெறுகின்றது.

"நாமம் சாதி... கிரியையின் அறிவது ஆகும்"

[சமயக்கணக்கர் 23]

சங்கமருவிய காலத்தில் கூட, சாதி என்ற சொல் வர்ணங்களை அடிப்படையாகக் கொண்டு தமிழர்களிடம் வந்து சேர்ந்துவிட்ட போதும், சாதி என்ற கோட்பாடானது, இன்றைய பொருளில், அன்றும் உருவாகவில்லை. பார்ப்பனர்களின் தமிழக வருகையுடனேயே சங்கமருவிய காலத்தில் சாதி வருகின்றது. பார்ப்பனர்களிடமும் முதலில் வர்ணங்களே தோன்றுகின்றன. இதனை ரிக் வேதம் புருச சூத்திரம் மூலம் அறிந்து கொள்ளலாம். வர்ணங்கள் எவ்வாறு சாதியாக மாறுகின்றது என்பதனை அம்பேத்கார் சிறப்பாக "Revolution and Counter-Revolution in Ancient India", "Annihilation of Caste" எனும் நூல்களில் விளக்கியிருப்பார். வர்ணங்கள் மேலும் பிரிவுகளாகப் பிளவுற்ற பின் ஜாதி என்ற சொல் முதன்முதலில் பகவத்கீதையில் (1: 42) **"உத்ஸாதயந்தே ஜாதி தர்மா சாஸ்வத"** என வருகின்றது. இவ்வாறு வைதீக மதத்தினூடாகவே சாதி தமிழரிடையே புகுத்தப்பட்டது.

இப்போதெல்லாம் மதவாதிகளில் சிலர் பகவத்கீதை கூறும் வர்ணங்கள் (ஜாதிகள்) என்பன பிறப்பினடிப்படையிலானதல்ல, அவை குணத்தினடிப்படையிலானவை எனப் புதிய விளக்கம் கொடுக்கிறார்கள். இதற்கு இவர்கள் காட்டும் சுலோகம் "குணகர்ம விபாசக" (413) என்பதாகும். இங்குள்ள குண கர்ம என்பது சாதிக்கு விதித்த வேலையின் குணம் என்பதே. இதற்கு உரை எழுதிய ஆதிசங்கரரும் "பிறப்பால்" என்றே எழுதியுள்ளார். கீதையின் 18 இயலின் 44-47 வது பாடல்களில் நாலு வருணங்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டு அவற்றிற்கான தொழில்களும் குறிப்பிடப்படுகிறன. கீதையின்படி ஒரு வர்ணத்தைச் சேர்ந்த ஒருவர் வேறு ஒரு தொழினை சிறப்பாகச் செய்வார் எனினும் தனது குலத் தொழிலினைவிட வேறு தொழில் செய்யக்கூடாது (**ஸ்ரோயான் ஸ்வதர்மா விகுண பர தர்மாத் ஸ்வஅனுஸ்திதா**). மேலும் இன்னொரு சுலோகமானது (**வர்ண சங்கரோ நரகாயைவ, பித்ரு லுப்த பிண்டோதம் க்ரியக**) கலப்புமணம் செய்தால் பிண்டம் கூட உங்களிற்கு வந்து சேராது, நரகமே செல்வீர்கள் எனக் கூறுகின்றது. இவற்றின் மூலம் கீதை சொல்வது பிறப்பினடிப்படையிலான, அகமண முறையினை வலியுறுத்தும் சாதியமைப்பினையே என்பது தெளிவாகின்றது. இத்தகைய வைதீக (இன்றைய இந்து) சிந்தனைகளையே சாதிகளாக தமிழர்களிடம் கொண்டுவரப்பட்டன. இதற்குத் தமிழர்களிடம் ஏற்கனவேயிருந்த குடிப் பெயர்களையே, தமது வர்ணக் கோட்பாட்டிற்கமைய சாதிகளாகப் பார்ப்பனியம் மாற்றிவிட்டது.

## குடிகள் சாதிகளாக்கப்பட்ட வரலாறு:

தமிழர்களிடம் தொழில்களை அடிப்படையாகக் கொண்ட குடிகள் இருந்ததைப் போன்றே, திணைகளை அடிப்படையாகக் கொண்ட குடிகளுமிருந்தன. மனிதர்களின் ஆதித் தொழிலான வேட்டையினைச் செய்தவர்கள் வேடர்கள். அந்தவகையில் பார்த்தால் நமது முன்னோர்கள் யாவருமே வேடர்கள். முல்லையில் மேய்ச்சல் வாழ்வில் ஆடு மாடுகளை பார்த்துக் கொண்டிருந்ததால் நமக்குப் பெயர் கோனார். குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்தவர்கள் குறவர்கள். நமது முன்னோர்கள் அத்தனை பெரும் குறவர்களாக இருந்தவர்கள் தான். காட்டிற்கும் மலைக்கும் இடையிலே வாழ்கின்றவர்களிற்கு இடையர்கள் என்று பெயர். மருத நிலத்தில் வேளாண்மை செய்யும் போது அங்கு மேட்டுப் பாங்கான நிலத்தில் குடில்களை அமைத்துக் கொண்டு, பள்ளத்தில் இறங்கி வேலை செய்தோர் பள்ளர்கள். பழந்தமிழ் இலக்கியங்களில் பள்ளு என்றால் உழவு என்ற பொருள் உண்டு. பின்னரே உழவர்கள் வேளாளர்கள் எனப்பட்டனர். பறையர் என்பது அரசரின் தூதுவர்களையே குறிக்கும். இன்றும் ஈழத்தில் பறைதல் என்றால் பேசுதல் என்ற பொருள் உண்டு. அரசரின் ஆணைகளை மக்களிடம் எடுத்துச் செல்லல், தூது செல்லல், போரில் முன்னின்று பறை முழங்கிப் போரினைத் தொடக்கி வைத்தல் எனப் பல சிறப்பான பணிகளை ஆற்றுவோரே ‘பறையர்’ எனப்பட்டார்கள். மேற்கூறியவை எல்லாம் குடிகளே தவிர, சாதிகளன்று.

இத்தகைய தமிழ்க் குடிகளினையே, பார்ப்பனியமானது தனது நான்கு வர்ணக் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு சாதிகளாக்கியது. இத்தகைய மாற்றம் ஒரே நாளில் இடம் பெறவில்லை. மாறாகப் பல நூற்றாண்டுகள் கடந்தே இப் படிமுறை மாற்றம் ஏற்பட்டது. இன்று பல்வேறு சாதிக்காரர்களும் இராச ராச சோழன் தமது சாதி என உரிமை கொண்டாடுகின்றார்கள். உண்மையில் அக் காலத்தில் கூட சாதி முறையானது இறுக்கமடைந்து இன்றைய நிலையினை அடையவில்லை. சோழர் காலத்தில் சங்க கால நிலைமை மாற்றமடைந்து பல ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டு விட்டபோதும், சாதி நிலை இன்று போல மாற்றமடைந்திருக்கவில்லை என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக சேரிகள் காணப்படுகின்றன. ஒரு வகையில் தொழிலினை அடிப்படையாகக் கொண்ட குலங்கள் மட்டுமே ஓரிடத்தில் சேர்ந்து இருப்பதனைச் சேரிகள் காட்டுகின்றன (இது சாதி முறையில் ஒரு கட்ட வளர்ச்சிதான்). அதே நேரம் பறைச்சேரி புறம்பாகவும், தீண்டத்தகாதோர் சேரி புறம்பாகவும் குறிப்பிடப்படுவதால் ‘யார் அந்த தீண்டத்தகாதோர்?’ என்ற கேள்வி ஏற்படுகின்றது. அங்கிருந்த தீண்டத்தகாதோர் இன்னமும் பொது நீரோட்டத்தில் சேர்ந்திராத வேடுவர்களே என்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றார்கள். இதில்

வேடிக்கை என்னவென்றால், இராச ராச சோழன் காலத்திலிருந்து காலப்பொறியில் (Time machine) ஏறி 2500 ஆண்டுகளுக்கு முன் சென்றால் எல்லோருடைய தொழிலாகவுமிருந்த வேட்டை இன்று தீண்டத்தகாத தொழிலாகிவிட்டது. இப்போது காலப்பொறியில் ஏறி சோழன் காலத்திலிருந்து இன்னமும் ஒரு ஆயிரம் ஆண்டுகள் பின்னே வந்து, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திற்கு வந்தால்; இப்போது வேட்டை என்பது பிரபுக்கள், செல்வந்தர்களின் பொழுதுபோக்கும், மரியாதைக்குரிய பகுதிநேரத் தொழில். இவ்வளவுதான் தீண்டாமை. மேற்கூறியவாறு சாதி அமைப்பு தனது முழு வடிவத்தினைப் பெறாமையினாலேயே "இராச ராச சோழன் காலத்தில் சாதிகளே இல்லை" என்று புலவர் செந்தலை ந. கவுதமன் கூறுவார். உண்மை அவ்வாறிருக்க இராசராச சோழன் தேவர் சாதியினைச் சேர்ந்தவர் என கல்வெட்டு அறிஞர்(?) நாகசாமி கூறுவது வழமையான அவரது நஞ்சுக்கருத்தே. உண்மையில் முத்துராமலிங்கத்தேவர் காலத்திற்குப் பின்னரே தேவர் என்ற சாதியே தோற்றம் பெறுகின்றது. முக்குலத்தோர் என்பதுகூட ஏற்கனவே கூறிய மூன்று குடிகளை (பின்நாளில் சாதியாக்கப்பட்ட) ஒன்றாக்கிப் பின்நாட்களில் ஏற்படுத்திய ஒன்றே. சாதியமைப்பானது ஒரளவிற்கு முழுவளர்ச்சியைப் பெற்றது ஏறத்தாழ ஒரு 800 ஆண்டுகளிற்கு முன்னர்தான்.

**'யார் தமிழன்' என சாதி அடையாளம் காட்டுமா?**

தமிழ்த் தேசியம் பேசுவோரில் சிலர் இப்போது தமிழன் யார் எனக் கண்டுபிடிக்கும் ஒரு கருவியாக, சாதியினைப் பயன்படுத்த முனையும் போக்கு அண்மைக் காலமாகக் காணப்படுகின்றது. இது முற்றிலும் நகைப்பிற்கிடமானது; ஏனெனில் சாதியே தமிழருக்கு ஒரு வந்தேறிப் பண்பாடாகக் காணப்பட, எவ்வாறு சாதியைக் கொண்டு தமிழரைக் கண்டுபிடிப்பது? வேண்டுமென்றால் ஒன்று உறுதியாகக் கூறலாம்; அதாவது யாரெல்லாம் சாதி பார்க்கின்றார்களோ, அவர்கள் எல்லாம் தூய தமிழர்கள் (ஏன் மனிதர்களே) அல்ல {இதற்கான சான்றுகள் நிறையவே மேலே ஏற்கனவே கூறப்பட்டுள்ளன}. இங்கு குடிகளை மீட்டு எடுக்கின்றோம் என ஒரு குழு கிளம்பியுள்ளது; அதுவும் ஒரு வகையிலான சாதிக்கு முட்டுக் கொடுக்கும் வேலையே. பழந் தமிழர்களின் திணை சார் வாழ்வு நிலையிலிருந்து நாம் இன்று நகர வாழ்விற்குத் திரும்பிவிட்டோம். இன்றைய நிலையில் பழைய 'குடிகள்' தேவையில்லை. மேலும் பழங்கால குடிகள், நாம் ஏற்கனவே பார்த்தது போன்று அகமண முறை சார்ந்ததல்ல; ஆனால் இன்று குடிகளை மீட்டெடுக்க விரும்புவோர் கடைப்பிடிப்பது அகமண முறையே. எனவே இன்று இத்தகைய குடி-மீட்பு' முயற்சி எல்லாம் சாதிக் கட்டுமானத்தை மேலும் இறுக்குவதிலேயே போய் முடியும்.

## சாதி ஒழிப்பு:

சாதி அறம் சார்ந்த ஒன்றல்ல, மேலும் அது தமிழர்களின் மரபுமன்று. எனவே சாதி ஒழிக்கப்படவேண்டிய ஒன்றாகும். சாதி முறையினை இன்று தாங்கிப் பிடித்திருக்கும் நான்கு தூண்களாக சொந்தச் சாதிப்பற்று, மத நம்பிக்கை, பிறப்பிலடிப்படையிலான தொழில், அகமண முறை என்பன காணப்படுகின்றன. இதில் முதலாவதாக தாழ்த்தும் சாதியினரோ அல்லது தாழ்த்தப்படும் சாதியினரோ தமது சாதிப் பற்றினை விட்டொழிக்கவேண்டும் (அதேவேளை தாழ்த்தப்பட்டோர் ஒடுக்குமுறைக்கு எதிராக ஒன்றிணைவது தவறன்று, அதேவேளை தாமும் ஒரு காலத்தில் ஆண்டசாதி எனக் கூறுவது தவறானது). இரண்டாவதாக சாதி முறையினை வலியுறுத்தும் எந்த மதக்கோட்பாடும் கேள்விக்கு உள்ளாக்கப்பட வேண்டும். மூன்றவதாக, பிறப்பிலடிப்படையிலான தொழில் செய்வதனை முடியுமானவரைத் தவிர்த்து, எத் தொழில் விருப்பமானதோ / எதில் திறமையுள்ளதோ, அதனையே செய்ய வேண்டும். இறுதியாக, புறமண முறை ஊக்குவிக்கப்பட வேண்டும். அதாவது சொந்தச் சாதி பார்த்து திருமணங்கள் செய்வதனைத் தவிர்க்கவேண்டும். இப் புறமண முறையானது ஈழப்போரின் போது, விடுதலைப் புலிப் போராளிகளிடையே பெருமளவிற்குக் கடைப்பிடிக்கப்பட்டு, அப்போது சாதியானது போராளிகள் மட்டத்திலாவது பெருமளவிற்கு ஒழிக்கப்பட்டிருந்தது. எனவே புறமண முறையே சாதி முறைக்கான சாவு மணியாக அமையும்.

## பறவைகளில் சாதி:

மனிதர்களிடம் சாதியினை எவ்வாறு திணித்தார்களோ, அதே போன்று பறவைகளின் பெயர்களில் கூடச் சாதியினை இடைச் செருகினார்கள். பருந்துகளில் காணப்பட்ட இரு வகைகளை நிறங்களைக் கொண்டு – செம் பருந்து, கரும் பருந்து என – வகைப்படுத்தியிருந்தார்கள். இப் பெயர்களே பிற்காலத்தில், செம்பருந்து என்ற அழகிய தமிழ்ப் பெயர், 'பார்ப்பனப் பருந்தாகி'யது; கரும்பருந்து என்ற பெயர், 'பறைப் பருந்தாக' மாறியது (மாற்றப்பட்டன). தமிழகத்தில் பறவைகள் உள்ளிட்ட உயிரினங் களுக்கு வட்டாரத்திற்கேற்ப பல பெயர்கள் வழங்கப் பெறுகின்றன. 'பறைப் பருந்து', 'பார்ப்பனப் பருந்து' போன்ற பெயர்கள் வடமொழி ஆதிக்கத்தால் விளைந்தவை என்றும், இவை இடைக்காலத்தில் நுழைக்கப்பட்டிருக்கலாம் என்றும் தமிழிலக்கியத்தில் பாடப் பெற்றுள்ள உயிரினங்கள் குறித்துப் பல நூல்களை எழுதியுள்ள தமிழறிஞர் பி.எல்.சாமி கூறுகிறார். தமிழகத்திற்கு ஆங்கிலேயர்கள் வந்து, இப் பருந்தின் பெயர்களை ஆங்கிலமாக்க முனையும்போது; அப்போது

உயர் பொறுப்புகளிலிருந்த பார்ப்பன அரச அலுவலகர்களால் இவ்விரண்டு பறவைகளின் ஆங்கிலப் பெயர்களை, 'Pariah Kite' (கரும்பருந்து), 'Brahminy Kite' (செம்பருந்து) என மாற்றி விட்டனர். ஆங்கிலத்திலும் சாதியினைப் புகுத்திவிட்டார்கள். இவர்களின் இந்தத் திருவிளையாடல்களை அயோத்திதாசப் பண்டிதர் பின்வருமாறு கூறுவார்.

> "நம்முடைய பிராமணவேசங்களும் நிலைத்து சுகமடையலாம் என்று எண்ணி பிராமணர்களும், இத்தேச சிற்றரசர்களுக்கும், கருப்பாக இருக்கும் பருந்தைப், 'பறைப் பருந்தென்றும்' [கரும்பருந்து – Black Kite] வெண்மையாயிருக்கும் பருந்தைப், 'பாப்பாரப் பருந்தென்றும்' [செம்பருந்து – Brahmini Kite] கருப்பாக இருக்கும் மைனாவைப் 'பறை மயினாவென்றும்', கருப்பாக இருக்கும் பாம்பைப் 'பறைப் பாம்பு' என்றும், வெண்மையாய் இருக்கும் பாம்பைப் 'பாப்பாரப் பாம்பு' என்றும் சொல்லி வரும்படியானக் கற்பனையில் விழுந்து பார்ப்பானென்னும் மொழியையும், பறையன் என்னும் மொழியையும் பரவச்செய்து வந்தார்கள். அவர்கள் கற்பித்துள்ளவாறு கறுப்பாயிருக்கும் நாயைப் பறை நாயென்றும், வெண்மெயாயிருக்கும் நாயைப் பாப்பார நாயென்று வழங்கினால் அம்மொழி தங்களை இழிவுபடுத்தும் என்று கருதி பறை நாயென்னும் மொழியை மட்டிலும் பரவச் செய்து திராவிட பௌத்தர்களை இழிவுபடுத்தி வந்தார்கள்"

இங்கு வேடிக்கை என்னவெனில் திராவிட பவுத்தர்களையே இழிவுபடுத்த 'பறை நாய்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டதாக அயோத்திதாசர் கூற; பவுத்த சிங்களவர்களோ அதே சொல்லினைப் பயன்படுத்தி இன்று ஈழத் தமிழர்களை ஏளனம் செய்கின்றார்கள். தமிழர்களும் தங்களிற்குள் ஒரு வசைச் சொல்லாக இதனையே பயன்படுத்துவது வேறு தொடர்கின்றது. இவ்வாறு 'பறை நாய்' என்ற சொல் எவ்வாறு எல்லோரையும் (பார்ப்பனரல்லாத) தாழ்த்துகின்றது எனத் தெரியாமல், நாம் எல்லோரும் பயன்படுத்துகின்றமோ; அதே போன்றே 'சாதி' என்ற சொல்லும் எம் எல்லோரையும் இழிவுபடுத்துகின்றது எனத் தெரியாமல், எல்லோராலும் சாதி தூக்கித் திரியப்படுகின்றது.

## தமிழ் எழுத்துகளிடையே சாதி (திணிப்பு):

மனிதர்களிற்கிடேயே சாதியினை ஏற்படுத்தியவர்கள், தமிழ் எழுத்துகளையும் விட்டுவைக்கவில்லை. 'பன்னிரு பாட்டியல்' என்ற பிற்கால இலக்கணநூல் எழுத்துகளை பிராமண எழுத்து, சத்திரிய

எழுத்து, வைசீய எழுத்து, சூத்திர எழுத்து எனப் பிரித்து; தமிழின் சிறப்பான “ழ” வை சூத்திர எழுத்தில் வைத்துள்ளது. தமிழ் என்ற சொல்லுக்கும், தமிழ் என்ற சொல்லின் தோற்றுவாயான அமிழ்து என்ற சொல்லுக்கும் அடிப்படையான ‘ழ’ என்ற எழுத்தை எவ்வாறு தாழ்த்தியுள்ளார்கள் பார்த்தீர்களா! தமிழர்களைச் சூத்திரர்கள் என்று சொன்னபோதே கொதித்தெழாதவர்கள், தமிழ் எழுத்துகளைச் சூத்திர எழுத்துகள் எனும் போதா கொதித்தெழப் போகின்றார்கள் என்று எண்ணியிருப்பார்கள் போலும்.

பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக நம்பப்படும் இப் பிற்கால இலக்கண நூலான ‘பன்னிரு பாட்டியல்’ நூலானது அகத்தியர், இந்திரகாளியம் என்ற பல புரளிகளிலிருந்து தொகுக்கப்பட்டதாகக் கூறி, சதுர் வர்ணக் கோட்பாட்டினை வலியுறுத்துவதற்காக உருவாக்கப்பட்ட ஒரு நூலாகும். இந்த நூலைத் தொகுத்தவர் பெயர் அறியப்படவில்லை. பல நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட பாடல்களைத் தொகுத்து உருவாக்கப்பட்ட இந்த நூலானது மனிதர்களில் மட்டுமல்லாமல் எழுத்துகளிலும் சாதியினை வலியுறுத்துகின்றது. எடுத்துக்காட்டாகப் பின்வரும் பாடலைப் பாருங்கள்.

“நால்வகை வருணத் தோர்க்கு நால்வகை
யியம்பு மெழுத்தை யியம்புவர் முதன்மொழி
மற்றவை மயங்கினும் வரையா ராண்டே” (12)

“மக்கட் சதி நான்கிற்கும் வகுத்த
தத்தஞ் சாதி யெழுத்தே யவரவர்க்கு
வைத்துமுன் னெடுப்பி னதுமாண் புடைத்தே
மயங்கினும் வரையார் பயன்பட வரினே” (18)

இந்த நூல் குறிப்பிடும் எழுத்துகளின் வர்ணப் பாகுபாடு வருமாறு.

பார்ப்பன வர்ணம் – பன்னீருயிரும் (அ – ஔ) முதலாறு மெய்யும் (க், ங், ச், ஞ், ட், ண்).

சத்திரிய வர்ணம் – த், ந், ப், ம், ய், ர் (அடுத்த ஆறு மெய்கள்).

வைசிய வர்ணம் – ல், வ், ற், ன்.

சூத்திர வர்ணம் – ழ், ள்.

உயிர் மெய் எழுத்துகளைப் பொருத்தவரை சேரும் மெய் எழுத்தினைப் பொருத்து சாதி அமையுமாம். எடுத்துக்காட்டாக, ‘க’ (க்+அ) பார்ப்பன வர்ணமாகவும், ‘ழ’ (ழ்+அ) சூத்திர வர்ணமும் ஆகும். ‘ழ, ள’ என்பன சூத்திர எழுத்துக்களாம். இதிலும் ஓர் உண்மை விளங்குகின்றது. தமிழ் மொழிக்கே சிறப்பாகவுள்ள ழ, ற, ன என்ற

மூன்றெழுத்துகளில் 'ழ','ள' என்பன சூத்திர எழுத்துகளாகவும், 'ன' வைசீக எழுத்தாகவும் வகைப்படுத்தப்பட்டிருப்பதனைக் காணலாம். 'ழ' என்ற தமிழ்ச் சிறப்பு எழுத்து வேறு எந்த மொழியிலும் இல்லாதது. மேலும் தமிழுக்கே சிறப்பாகத் தனி எழுத்தாகவுள்ள 'ற' 'ழ' வடமொழியில் இல்லை. இவற்றினை வடமொழியில் உள்வாங்க முடியாதமையாலேயே, அவற்றினைச் சூத்திர/வைசீய எழுத்தாக இழிவுபடுத்தினார்கள்.

## ஆண்டுகளில் சாதி:

சித்திரையினைப் புத்தாண்டாகக் கருதுபவர்கள், அந்த அறுபது ஆண்டுகளுக்கும் வடமொழிப் பெயர்களை வைத்திருக்கின்றார்கள். அவற்றில் கூடச் சாதிப் பாகுபாடு உண்டு. குறிப்பாக இப்போது நடக்கும் சார்வரி ஆண்டு ஒரு சூத்திர ஆண்டாம். இவ்வாறு 15 ஆண்டுகள்: **விளம்பி, விகாரி, சார்வரி, பிலவ, குரோதி, பிலவங்க, கீலக, விரோதகிருது, பரிதாபி, ராட்சச, துன்மதி, ரக்தாக்ஷி, குரோதன, விரோதி, துன்முகி** ஆகியவை சூத்திர ஆண்டுகளாம்.

முடிவாகப் பார்த்தீர்களானால், மனிதர்களிடையே மட்டுமன்றி, வேறு வடிவங்களில் கூடச் சாதியினை நிலை நாட்ட முனைந்துள்ளமையினைக் காணலாம்.

## ஐந்தாம் படலத்தின் பிழிவு:

இப் படலத்தில் சங்க காலத்தில் சாதிகள் இல்லை என்பதனை தொல்லியல், இலக்கியச் சான்றுகளைக் கொண்டு பார்த்தோம். சங்க காலப் பாடல்களில் பொருள் கோடல் வேறுபாடுகளையும், குடி - சாதி வேறுபாட்டினையும் பார்த்தோம். மனிதர்களில் மட்டுமன்றி; பறவைகள் + விலங்குகள் என்பவற்றிலும், தமிழ் எழுத்துகளிலும் கூட எவ்வாறு சாதியினைப் புகுத்தினார்கள் எனவும் பார்த்தோம். சாதி என்பது தமிழரின் மரபுமன்று, மனிதப் பண்புமன்று.

## துணை நின்ற நூல்கள்


- அறியப்படாத தமிழ்மொழி – இரவி சங்கர் கண்ணபிரான்.
- சங்க இலக்கியம் கவிதையும் கருத்தும் – பேரா. கா. சிவத்தம்பி.
- சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம் – சாமி, பி.எல்.
- அயோத்திதாசப் பண்டிதர் சிந்தனைகள் முதல் தொகுதி – ஞான. அலாய்சிஸ்.


– நிறைவு –

குறிப்பு

இந்த நூல் இத்துடன் நிறைவுறுகின்றது. இது பற்றி உங்களுக்குக் கருத்துகள் இருப்பின், பின்வரும் மின்னஞ்சலிற்குத் தெரிவிக்கவும். kugan197@yahoo.co.uk

இந்த நூலின் பின் இணைப்பாகச் சில கட்டுரைகள் இணைக்கப்பட்டுள்ளன. உங்களது பார்வைக்கு நன்றி.
வணக்கம்.

# பின்னிணைப்பு

## கட்டுரைகள்

①

## தமிழ் மொழி வரலாற்றில் ஈழத்தின் பங்களிப்பு

**பொ**துவாகத் தமிழ் மொழி வரலாற்றில் மொழி வளர்ச்சிக்கான பங்களிப்புப் பற்றிப் பேசப்படும் போதெல்லாம் தமிழகத்தை மட்டுமே கவனத்திற் கொண்டு பேசப்படும் ஒரு நடைமுறையே காணப்படுகின்றது. உண்மையில் ஈழமும் தமிழ் மொழி வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்களவு பங்கினை வகித்துள்ளது. அத்தகைய அதிகம் பேசப்படாத ஈழத்தின் பங்களிப்புப் பற்றிய ஒரு பார்வையாகவே இக் கட்டுரை அமைந்துள்ளது.

### சங்க காலத்தில் ஈழத்தின் தமிழ்ப் பங்களிப்பு

சங்க இலக்கியங்களிற்கே ஈழத்தைச் சேர்ந்த சங்ககாலப் புலவரான 'ஈழத்துப் பூதன்தேவனார்' என்பவர் பங்களிப்புச் செய்துள்ளார். அகநானூறு 88, 231, 307, குறுந்தொகை 189, 343, 360, நற்றிணை 366 ஆகிய ஏழு பாடல்களை இவர் பாடியுள்ளார். இவரது பாடல்கள் மன்னர்களின் பெருமைகளை மட்டும் பேசுவதாக அல்லாமல்; பாலை, குறிஞ்சி போன்ற திணைகளையும், வானியலையும், விலங்கினங்களையும் குறித்து இருப்பது; இவரது பாடல்களின் சிறப்பியல்பாகவும், இவரது ஈழத்து இருப்பிடத்தையும் சான்றுப்படுத்துவதாகவுள்ளது. அகநானூற்றுச் செய்யுளில் இவர் பசும்பூண் பாண்டியனை பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> "செல்சமங்கடந்த செல்லா நல்லிசை
> விசும்புஇவர் வெண்குடைப் பசும்பூண் பாண்டியன்
> பாடுபெறு சிறப்பிற் கூடல்" (அகம்.231: 10–13)

இப் பாடலைக்கொண்டு ஈழத்துப் பூதன்தேவனாரின் காலத்தை பொது ஆண்டு 2ம் நூற்றாண்டு (CE 2nd cent) எனக் கணிக்கலாம் (பசும்பூண் பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனுக்கு

முன்பு இருந்த அரசன்). மேலும் பொது ஆண்டுக்கு முற்பட்ட காலத்திலேயே ‘தமிழி’ எழுத்துக்கள் ஈழத்தில் கிடைத்துள்ளன. இலங்கை திசமகாராமையில் அகழ்வில் கண்டுபிடிக்கப்பட்ட கறுப்பு சிகப்பு மட்பாண்டத்தில் காணப்பட்ட எழுத்துக்கள் (BCE 2nd cent) காலத்தைச் சேர்ந்ததாக செருமனிய அறிவியலாளர் குறிப்பிடுகின்றார். மேலும் இலங்கை அறிஞர்கள் பரணவிதான கருணாரத்னா, பெர்ணான்டோ, மற்றும் அபயசிங்கி ஆகியோர் அசோகர் பிராமிக்கு முன்பே, பண்டைய தமிழி எழுத்து, தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு வந்துவிட்டது என்ற கருத்தைத் தெரிவித்துள்ளனர்.

“ஈழத்து உணவும்
காழகத்து ஆக்கமும்...”

எனப் பட்டினப்பாலை பாடுகின்றது .

இலங்குவதால் ‘இலங்கை’ என்ற பெயரும், தமிழ்நாட்டிலிருந்து கீழே இறங்கியிருப்பதால் ‘ஈழம்‘ என்ற பெயரும் ஏற்பட்டதாகவும், இலங்கை, ஈழம் ஆகிய சொற்கள், சங்கத் தமிழ்ச் சொற்களாகக் காணப்படுவதாகவும் அறிஞர்கள் கூறுவதும் கவனத்திற்கொள்ளத் தக்கது. மேலே கூறப்பட்ட சங்க கால ஈழத் தொடர்புகள், சங்க காலத்திலிருந்தே ஈழம் தமிழ் மொழிக்கு ஆற்றிய பங்களிப்புகளிற்குச் சான்றாக அமைந்துள்ளன. இன்று தமிழகத்தில் கூடப் பெருமளவிற்குப் பயன்பாட்டில் இல்லாத பல சங்க கால தமிழ்ச் சொற்கள் (கமம், வெளிக்கிடு, வளவு, திகதி (திகழ்தி), உவன்...) இன்றும் ஈழத்தில் பொதுப் பயன்பாட்டிலிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

**மணிமேகலையில் ஈழம்**

இரட்டைக் காப்பியங்களில் ஒன்றாகவும், ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றாகவும் கருதப்படும் மணிமேகலை ஈழத்திலுள்ள சில ஊர்களைக் குறிப்பிட்டிருப்பதும் கவனிக்கத்தக்கது. மணிமேகலை ஈழத்தில் பாதை தெரியாமல் அலைந்த இடம் அனலைத் தீவு எனவும், பீடீகை கண்டு பிறப்புணர்ந்த இடம் தற்போதைய நயினாத் தீவு (மணிபல்லவத் தீவு) எனவும், அட்சயபாத்திரம் பெற்ற இடம் தற்போதைய கந்தரோடை (தீவதிலகை) எனவும் அறிஞர்களால் கூறப்படுவது குறிப்பிடத்தக்கது.

**அகரமுதலி – நிகண்டு பங்களிப்பு**

ஒரு மொழியின் வளர்ச்சியில் அகரமுதலி/அகராதி என்பது சிறப்பிடம் பெறும். இந்த வகையில் தமிழ் அகரமுதலிகளிற்கு முற்பட்டவை நிகண்டுகள். இங்கு நிகண்டு என்பது ஒரு சொல்லின் ஒத்த சொல்லைத் தருவதாகக் காணப்பட, அகரமுதலி என்பது ஒரு சொல்லிற்கான விளக்கத்தைத் தருவதாக அமையும். பல்வேறு நிகண்டுகளில் ‘நீரரர் நிகண்டு’ என்பது ஈழத்தமிழரான

க. தா. செல்வராசகோபால் (ஈழத்துப் பூராடனார்) என்பவரால் எழுதப்பட்டது. இந்த ஈழத்துப் பூராடனார் தமிழ்மொழி, கலை தொடர்பாக 250 இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நீரரர் நிகண்டு ஒப்பீட்டுரீதியில் குறைந்தளவு வடமொழிச் சொற்களையும், பெருமளவிற்குத் தமிழ்ச் சொற்களையும் கொண்டுள்ள மிகச் சில நிகண்டுகளில் ஒன்றாகும். அகரமுதலிகளைப் பொறுத்தவரையில் 'பெயரகராதி' – யாழ்ப்பாண நூற் கழகம் (1842), 'மானிப்பாய் அகராதி' – யாழ்ப்பாணம் அ. சந்திரசேகர பண்டிதர், சரவணமுத்துப் பிள்ளை (1842), 'ஆங்கில தமிழ் அகராதி' – அமெரிக்கன் மிசன் யாழ்ப்பாணம் (1852), 'தமிழ்ப் பேரகராதி' – யாழ்ப்பாணம் நா. கதிரவேற்பிள்ளை (1899) என்பவை ஈழத்தமிழர்களின் ஆக்கங்களாகும். இவற்றுக்கிடையே கதிரவேற்பிள்ளையின் தமிழ்ப் பேரகராதி பல்வேறு படிமலர்ச்சிகளைக் கண்டு தமிழ்மொழியில் முதன்மையானதாக விளங்குகின்றது.

**தமிழ்ப்பதிப்புலகில் ஈழத்து முன்னோடிகள்**

பழந் தமிழ் நூல்களை ஒலைச் சுவடிகளிலிருந்து அச்சுப்பதிப்பில் கொண்டு வந்து கால காலத்திற்கும் கிடைக்கச் செய்தமை அரும் பெரும் தமிழ்த் தொண்டாகும். இச் சேவையினைக் குறிக்கும் போதெல்லாம் பெருமளவிற்குப் பேசப்படுபவர் தமிழகத்தைச் சேர்ந்த "தமிழ் தாத்தா" என்று அழைக்கப்படும் உ.வே.சா ஆவார். இவரைப் போன்றே ஈழத்திலிருந்தும் சி.வை.தா, நாவலர் ஆகிய இருவரும் ஒலைச்சுவடிகளை தமிழ் அச்சுப்பதிப்பில் நூல்களாகக் கொண்டுவருவதில் பெரும் பங்காற்றியுள்ளார்கள். தமிழ்ப் பதிப்புத்துறையின் முன்னோடியான சி.வை.தா (சி. வை. தாமோதரம்பிள்ளை) 1853 ஆம் ஆண்டு நீதிநெறி விளக்கம் என்னும் ஒழுக்க நெறி சார்ந்த தமிழ் நூலொன்றைப் பதிப்பித்ததன் மூலம் நூல் வெளியீட்டுத் துறையில் காலடி எடுத்துவைத்தார். இவரது அரும்பணி என்பது தொல்காப்பியப் பொருளதிகாரத்தைக் கடும் உழைப்பில் தேடி எடுத்துப் பதிப்பித்தமையாகும். பாண்டிய மன்னன் கைகளுக்கே அகப்படாததாக, அன்று இழக்கப்பட்டதாய்க் கருதப்பட்டு வந்த, தொல்காப்பியப் பொருளதிகாரத்தைப் பதிப்பித்தமை ஒரு பெருஞ் செயலேயாகும். இவரது உழைப்பு இல்லாதிருக்குமாயின் தொல்காப்பிய பொருளதிகாரம் எமக்குக் கிடைக்காமலே போயிருக்கக்கூடும். பின்னரான காலப்பகுதியில் தொல்காப்பிய வல்லுநரான தமிழறிஞர் முதுமுனைவர் புலவர். இரா. இளங்குமரனார் தொல்காப்பிய பொருளதிகாரத்தைத் தமிழகத்தில் எங்கும் தேடிக் கிடைக்காமல், ஈழத்திற்கு வந்து சுண்ணாகம் திருமகள் அழுத்தகத்திலேயே பெற்றுப் பின் தமிழகம் கொண்டுபோய்ச் சேர்த்துள்ளார். மேலும் சி.வை.தா சூளாமணி,

வீரசோழியம், இறையனார் அகப்பொருள், தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்கான நச்சினார்க்கினியருரை, தொல்காப்பிய எழுத்திகாரத்திற்கான நச்சினார்க்கினியருரை, கலித்தொகை, இலக்கண விளக்கம், திருத்தணிகைப் புராணம் ஆகிய தொன்மையான தமிழ் இலக்கியங்களையும் பதிப்பித்திருந்தார். அத்துடன் சொந்தமாகவும் பல நூல்களை (கட்டளைக் கலித்துறை, வசன சூளாமணி, ஆறாம் வாசகப் புத்தகம், ஏழாம் வாசகப் புத்தகம்...) எழுதியும் தமிழிற்குத் தொண்டாற்றியிருந்தார். ஈழத்தைச் சேர்ந்த ஆறுமுக நாவலர் என்பவரும் தமிழ்ப் பதிப்புலக முன்னோடிகளில் ஒருவர். இவர் தமிழகம், ஈழம் ஆகிய இரு தமிழ் நிலங்களிலுமே பதிப்பகப் பணியினை மேற்கொண்டிருந்தார். இவர் பல தமிழ் நூல்களைப் பதிப்பிருந்தபோதும் அவற்றினுள் திருக்குறள் பரிமேலழகருரை, நன்னூற் காண்டிகை, திருமுருகாற்றுப்படை போன்ற இலக்கிய – இலக்கண நூல்களும்; திருவிளையாடல் புராணம், பெரியபுராணம், திருவாசகம்போன்ற மத நூல்களும் முதன்மையானவை (இவை பிழையின்றிப் பதிப்பிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது). பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்த முன்னோடிகள் மூவரில் இருவர் ஈழத்தைச் சேர்ந்தவர்களாகவிருப்பது ஈழத்தின் பதிப்புலகப் பங்களிப்பினை எடுத்துக்காட்டுவதாகவுள்ளது.

## உலகத் தமிழாராய்ச்சி மாநாடு

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டினை தொடக்கி அதன் முதல் நான்கு மாநாடுகளை வெற்றிகரமாக நடாத்தி முடித்தவர் தனிநாயகம் அடிகள் (Rev. Xavier S. Thani Nayagam) என்ற ஈழத் தமிழராவார். முதல் மாநாடு கோலாலம்பூரிலும், இரண்டாவதனை சென்னையிலும், மூன்றாவதனை பாரிசிலும் (பிரான்சிலும்) மிகச் சிறப்பாக நடாத்தி முடித்திருந்தார். நான்காவது மாநாட்டினை யாழ்ப்பாணத்தில் நடாத்த பெருமளவில் ஏற்பாடும் செய்து முடித்திருந்தார். மாநாடும் கருத்தரங்குகளும் நிறைவேறிய மறுநாள், தை 10 ஆம் நாள், பரிசளிப்பும் விருந்தினருக்கு பாராட்டு நிகழ்வுகளும் செய்ய ஒழுங்கான பொதுக்கூட்டத்தில் சிங்கள காவல்துறையினரும் குண்டர்களும் பொதுமக்களைத் தாக்கியதில் 11 பேர் கொல்லப்பட்டனர். இந்த இன்னலினை மனதிற் சுமந்திருந்த அடிகளார் சிறிது காலத்திலேயே நோய்வாய்ப்பட்டு இறந்திருந்தார். அதற்குப் பின் 6 உலகத் தமிழர் மாநாடுகள் நடைபெற்ற போதும், அவை எதுவுமே முதல் நான்கு மாநாடுகள் அளவிற்குச் சிறப்பாக அமையவில்லை. இதிலிருந்து முதல் நான்கு மாநாடுகளை நடாத்துவதில் அடிகளார் காட்டிய அளப் பெரும் உழைப்பினையும், அவரது ஆளுமைத் திறனையும் அறிந்து கொள்ளலாம். அடிகளார் ‘தமிழ்ப் பண்பாட்டுக் கழகம்’ (Academy of Tamil Culture), ‘உலகத் தமிழாராய்ச்சிக் கழகம்’

(International Association for Tamil Research, IATR) என்பவற்றையும் தோற்றுவித்திருந்தார். மேலும் பல்வேறு இதழ்கள், புத்தகங்கள் மூலம் தமிழ்மொழியின் சிறப்புக்களை முதன்முதலில் ஐரோப்பியர்களிடம் ஐரோப்பாவிற்கே கொண்டுபோய்ச் சேர்ந்த பெருமை அடிகளாரையே சேரும் மேற்கூறிய வகைகளில் ஈழமும் சங்க காலம் முதல் இன்று வரை தமிழிற்கு அரிய பங்களிப்பினை வழங்கியே வந்துள்ளது. இன்றைய நிலையில் தமிழகம், ஈழம் என்பவற்றையும் தாண்டி, தமிழ்மொழிக்கான பங்களிப்பு உலகளாவியரீதியில் காணப்படுகின்றமை நாம் எல்லாம் பெருமைப்படவேண்டிய ஒரு விடயமாகவேயுள்ளது.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்'

◆◆◆◆◆

②

## மதியம் என்ற சொல்லின் பொருள்

**பொ**துவாகவே 'மதியம்' என்றால் நண்பகல் என்றே பலரும் நினைக்கின்றோம். உண்மையில் தமிழில் மதியம் (மதி{நிலா}+அம்) என்பது நிலவுடனான இரவினையே குறிக்கும். இதற்குச் சங்கத் தமிழிலேயே சான்று உண்டு. மதுரை வேளாதத்தன் என்ற சங்க காலப்புலவர் குறுந்தொகை (315) இல் பின்வருமாறு பாடுகின்றார்.

"எழுதரு மதியங் கடற்கண் டாஅங்
கொழுகுவெள் ளருவி யோங்குமலை நாடன்
ஞாயி றனையன் றோழி
நெருஞ்சி யனையவென் பெரும்பணைத் தோளே"

இங்குள்ள மதியம் என்ற சொல்லுக்குப் 'பிறைத் திங்கள்' என்றே பொருள் கொள்ளப்படுகின்றது. சங்க காலம் எல்லாம் மிகவும் பழையது என்று நினைத்தால் இதோ திருவாசகத்திலிருந்து இன்னொரு சான்று.

"கொன்றை மதியமும், கூவிளம், மத்தமும்,
துன்றிய சென்னியர் அன்னே என்னும் ! ..."

(மாணிக்க வாசகர்)

திருநாவுக்கரசர் பாடிய ஒரு தேவாரப்பாடல் இதோ.

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்"

(மாலைமதியம் = மாலைநேரத்தில் தோன்றும் முழுமதி).

அவ்வாறாயின் பின் எவ்வாறு மதியம் என்பது நண்பகல் என மாறியது என வியக்கிறீர்களா?

விடை – தமிழ் மறைப்பு - தமிழ்ச் சிதைப்பு.

அதாவது மத்தியானம் என்ற சமற்கிரதச் சொல் தமிழில் திணிக்கப்பட்ட விளைவே அது. முதலில் மத்தியானம் என்ற சொல் திணிக்கப்பட்டு, பின்னர் மதியம் என்ற சொல்லின் பொருள் மறைக்கப்பட்டு, இறுதியாக மத்தியானத்தின் சுருக்கமே மதியம் என முடிக்கப்பட்டது. தமிழனோ வழமைபோல பூம்பூம் மாடு போல தலையாட்டியதன் விளைவே இது.

குறிப்பு – இன்றும் தமிழகத்தின் சில ஊர்ப்புறங்களில் மதியம் என்பது முழுநிலா நாளையே (நிறைமதி – Full moon day) குறிக்கின்றது.


‘விழித்தெழுவோம், முடியுமானவரை கிரந்தம் தவிர்த்து தமிழ் புழங்குவோம்’

◆◆◆◆◆

③

## தமிழ் எண்கள்

**த**மிழ் எண்கள் எனப் பலரும் நினைத்துக்கொண்டிருப்பவை (க,உ,ங,....என்பவை) ‘தமிழ் எண்கள் அல்ல’ என்பது பலருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. தமிழ் மணிக்கூடு, தமிழ் இலக்கத் தகடு என நாம் எண்ணியிருப்பவையும் தமிழேயல்ல. இவையெல்லாம் கிரந்த எண்கள். அவற்றுக்கான தமிழ் எண்களினைக் காண ‘படம்’ பார்க்குக.



‘1’ இனை எடுத்தால் தமிழில் ஒன்று என்கின்றோம். அதனால் ‘ஒ’ என்பதே பொருத்தம் (இதற்கான Unicode form இல்லை). 1 கிரந்தத்தில் ஏக் (ek), அதனிலிருந்த இரண்டாவது எழுத்து (க்) புள்ளி நீக்கி ‘க’ என்று மாற்றிவிட்டனர். 1 = ஒன்று சரியா / 1 = ஏக் சரியா என முடிவெடுங்கள். இவ்வாறு ஒவ்வொரு எண்களாகப் பாருங்கள். எந்த எண்கள் தமிழ் எண்கள்?

‘க,உ,ங,...’ தமிழ் எண்களல்ல, அவற்றுக்குரிய தமிழ் எண்கள் உள்ளபோதும் அதற்கான Unicode இல்லை. 1, 2, 3 என்பன அனைத்துலக நடைமுறைகளுடன் ஒத்துவருவதனால் அதனையே பயன்படுத்துவோம். எடுத்துக்காட்டாக வண்டிக்கான இலக்கத்தகடு எல்லோராலும் படித்து இலகுவாக, உடனடியாக விளங்கிக்கொள்ளக் கூடியவகையிலேயே இருக்கவேண்டும். அதில் போய் தமிழ் என்று எண்ணி கிரந்த எண்களை ஏன் சுமக்கவேண்டும்.

‘கிரந்த ஒட்டுண்ணி எண்களைத் தவிர்ப்போம்’

◆◆◆◆◆

④

# எண்களைக் குறிக்கும் சொற்கள் காட்டும் மொழியின் தொன்மை

**7,8** இற்கு அடுத்தது ஏன் ஒன்பது? (ஏன் ஒன்பு /ஒண்பு என இல்லை?)
70,80 இற்கு அடுத்தது ஏன் தொண்ணூறு? (ஏன் ஒன்பது இல்லை?)
700, 800 இற்கு அடுத்தது ஏன் தொள்ளாயிரம்? (ஏன் தொண்ணூறு இல்லை?)

இந்தக் குழப்பம் பலருக்கும் இருந்திருக்கும். எழுபது, எண்பது அடுத்தது ஒன்பது என்ற சொல்தானே பொருத்தம் என நான் சிறுவயதில் எண்ணியிருக்கின்றேன். இந்தக் கேள்விக்கு விகடனில் KRS என்பவர் ரோமன் இலக்கத்துடன் தொடர்புபடுத்தி விளக்கியிருந்தார். அதாவது vii, viii இற்கு அடுத்தது ix (viiii அல்ல). LXX, LXXX அடுத்தது XC {LXXXX அல்ல}. இதுவே தமிழுக்கும் அடிப்படை என்று கூறியிருந்தார். இதனைப் படித்த போது எனது சிந்தனைகள் சற்று விரிந்தது. நாம் இப்போது பயன்படுத்துகின்ற எண்கள் (அரேபிய எண்கள்) ஆன 1,2,3... என்பவை பொது ஆண்டு 5ம் நூற்றாண்டைச் (CE 5th cent) சேர்ந்தவை. உரோமன் எண்களோ பொது ஆண்டிற்கு முற்பட்ட (BCE) உரோமப் பேரரசு

காலத்தைச் சேர்ந்தவை. எனவே ஒரு மொழியின் தொன்மையினை அறிய, அந்த எண்கள் குறித்த மொழிச் சொற்களில் உரோமன் நடைமுறையினைப் பின்பற்றியுள்ளதா எனப் பார்க்கவேண்டும். ஆம், எனில் அது தொன்மையான மொழி எனத் துணியலாம். இப்போது ஆங்கிலத்தை எடுப்போம்.

– Seven, Eight, next Nine.

– Seventy, Eighty, next Ninety.

இங்கு உரோமன் முறை பொருந்துகின்றதா? இல்லை. சிக்கல் இல்லை, ஏனெனில் ஆங்கிலேயர் தமது மொழியினை தொன்மையானது எனக் கூறியதேயில்லை.

அடுத்து சமற்கிரதத்தினை (தெய்வ பாசை) எடுப்போம்.

| | | | |
|---|---|---|---|
| 9 | = நவம் | 10 | = தசம் |
| 90 | = நவதி | 100 | = சதம் |
| 900 | = நவசதம் | 1000 | = சகஸ்ரம் |

உரோமன் எண் முறை பொருந்துகின்றதா? இல்லை. அவ்வளவுதான் சமற்கிரதத்தின் தொன்மை.

இப்போது தமிழினைப் பார்ப்போம்.

ஏழு, எட்டு அடுத்தது ஒன்பது (IX)

எழுபது, எண்பது அடுத்தது தொண்ணூறு (XC)

அச்சொட்டாகப் பொருந்துகின்றதா? ஆம். தமிழ் தொன்மையானது. இதனையே தொல்காப்பியம் “ ‘தொண்’டு தலையிட்ட பத்துக்குறை” என்கின்றது {தொள் என்ற தொல்காப்பியச் சொல்லே இன்று ஒன்பது எனப்படுகின்றது. தொள் – தொண்டு – தொன்பது ஒன்பது}. சரி, உரோமன் எண்கள் பழமையானவை என மேலே பார்த்தோம். அதிலுள்ள ஒரே குறை என்னவென்றால் சுழியம் (0) என்ற ஒரு எண் அங்கில்லை (‘Nulla’ என்ற சொல் ஒன்றுமில்லை என்ற கருத்தில் அங்குள்ளபோதும், அது வரிசையாக ஒரு எண்ணாக அங்கு பயன்படுத்தப்படவில்லை). ஆனால் தமிழில் அந்த குறையுமில்லை, ஏனெனில் எமக்குத்தான் பாழ் (0) என்ற எண் உண்டே (“பாழ் என, கால் என, பாகு என...”: பரிபாடல்).

◆◆◆◆◆

⑤

# சுழியம் (0) (Zero) என்ற எண்ணை முதன்முதலில் அறிந்திருந்த தமிழர்கள்:

**0** (Zero) இன் பயன்பாட்டினை முதன்முதலில் அறிந்திருந்தவர்கள் யார் என்ற கேள்விக்கு அராபியர்கள், ஆரியப்பட்டர், பிரம்ம குப்தா எனப் பல பதில்களை நீங்கள் அறிந்திருக்கக்கூடும். இவர்கள் எல்லோருக்கும் முன்னரே தமிழர்கள் அந்த ‘0’ எண்ணினை அறிந்திருந்தார்கள் என்றால் நீங்கள் வியப்படையக்கூடும். முதலில் பூச்சியம், சூனியம் என்பன வடமொழிச் சொற்கள் (தமிழல்ல). அதற்கான தமிழ்ச்சொல் சுழியம்/பாழ் ஆகும். இங்கு நாங்கள் கவனத்தில் எடுக்கப்போகும் சொல் ‘பாழ்’ என்ற தமிழ்ச்சொல்லே ஆகும். பொதுவாக இன்றும் பேச்சு வழக்கில் “பாழாய்ப் போச்சுது” என்பது ‘ஒன்றுமில்லாமல் போய்விட்டது’ என்பதனைக் குறிக்கும். அதேபோன்று ‘பாழ் நிலம்’, ‘பாழ் கிணறு’ என்ற சொற் தொடர்களையும் கேள்விப்பட்டிருப்பீர்கள். இங்கெல்லாம் பாழ் = ஒன்றுமில்லை/சுழியம் என்ற பொருளிலேயே பயன்படுத்தப்படுகின்றது. “பாழாய்ப் போக” என்ற வஞ்சினச் சொல் இன்றும் வழக்கில் உள்ளது. எனவேதான் ‘0’ என்ற எண்ணைக் குறிக்க முதன்முதலில் பாழ் என்ற தமிழ்ச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது என்கின்றார்கள். இதற்கான சான்று பரிபாடலிலேயே உள்ளது (பின்னர் பார்ப்போம்).

முதலில் ‘சுழியம்’ என்ற கருத்தாக்கமானது சிந்துவெளி நாகரிகத்திலேயே உள்ளது என மா. சோ. விக்டர் என்ற தமிழ் அறிஞர் பின்வருமாறு கூறுகின்றார்.

> “சிந்து வெளி மக்களின் எண்களை ஆய்வு செய்தோர், ஒன்று முதல் பத்து வரையிலான எண்களின் வரி வடிவங்களைக் கண்டுபிடித்துள்ளனர். அவைகளில், பாழ் எனப்படும் வெற்றெண்ணைப் பற்றிய செய்திகள் தெளிவாக இல்லை. பத்து என்ற இலக்கத்தை, இரு அரைவட்டங்களாகக் காட்டியுள்ள சிந்துவெளி மக்கள் அவற்றை மேல் கீழாகப் பொருத்தும் போது 0 என்ற வரிவடிவம் கிடைத்ததைப் பற்றியும் அறிந்திருக்க வேண்டும். சிந்துவெளி எண்ணின் வரிவடிவமே, 0 என்ற பாழ் எண்ணுக்கு மூலமானதாக இருந்திருக்க வேண்டும். சிந்துவெளி மக்களின் 1 முதல் 10 வரையிலான எண்களை, தமிழ் எண்களாகவே கொள்ளலாம்”

மேலுள்ள விக்டர் ஐயாவின் கூற்றில் உண்மையுள்ளது. என்றாலும் இதே கருத்து கிரேக்க நாகரிகம், மெசப்பெத்தோமிய நாகரிகம் என்பவற்றிற்கும் பொருந்தும். உயர் கட்டிடங்கள் எழுப்பப்படுவதற்கு சுழியம்/ஒன்றுமில்லை என்ற கருதுகோள் தேவை என்பது அறிஞர்கள் கருத்து. என்ற போதிலும் இங்கெல்லாம் 0 என்பது ஒரு எண்ணாகக் கருதப்படவில்லை (ஒன்றுமில்லை என்ற கருத்தாகவேயுள்ளது, வரிசையாக 0,1,2,3... என எண்ணாக இல்லை). இதனாலேயே சுழியம் என்ற எண்ணைக் கண்டுபிடித்த பெருமை ஆரியப்பட்டர் / பிரம்மகுப்தா விற்கு செல்லுகின்றது.

ஆரியப்பட்டர் காலம் – பொது ஆண்டு 476-550 (CE 476 – 550).

பிரம்மகுப்தா காலம் – பொது ஆண்டு 598-668 Brahmagupta (598 CE, died 668 CE).

இவர்களுக்கு முன்னரே பொது ஆண்டு 458 ‘லோக விபகா’ எனும் சமணநூல் 0 இனைக் கண்டறிந்து கூறியது (CE 458). இது சமணநூல் என்பதால் பின்நாட்களில் கண்டுகொள்ளப்படவில்லை.

மேற்கூறிய மூன்றிற்கும் காலத்தால் முற்பட்டது பரிபாடல். சங்க கால எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான பரிபாடல் பொது ஆண்டிற்கு முற்பட்டது என்பது பொதுவான அறிஞர்களின் கருத்து. {இங்கு பேரா. சிவத்தம்பி, பேரா. அரசு, சுபவீ ஐயா போன்றோர் சங்ககாலம் முடிவுற்ற பின்னரே பரிபாடல், கலித்தொகை என்பன தோற்றுவிக்கப்பட்டதாகக் கூறுவார்கள். நானும் அவ்வாறே கருதுகின்றேன்}. எனவே எவ்வாறு எனினும் பரிபாடல் ஆரியப்பட்டர், பிரம்மகுப்தா, லோக விபகா என்பவற்றுக்கு காலத்தால் முந்தியது. அத்தகைய பரிபாடல் பின்வருமாறு கூறுகின்றது.

> “பாழ் என, கால் என, பாகு என, ஒன்று என,
> இரண்டு என, மூன்று என, நான்கு என, ஐந்து என,
> ஆறு என, ஏழு என, எட்டு எனத், தொண்டு என
> நால்வகை ஊழி எண் நவிற்றும் சிறப்பினை”
> [பரிபாடல் 3 – பெட்டன் நாகனார்]

இப் பாடலில் பாழ் (0), கால், அரை, 1,2... என இன்றைய ஒழுங்கில் அமைந்துள்ளதனைக் காண்க. எனவேதான் ‘0’ இனைக் கண்டுபிடித்த பெருமை தமிழர்களையே சேரும். பரிபாடலுக்கு முன்னரே தமிழர்களிடம் பாழ் என்ற சொல் புழக்கத்தில் இருந்திருக்கும். எவ்வாறாயினும் பரிபாடல் முதன்மையான சான்றாகும்.

இந்த பாழ் என்ற சொல்லானது பிற்காலத்தில் பூழ் எனத் திரிபுற்றது. இதிலிருந்தே புழுதி (மண்) என்ற சொல்லும் தோன்றிற்று. பின்வரும் கம்பராமாயணப் பாடலைப் பாருங்கள்.

"ஆழி சூழ் உலகம் எல்லாம்
பரதனே ஆள, நீ போய்த்
தாழ் இருஞ் சடைகள் தாங்கி,
தாங்க அருந் தவம் மேற்கொண்டு,
பூழி வெங் கானம் நண்ணி,
புண்ணியத் துறைகள் ஆடி,
ஏழ் – இரண்டு ஆண்டின் வா..."

{இங்கு 'பூழி வெங் கானம் = புழுதி நிறைந்த கொடிய காட்டை'}. இதிலிருந்துதான் புழுதியாப் போச்சுது என்றால் ஒன்றுமில்லாமல் போய்விட்டது எனவும், பின் எல்லாம் மண்ணாய்ப் போய்விட்டது (புயலால் வாழை மரமெல்லாம் மண்ணாய்ப் போச்சு) போன்ற சொற்தொடர்கள் சுழியத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றது. இத்தகைய 'பூழ்' என்ற மருவிய சொல்லையே வடமொழி பூச்சியமாக்கியது. 'பூச்சியம்' என்ற வடசொல்லுக்கு வேர்ச்சொல்லோ அல்லது மூலமோ அங்கில்லை. பின்னர் தமிழின் பாழ்/சுழியம் என்ற தமிழ்ச் சொற்கள் மறைக்கப்பட்டு பூச்சியம் என்ற வடமொழிச் சொல்லினையே தமிழர்களும் ஏற்றுக்கொள்ள வைக்கப்பட்டனர்கள்.

பார்த்தீர்களா! பாழ் என்ற ஒரு சொல்லினை இழந்ததால் எவ்வளவு பெரிய வரலாற்றையும் (0 கண்டுபிடிப்பு) இழந்துள்ளோம் எனறு!

"தமிழ்ச் சொற்களை மீட்போம், வடமொழி தவிர்ப்போம்"

◆◆◆◆◆

⑥

# 'CHESS' விளையாட்டின் தோற்றமும், அதற்கான தமிழ்ப் பெயரும்

Chess இனை 'சதுரங்கம்' என அழைக்கின்றோம்.

சதுரங்கம் = சதுர் (சதுரம்) + அங்கம்.

இங்குள்ள சதுர், அங்கம் என்பன தமிழ்ச் சொற்களல்ல, அவை வடமொழிச் சொற்கள். சதுரத்திற்கான தமிழ்ச்சொல் 'சம நாற்கரம்' / 'சதுக்கம்' என்பதாகும். இங்குள்ள 'அங்கம்' என்ற சொல்லும் வடமொழியே. அங்கத்திற்கு நிகரான தமிழ்ச் சொற்களாக கூறு, பகுதி என்பவற்றைக் கூறலாம். எனவே சதுர்+அங்கம் (=சதுரங்கம்) ஆகிய இரு சொற்களுமே தமிழல்லாதபோது, சதுரங்கம் எவ்வாறு தமிழாகும்.

தொல்காப்பியம் கூறும் பின்வரும் பாடலைப் பாருங்கள்.

“வல் என் கிளவி தொழிற்பெயர் இயற்றே.
நாயும் பலகையும் வரூஉம் காலை
ஆவயின் உகரம் கெடுதலும் உரித்தே
உகரம் கெடு வழி அகரம் நிலையும்”

[எழுத்ததிகாரம்: புள்ளி மயங்கியல் 78–79]

இங்கு ‘வல்லு’ எனக் குறிப்பிடப்படுவது ஒரு வகையான Chess ஆட்டமே {இன்றைய ஆட்டமானது பல கட்டங்களைத் தாண்டியே இன்றைய நிலையிலுள்ளது}. ‘வல்’ என்பது நட/செல் {move} என்பது போன்றதோர் தொழில்பெயர்.

“கொழுங் குடி போகிய பெரும் பாழ் மன்றத்து,
நரை மூதாளர் அதிர் தலை இறக்கி,
கவை மனத்து இருத்தும் வல்லு வனப்பு அழிய,
வரி நிறச் சிதலை அரித்தலின்”

[அகநானூறு377]

இப் பாடலில் முதியவர் வல்லு ஆடுவர். ஊரின் பொதுமன்றத்தில் வல்லு விளையாடுவதற்கு அமைக்கப்பட்டிருந்த பலகையைக் கறையான் அரித்துவிட்டதாம்’ என்ற செய்தி கூறப்பட்டுள்ளது.

கலித்தொகை 94 வது பாடலில் {**“வல்லுப் பலகை எடுத்து நிறுத்தன்ன கல்லாக் குறள!”**} கூனி ஒருத்தியைக் குறளன் ஒருவன் தன் ஆசைக்கு இணங்கும்படி வற்புறுத்துகிறான். இணங்காத கூனி அந்தக் குறளனை வல்லுப் பலகையை நிறுத்தி வைத்திருப்பது போல் இருக்கிறான் என்று குறிப்பிடுகிறாள். இதனால் வல்லுப் பலகையானது சுமார் மூன்றடி உயரம் இருக்கும் என்பதை உணரமுடிகிறது.

‘வல்ல நாய்’ எனப்பட்ட வல்லுக்காயின் அளவு பருவ மகள் முலை அளவினது என்று குற்றாலக் குறவஞ்சி நூல் குறிப்பிடுகிறது {“வல்லை நிகர்முலை”}. மேலுள்ள செய்திகளை எல்லாம் தொகுத்துப் பார்த்தால், Chess ஆட்டத்தின் முன்னோடியே ‘வல்லு’ (வல்லாட்டம்) என்பது தெளிவாகும். இது பல வடிவங்களில் விளையாடப்பட்டு வந்திருக்கின்றது. அதன் எஞ்சிய ஒரு வடிவமே இன்றும் ஊர்களில் உயிர்ப்புடனுள்ள ஆடுபுலி ஆட்டமாகும்.

இவ் விளையாட்டினை அறிமுகப்படுத்திய பெருமையினை எல்லோரும் குப்தர் காலத்தின் கிழக்கிந்தியாவிற்கே கொடுக்கின்றார்கள். இவர்கள் கூறுவது பொது ஆண்டு (கி.பி-CE 6th cent) ஆறாம் நூற்றாண்டையேயாகும். அக் காலப்பகுதிக்குப்

பல நூற்றாண்டுகளிற்கு முன்னரே, தமிழர்களிடம் வல்லு காணப்பட்டதனைச் சங்க இலக்கியங்கள், தொல்காப்பியம், கீழடி ஆய்வுகள் என்பன தெளிவாகக் காட்டுகின்றன. எனவே வல்லாட்டத்தினை அறிமுகப்படுத்தியது யார் என்பதனை உங்களின் முடிவிற்கே விட்டுவிடுகின்றேன்.

குறிப்பு – இன்றைய ஆட்டமானது 1945 இற்கு பின்னரே (World Chess Championship 1948) இன்றைய வடிவத்தினை எடுக்கின்றது. அதன் முன்னோடி எமது வல்லு.

Chess = வல்லு/வல்லாட்டம் ('சதுரங்கம்' தமிழல்ல)

Chess board = வல்லுப் பலகை

Chess pieces = வல்லநாய் / வல்லுக்காய்(கள்).

◆◆◆◆◆

⑦

## பல்லி சொல்லுதலும் பலன்களும்

**பொ**துவாகவே தமிழர்களில் பெரும்பான்மையானோர் பல்லி சொன்னால் (ஓசை எழுப்பினால்) பஞ்சாங்கம் பார்ப்பார்கள் அல்லது ஏதாவது ஒரு பலன் சொல்லுவார்கள். அதேபோன்று எங்காவது வெளியில் புறப்படத் தயாராகும்போது பல்லி சொன்னால், தமது பயணத்தைத் தள்ளிப்போடுவார்கள். இவையெல்லாம் பார்ப்பனர்களால் தமிழர்களிற்கு இடையில் மதச் சாயம் பூசிச்செய்யப்பட்ட சூழ்ச்சிகளாகும். இவ்வாறு பஞ்சாங்கம்,நாள், நட்சத்திரம் பார்ப்பதாலேயே அவர்களுக்கு பார்ப்பான் (பஞ்சாங்கம் பார்ப்பான்) என்று பெயரே வைக்கப்பட்டது. பஞ்சாங்கம் என்பது அன்றைய நிலவின் சுழற்சியை அடிப்படையாகக் கொண்ட ஒருவகை நாட்காட்டியே. அதில் பலன்கள், நல்லநாள், நல்லநேரம் பார்ப்பது எல்லாம் மூடநம்பிக்கையே. இதனைப் பழங்காலத் தமிழர் நம்பவில்லை என்பதற்குப் பின்வரும் தமிழ் பழமொழியே சான்று.

"கெவிலி சொல்ற பல்லி கழனி பானையில விழுந்துச்சாம்"

{பொருள் – பல்லிக்கே தனக்கு என்ன நடக்கப்போகிறது எனத்தெரியாமல் கழனி பானையில் விழுந்து இறக்கிறது, அதுவா நமக்கு அடுத்து என்ன நடக்கப்போகிறது எனச் சொல்லப்போகிறது}. இதனையே சிலர் "அறப்படித்த பல்லி கூழ்ப்பானைக்குள் வீழ்ந்ததாம்" என்றும் சொல்வார்கள்.

சங்ககாலத்தில் பல்லி சொல்லுதல் பற்றிய பாடல் ஒன்றினைப் ‘‘பாலை பாடிய பெருங்கடுங்கோ’’ எனும் புலவர் பாடியுள்ளார். அதன்படி பொருள் தேடிப்போன தலைவனின் பிரிவால் வாடியிருக்கும் தலைவியிற்குத் தோழி ஆறுதல் கூறுகிறாள். அதில் பல்லி சொன்னால் தலைவன் வந்துவிடுவான் என நம்பிக்கை ஊட்டுகிறாள். அதாவது ஆண் பல்லி, பெண் பல்லி மீது காமுற்று ஓசை எழுப்பும்போது கள்ளிக் காட்டினூடாக (பாலை) பயணிக்கும் தலைவன் அதனைக் கேட்டு, ஆண் பல்லியே பெண் பல்லி மீது இவ்வளவு அன்புற்று ஒலி எழுப்புகிறதே, அப்போது நான் எவ்வளவு அன்பு செலுத்தவேண்டும் என காமுற்று பயணத்தைக் கைவிட்டு வீடு திரும்பிவிடுவான் என நம்பிக்கை ஊட்டுகிறாள்.

இவ்வாறு இயற்கையோடு ஒன்றியிருந்த ஒரு சங்ககால நம்பிக்கையினையே பணம் பண்ணுவதற்காகப் பார்ப்பனர்கள் மாற்றி தமிழரிடம் பஞ்சாங்கம், பலன்கள் எனத் தலையில் கட்டியுள்ளனர். இனிமேல் பல்லி சொல்லும்போது நீங்கள் யோசித்தால், அது சங்ககாலத் தமிழரின் யோசனையாக (பல்லியின் காதல் மேலான அழுக்காறு) மட்டுமே இருக்கட்டும். இனி பல்லி சொன்னால் பஞ்சாங்கத்தைப் புரட்ட வேண்டாம், வேண்டுமானால் பஞ் சணையினைப் புரட்டுங்கள்.

◆◆◆◆◆

⑧

## ‘‘காக்கை கரைந்தால் விருந்தினர்கள் வருவார்கள்’’ பழந்தமிழ் அறிவுப்பழமொழி

**ஊ**ரில் வாழும்போது காகம் கரைந்தால் உடனே பாட்டி / பாட்டன் ‘‘யாரோ வீட்டிற்கு வரப்போகினம்’’ என்பர், அப்போது ஏன் அவ்வாறு கூறுகிறார்கள் என விளங்குவதில்லை. இது வெறும் மூடநம்பிக்கையன்று, மாறாக இது ஒரு பழந்தமிழ் அறிவியல். சங்க காலத்தில் தமிழர் கடல் வாணிபத்தில் கொடிகட்டிப் பறந்தவர்கள் என்பது அறிந்ததே. அவ்வாறு அவர்கள் கடற்பயணம் மேற்கொள்ளும்போது அவர்களிற்கு உறுதுணையாக இரு உயிரினங்கள் இருந்தன. ஆமையானது நீரோட்டத்தை அறிந்து செல்வதனால் அது ஒரு வழிகாட்டியாகவும், காகமானது கடலில் புயல் போன்ற இன்னல்களால் நடுக்கடலிற்கு அடித்துச் செல்லப்படும் போது பின்பு திசையறிந்து கரை திரும்புவதற்கு உதவும் திசையறி கருவியாகவும் பயன்பட்டன (ஆமை = Navigator, காகம் = Compass).

பறவைகளுக்குத் திசையறியும் ஆற்றல் உண்டு. எனவேதான் சில காகங்களை ஒரு கூட்டிலடைத்து கடற்பயணத்தின் போது வணிகர்கள் எடுத்துச் செல்வார்கள். பின்பு நடுக்கடலில் மாட்டிக் கொண்டு திசையறிய முடியாமல் தடுமாறும்போது; காகங்களை ஒவ்வொன்றாக விடுவித்து, அவை பறக்கும் திசைகளை அடிப்படையாகக் கொண்டு கரையினைக் கணித்துத் தரைக்குத் திரும்புவார்கள். அப்போது அக்காகங்கள் கரை திரும்பியவுடன் கரையும் (கத்தும்), அதனைத் தொடர்ந்து அந்த வணிகர்களும் கரை திரும்புவார்கள். "இதுதான் காக்கை கரைந்தால் விருந்தினர் வருவார்கள்" என்று பாட்டி சொன்னதன் பொருள்.

காக்கை பாடினியார் நச்செள்ளையார் கடைச்சங்க காலப் பெண்பால் புலவர்களில் ஒருவர். சங்கநூல் தொகுப்பில் இவரது பாடல்கள் 12 உள்ளன. இவரது பாடல் (குறுந்தொகை 210) வருமாறு.

"திண்தேர் நள்ளி கானத்து அண்டர்
பல்ஆ பயந்த நெய்யின் தொண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு
எழுகலத்து ஏந்தினும் சிறிது – என்தோழி
பெருந்தோள் நெகிழ்ந்த செல்லற்கு
விருந்து வரக் கரைந்த காக்கையது பலியே"

(பொருள் தேடிக்கொண்டு தலைவன் திரும்பிவிட்டான். நான் திரும்புவரையில் தலைவியை நன்கு ஆற்றுவித்தாய் என்று தோழியைப் பாராட்டினான். அதற்குத் தோழி சொல்கிறாள். காக்கை விருந்து வரப்போவதை அறிவிக்கும் அறிகுறியாகக் கரையும். இங்குக் காக்கை ஒவ்வொரு நாளும் கரைந்தது. அதைக் காட்டி இதோ வந்துவிடுவார் என்று கூறித் தலைவியைத் தேற்றி வந்தேன். உண்மையில் நீ அந்தக் காக்கையைத்தான் பாராட்ட வேண்டும். பாராட்டும் முகத்தான் அதற்கு விருந்தாகப் பலியுணவு தரவேண்டும்)

மேலேயுள்ள பாடலின் (பொருள் விளக்கத்திலும்) இறுதியில் காக்கைகளுக்கு உணவு வைக்கும் பழக்கத்தின் அடிப்படை தெரிகிறதா? பிற்காலத்தில் தமிழருக்கு மதம் பிடித்த பின்பு, இப் பழக்கமே சனீசுவரனிற்கு உணவு படைப்பதாகவும், இறந்தோரிற்கு பிதிர்க்கடன் நிறைவேற்றுவதாகவும் மூட நம்பிக்கைகளாக மாறின.

ஜெர்மன் மற்றும் ஸ்வீடன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் பறவைகள் எப்படி திசையைச் சரியாகக் கண்டறிகின்றன என்பதைக் கண்டறிந்திருக்கிறார்கள். இவர்கள் ஜீப்ரா பின்ச் (Zebra Finche) மற்றும் யூரோப்பியன் ராபின் (European Robin) என்ற இரண்டு வகை பறவைகளில் நடத்திய தொடர்ச்சியான

ஆராய்ச்சிகளுக்குப் பின்னர் ‘Cry4’ என்ற புரதம்தான் அவைகளுக்குத் திசையைக் கண்டறிவதற்கு உதவியாக இருக்கிறது என்பதை நிரூபித்திருக்கிறார்கள். கண்களின் ரெட்டினா பகுதியில் இருக்கும் இந்த Cry4 புரதம் கிரிப்டோகுரோம் என்ற வகையைச் சேர்ந்தது, இது தாவர வகைகள் மற்றும் விலங்குகளில் காணப்படும் வழக்கமான புரதமாக இருக்கிறது. இந்தப் புரதம் ஒளி உணர் தன்மையைக் கொண்டிருக்கிறது. இந்தப் புரதம் கண்களில் இருப்பதால் பறவைகளும் பார்வையின் மூலமாகவே பூமியின் காந்தப்புலத்தை அறிந்துகொள்ள உதவியாக இருக்கிறது.

இன்றைய அறிவியலை முற்று முழுதாகச் சங்ககாலத் தமிழர் புரிந்து வைத்திருந்தார்கள் என நான் இங்கு கூறவரவில்லை. மாறாகத் தமது பட்டறிவினூடாக இன்றைய அறிவியலின் அடிப்படைகளைக் கண்டறிந்து 2000 ஆண்டுகளுக்கு முன்னரே நமது முன்னோர்கள் பயன்படுத்தியுள்ளனர் என்றே கூறவருகின்றேன்.

◆◆◆◆◆

⑨

# திருக்குறளைத் திரிக்க முனையும் பார்ப்பனியம்

**உ**லகிற்கே அறத்தைக் கற்பித்த திருக்குறளானது தமிழ் உலகின் இணையில்லாப் படைப்பாகும். இத்தகைய பெருமை மிகு குறளினை மறைக்கும் / எதிர்க்கும் முயற்சியினைப் பார்ப்பனியமானது காலகாலமாக மேற்கொண்டு வருகின்றது. ‘கடவுள்’ என்ற சொல்லே இல்லாத திருக்குறளினை ‘கடவுள் வாழ்த்து’ என அதிகாரம் அமைத்து தொடங்குவதிலிருந்து இந்த அரசியல் தொடங்குகின்றது (அதிகாரங்கள் எல்லாம் பின்நாளில் வகுக்கப்பட்டதே). வள்ளுவன் குறிப்பிடுவது எல்லாம் இறைவன், தெய்வம் ஆகிய இரு சொற்களே. இங்கு ‘இறைவன்’ என்பது இறை (வரி) அறவிடும் தலைவனை / அரசனையே குறிக்கின்றது (மக்களை இறுக்குவதால் இறை). இங்கு இயற்கையோடு ஒன்றிய மூத்தோர் வழிபாடு, இயற்கை போன்றவற்றையே தெய்வம் என்பது குறிக்கும்.

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.” [குறள்50]

இங்கு மூத்தோர் வழிபாடே ஒரு வகையில் தெய்வமாகக் காட்டப்படுகின்றது. இத்தகைய இயற்கையோடு ஒன்றிய இறைவன், தெய்வம் என்பவற்றைப் பின்நாளில் கடவுள் வாழ்த்தாக்கியதே முதல் புரட்டு ஆகும்.

## பரிமேலழகரின் உரைப்பாயிர அரசியல்

திருக்குறள் குறிப்பிடும் அறத்துப்பாலில் 'அறம்' என்ற சொல் முதன்மையானது. அறம் என்ற சொல்லானது அறுத்தல் என்ற வினைச் சொல்லினை அடிப்படையாகக் கொண்ட ஒரு சொல்லாகும் (அறு+அம்=அறம்). எவற்றை அறுக்க (விட்டொழிக்க) வேண்டும். இதோ வள்ளுவனே கூறுகின்றார்.

"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்." [குறள்:35]

அதாவது அழுக்காறு (பொறாமை), அவா (பேராசை), வெகுளி (சினம்), இன்னாச்சொல் (கடுஞ்சொல்) ஆகிய நான்கையும் அறுப்பதே அறம் எனப்படும் என்கின்றார் வள்ளுவர்.

இன்னொரு இடத்தில் வள்ளுவன் "மனத்தின்கண் குற்றம் இல்லாது இருத்தலே அறவழியில் செல்லுதலாகும்" என்கின்றார். இதனையே பின்வரும் குறள் காட்டுகின்றது.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற" [குறள்:34]

மணிமேகலையும் அறத்திற்கு விளக்கம் கொடுக்கின்றார்.

"அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இதுகேள்! மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் இல்லது கண்டதில்"

இந்த 'அறம்' என்ற சொல்லுக்கு ஓரளவிற்குச் சரிநிகரான சொல்லாக கிரேக்கச் சொல்லான 'Ethics' காணப்படுகின்றது. 'தர்மம்' என்ற வடசொல்லுக்கு நிகராக அறத்தைக் கருதுவது தவறு, ஏனெனில் தர்மம் ஆட்களிற்கேற்ப வேறுபடும். அதாவது ஒரு வழக்கறிஞர் தனது கட்சிக்காரருக்காகப் பொய் சொல்லுவது தொழில் தர்மம் என்பார்கள். ஆனால், அது அறமாகாது. அறம் எப்பொழுதும் பொது நன்மை கருதியே காணப்படும். எமக்கு எது தேவையோ அதுவே தர்மமாகும் எனக் கூறுவதுபோல அறத்தை வளைக்க முடியாது. அதனால்தான் மனு சுமிர்தியினை (Manusmriti) மனுதர்மம், மனுநீதி என்றெல்லாம் அழைப்பார்கள். ஆனால் 'மனு அறம்' என அழைக்க அவர்களிற்கே நா கூசும் (அதேபோன்றே சனாதன தர்மமும்).

பரிமேலழகர் இத்தகைய சிறப்பு வாய்ந்த சொல்லான அறம் என்பதற்குப் பொருந்தா விளக்கம் கொடுக்கின்றார். பரிமேலழகர் தனது உரைப்பாயிரத்தில் "அறமாவது மனு முதலிய நூல்களில்

விதித்தன செய்தலும், விலக்கின ஒழித்தலும் ஆகும்'' என்கின்றார். அதாவது மனுதர்மத்தில் கூறப்பட்டவையே அறம் என வேண்டுமென்றே பொய் சொல்லுகின்றார். திருக்குறள் மனுதர்மத்திற்குக் காலத்தால் முற்பட்டது என்பது ஒரு புறமிருக்க; மறுபுறத்தே மனுதர்மத்திற்கும், குறள் விளக்கும் அறத்திற்குமிடையே மலைக்கும் மடுவிற்குமுள்ள வேறுபாடுகள் உண்டு. பிறப்பினடிப்படையிலான வர்ணாச்சிரம சாதிக் கோட்பாட்டினை வலியுறுத்தும் மனுநீதி எங்கே? பிறப்பொக்கும் எனப் பாடி பிறப்பிலடிப்படையிலான வேறுபாடுகளை அறவே களையும் குறள் எங்கே?

> ''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
> செய்தொழில் வேற்றுமை யான்'' [குறள் : 972]

அதுமட்டுமல்ல, கொல்லாமையினை வலியுறுத்தும் குறள் எங்கே?

> ''கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
> எல்லா உயிரும் தொழும்'' [குறள் : 260]

பார்ப்பனர்களை பசுக்களை கொன்று உண்ணுமாறு கூறும் மனுநீதி எங்கே?

> ''சிராத்தத்தில் வரிக்கப்பட்ட பார்ப்பனன், புலால் உண்ண மறுத்தால், 21 பிறவிகள் பசுவாய்ப் பிறப்பான்''.
> [மனுநீதி சுலோகம்:35].

> ''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
> தொழுதுண்டு பின்செல் பவர்'' [குறள் : 1039]

என வேளாண்மையினைப் (கமத்தினை) புகழும் குறள் எங்கே? பயிர் செய்தலைப் பாவகரமாகப் பார்க்கும் மனுநீதி எங்கே?

இவ்வாறு திருக்குறள் குறிப்பிடும் அறத்திற்கு முற்றிலும் முரணாக மனுநீதி காணப்பட, எவ்வாறு மனுநீதி முதலிய நூல்கள் விதித்ததுதான் அறம் என பரிமேலழகர் கூறுகின்றார்? வேறு ஒன்றுமில்லை, அவருடைய பார்ப்பனச்சாதிப் பற்றே அவ்வாறு பச்சைப்பொய் சொல்ல வைத்தது. இந்த பரிமேலழகர் கக்கிய நஞ்சின் நீட்சியே இன்றைய நாகசாமியின் 'Tirukkural – An Abridgement of Shaastras' என்ற புத்தகம் ஆகும்.

நாகசாமி என்பவர் Tirukkural – An Abridgement of Shaastras என்றொரு (புத்தகத்தினை) புரட்டினை எழுதியுள்ளார். அதில் மனுதர்மம் முதலிய சமசுகிரத நூல்களின் பிழிவிலிருந்தே (சாரம்சம்) திருக்குறள் தோன்றியதாக வழமையான பார்ப்பனப் புரட்டினை கூறியுள்ளார். மனுதர்மம் காலத்தால் திருக்குறளிற்குப் பிற்பட்டது

என்று ஏற்கனவே அறிஞர்களால் சான்றுபடுத்தப்பட்டதனை அவர் கவனத்திற்கொள்ளவில்லை.

திருக்குறள் மீது பார்ப்பனர்களின் ஒவ்வாமை வரலாறு அறிந்ததே. "தீக் குறளை சென்று ஓதோம்" (கோள் சொல்லுதல் கூடாது) என்ற ஆண்டாள் பாடலுக்கு "திருக்குறளை ஓதவேண்டாம்" என வலியப் பொய் சொன்ன மூத்த சங்கரச்சாரியார் முதல் "முதல் பத்து குறள்களை மட்டுமே பயன்படுத்தலாம்" என்று சொன்ன செயேந்திர சங்கரச்சாரியார் ஈடாக இன்றைய நாகசாமியின் இப் புத்தகம் வரை இந்தத் தமிழ் வெறுப்பினைக் காணலாம். இப் புத்தகத்தின் பொய்மையினை உடைக்க சங்கரச்சாரியார் விரும்பும் முதல் பத்து குறள்களிலேயே சில குறள்களை முதலில் நாமும் அவர் விருப்பப்படியே எடுத்துக்கொள்வோம்.

மனுநீதி முதலான பார்ப்பனியச் சாத்திரங்கள் எல்லாவற்றுக்கும் அடிப்படை வர்ணாச்சிரமக் கோட்பாடே ஆகும். ரிக்வேத புருச சூத்திரத்தின் 10 வது சுலோகமான பிரம்மனின் படைப்புக் கோட்பாடே சாத்திரங்களின் அடிப்படை. இதன்படி சூத்திரர் காலிலிருந்தே பிறந்தவர்கள் எனக் கூறி தமிழர்களை இழிவுபடுத்துகின்றது ரிக்வேதம். இக் கருத்து தமிழ் மண்ணையும் வந்து சேர்ந்த காலத்திலேயே திருக்குறள் எழுதப்படுகின்றது. இப்போது முதல் பத்து குறள்களில் (பின்நாளில் கடவுள் வாழ்த்தாக்கப்பட்ட) குறள்களில் 7 குறள்களை எடுத்து, அதற்கு முனைவர் மறைமலை இலக்குவனார் கொடுத்த விளக்கங்களையே துணையாகக் கொள்ளப்போகின்றேன். இங்கு நீங்கள் கவனிக்கவேண்டிய விடயம் பின்வரும் 7 குறள்களிலும் காலின் பெருமையினைப் பேசியே வள்ளுவன் ரிக்வேத புருச சூத்திரத்திற்குப் பதிலடி கொடுக்கின்றார்.

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்" [குறள் 2]

{தூய அறிவுடைய ஆசிரியரின் தாளை – (காலை) வணங்காவிட்டால் கற்றதனால் பயன் ஒன்றும் இல்லை என்கிறார்.}

"மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்" [குறள் 3]

{மாண்பு உடையவர்களின் – சிறப்பு உடையவர்களின் – அடிகளைப் பொருந்தி வாழ்பவர்களே நீடு வாழ்பவர்களாம் எனவே தலையில் பிறந்ததாக ஆணவம் கொள்ளாமல் காலை வணங்க வேண்டும்}

"வேண்டுதல் வேண்டாமை யில்லா னடிசேர்ந்தார்க்கு
யாண்டு மிடும்பை மில" [குறள் 4]

{துன்பம் இல்லாது வாழ என்ன செய்ய வேண்டும் என்கிறார்? விருப்பு வெறுப்புடன் எதையும் – யாரையும் பார்க்காத – அணுகாத கண்ணோட்டம் உடைய விருப்பு வெறுப்பு அற்றவர்களின் அடியை (பாதம்) வணங்க வேண்டும்}

"தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது" [குறள் 7]

{மனத்துன்பத்தை யாரால் போக்க முடியும்? ஒப்பு நோக்குவதற்கு இணையற்ற ஆற்றோர் திருவடிகளைப் பற்றினால் அன்றி மனக்கவலைகளை மாற்ற இயலாது எனத் திருவள்ளுவர்}

"அறவாழி யந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது" [குறள் 8]

{பொருட்கடலிலும் இன்பக்கடலிலும் திளைக்க வேண்டும் என்றால் அழகிய பண்புநலன்கள் உடைய அறவோர்களின் தாள் (கால்) பணிதல் வேண்டும் என்கிறார்} (அந்தணர் = அறவோர், பார்ப்பனரல்ல)}

தலையில் பிறந்ததால் உயர்வு என்போரை அடிசாய்க்கும் வகையில் திருவள்ளுவர் மற்றொரு கருத்தைக் கூறுகிறார். என்னவென்று?

"கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
தாளை வணங்காத் தலை" [குறள் 9]

{எண்ணிப் போற்றும் குணம் உடையவனின் தாளை வணங்காத தலை பயன் அற்றது}

"பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்" [குறள் 10]

{நல்ல பண்புகளை உறைவிடமாகக் கொண்டவர்கள் – கல்விச் செல்வம் தங்கியிருப்பவர்கள் – அதிகார ஆளுமை தங்கியிருப்பவர்கள் ஆகிய இறைமையாளர்களின் அல்லது இறைவனின் அடி சேர்ந்தவர்களால் மட்டும் அவர்கள் வழிகாட்டுதலில் துன்பக் கடலைக் கடக்கமுடியும்}.

பார்த்தீர்களா! வள்ளுவன் எவ்வாறு முதல் அதிகாரத்திலேயே ரிக்வேத புருச சூத்திர படைப்புக் கோட்பாட்டினை காலின் பெருமை பேசி தகர்த்து எறிந்துள்ளார். இங்கு வள்ளுவன் காலின் பெருமைகளைப் பேசி சூத்திரர்களை உயர்ந்தவராகக் காட்ட

முயல்கின்றார் என்பதல்ல, மாறாக முள்ளை முள்ளால் எடுப்பதுபோல கால்களின் பெருமையினை உவமையாகக் கையாண்டு புருச சூத்திர படைப்புக் கோட்பாட்டினைத் தகர்த்து எறிகின்றார். இவை எல்லாவற்றுக்கும் முத்தாய்ப்பாக அமைந்த குறள் வருமாறு.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்" (குறள் 972)

மேற்கூறிய குறளில் 'எல்லா உயிர்க்கும் பிறப்பு ஒரு தன்மையானதே' என வர்ணாச்சிரமக் கோட்பாட்டினையே தகர்த்து எறிகின்றார்.

"அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று" (குறள் 259)

என்ற குறளின் மூலம் பார்ப்பனச் சடங்கான வேள்வியினையே (யாகம்) ஏளனம் செய்கின்றார் வள்ளுவன்.

"மறப்பினும் ஓத்துக் கொளல்ஆகும் பார்ப்பான்
பிறப்பு ஒழுக்கம் குன்றக் கெடும்" (குறள் 134)

என்ற குறள் வேறு பார்ப்பனர் என்ற சொல்லையே பயன்படுத்திச் சாடுகின்றார் வள்ளுவர்.

இவ்வாறு குறள்களை அடுக்கிக்கொண்டே போகலாம், விரிவஞ்சி நிறுத்துகின்றேன். இத்தகைய முழுவதும் பார்ப்பன – ஆரிய எதிர்ப்பாக அமைந்த திருக்குறளை 'ஆரிய சாத்திரங்களின் சாரம்' என நூல் எழுதுபவர்களை என்ன சொல்லுவது!


"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு" (குறள் : 423)


■



எமது மொழியின் பெயர் தமிழ் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. ஆனால் ஏன் அவ்வாறு பெயர் பெற்றது? எப்போது முதல் அப்பெயர் பெற்றது? என்பது பலருக்கும் தெரிந்திருக்காது. எம்மிடையே சாதி இருப்பது எல்லோருக்கும் தெரிந்ததே. ஆனால் எப்போது முதல்? என்பது பலருக்கும் தெரிந்திருக்காது. இவ்வாறு பொது மக்களிடையே தெரிந்தும் தெரியாமலிருக்கும் சிலவற்றையாவது தெளிவுபடுத்துவதே இந்த நூலின் நோக்கமாகும்.





மக்கள் கலை பண்பாட்டுக் களம் வெளியீடு

அட்டை வடிவமைப்பு: நிக்சன்